விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 06 வியாழக்கிழமை (18.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.con
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சரணடைந்தவர்கள் தொடர்பில்

# இராணுவத்திடம் ஆவணம் உண்டு

## அனைத்தையும் சமர்ப்பிக்குமாறு முல்லை நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பான ஆவணத்தை இராணுவத்தின் முல்லைத்தீவு 58ஆம் படையணி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி 58ஆம் இராணுவ படையணி அதிகாரிகளிடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்கள் அந்தப் படையணியின் முகாம் அலுவலகத்தில் இருப்பதாக நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ளது. அதனையடுத்தே, அந்த பெயர்ப்பட்டியல் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(செய்திக்கு 09ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த விக்கிரமதுங்க கொலை;

## சந்தேக நபர்கள் இருவரின் மாதிரி உருவங்கள் வெளியீடு



(கொழும்பு)

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு பேரின் மாதிரி உரு 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணத்தை வழங்கியவர்கள் யார்?

### விரைவில் அம்பலப்படுத்துவார் பொன்சேகா

(கொழும்பு)

ஆட்சியைக்கைப்பற்றிக்கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியவர்கள் மற்றும் அந்தப் பணத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான முக்கிய இரகசியங்களை பீல்ட மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில அம்பலப்படுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மின்சாரக்கதிரையை காண்பித்து அரசியல் மேற்கொண்டவர்கள் இன்று இராணுவ வீரர்களுக்கு ஆபத்துள்ளதாக தெரிவித்து அரசியல் மேற்கொள்ள முனைகின்றனர்.

போர் குற்றங்கள் தொடர்பில் இலங்கைக்கு எவ்வித விசாரணைகளும் இல்லை. மனித உரிமை மீறல்கள் தொடர் 23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர் தரப்புடன் அன்றே இணங்கியிருந்தால் இன்று இத்தனை இழப்புக்கள் ஏற்பட்டிருக்காது

### கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழர் தரப்புடன் அன்று நாம் இணக்கப்பாட்டுடன் பயணித்திருந்தால், இன்று இத்தனை இழப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.



அதற்கு தெற்கின் சிங்களத் தலைவர்கள் அனைவரும் பொறுப்பு கூற வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாயக் கிழமை 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

### ஜேர்மன் அதிபருடனான சந்திப்பின் பின்னர் அறிக்கை



(கொழும்பு)

நான் உண்மையாகவே மிகவும் ஆரோக்கியமானதும் சிறப்பானதுமான சந்திப்பினை ஜேர்மனியினுடைய அதிபர் கலாநிதி அஞ்சலா மெர்கல் அவர்களுடன் நிறைவு செய்திருக்கின்றேன். பல ஆண்டுகளாக 24ஆம் பக்கம் பார்க்க....

## மார்ச்சில் ரணில் சீனா விஜயம்

(கொழும்பு)

சீனாவுடனான இருதரப்பு உறவைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பீஜிங்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சீனா மற்றும் இந்தியாவுடனான ஒப் 24ஆம் பக்கம் பார்க்க....

## யோஷிதவை பிணையில் விடுவிக்கும் நீதிமன்ற முயற்சிகளில் பின்னடைவு

### சட்டத்தரணியாக மகிந்தவும் மன்றில் சமுகம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷவை



கொழும்பு மேல் நீதிமன்றம் ஊடாக பிணையில் விடுவிக்க எடுத்த முயற்சி பின்னடைவு கண்டுள்ளது.

சி.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளூராட்சி தேர்தல் இவ்வருடம் இல்லை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இந்த வருடம் நடத்த முடியாது என, 23ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் மீண்டும் நீதிபதியாக வேண்டும்

– கம்பவாரிதி



உள்ளே...

# ஐ.தே.கவை தூக்கி நிறுத்த அரசில் இணையவில்லை!

## மகிந்த அமரவீர விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கி நிறுத்துவதற்காக அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் உரையாற்றுகையில்,

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கிய நிறுத்த சென்றவர்கள் என்று கூறுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கி பிடிக்க போவதில்லை. எம்மை அவதூறு செய்பவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அந்த கட்சியின் அரசாங்கம் ஒன்றை அமைக்க உதவக்கூடியவர்கள்.

எம்மை விமர்சிக்கும் நபர்கள் இரவு நேரத்தில் சிறிகொத்தவிற்கு சென்று தேசிய அரசாங்கம் தேவையில்லை, தற்போதுள்ள அமைச்சரவையை கலைத்து விட்டு, இணைந்து ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவோம் என்று யோசனை கூறிய தோடு அமைச்சு பதவிகளையும் கோருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நேசிப்பவர்கள் எனக் கூறும் இவர்கள், கட்சியை உண்மையில் நேசிப்பவர்களாக இருந்தால், அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை பற்றி அல்ல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பற்றியே பேச வேண்டும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# சகல மாகாணத்திற்கும் விஜயம் செய்யும் ரணில்

தேசிய அரசாங்கத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்து மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆராயப்படவுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் நேரடியாக சென்று ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பிரதமர் மதிப்பீடு செய்யவுள்ளார்.

இதன் முதல் கட்டமாக அண்மையில் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு பிரதமர் விஜயம் செய்துள்ளார்.

அடுத்த கட்டமாக தென் மாகாணத்திற்கு பிரதமர் விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும் இந்த விஜ யங்களின் போது பிரதமருடன் இணைந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# முதன்முறையாக பிணை கோரி பேறறிவாளன் மனுத்தாக்கல்

(சென்னை)



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சுமார் 25 ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் பேறறிவாளன் முதல் முறையாக பிணை வழங்கக் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள ஏழு பேரின் விடுதலை தொடர்பிலான வழக்கு விசாரணையின் போது, மத்திய அரசு விசாரணை செய்த வழக்கு என்பதால், மாநில அரசு மட்டும் விடுதலை செய்வது தொடர்பில் முடிவெடுக்க முடியாது என கூறப்பட்டதால் இவர்களின் விடுதலையில் சிக்கல் ஏற்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பேறறிவாளனின் தாயார் அற்புதம்மாள், வந்தால் விடுதலையாகிதான் வெளியே வருவேன் என 25 வருடமாக பிடிவாதமாக பிணைக்கு மறுப்பு தெரிவித்து வந்தான்.

நாங்களும் அவன் விடுதலையாகி விடுவான் என பார்த்துப் பார்த்து பல ஆண்டுகள் கடந்துவிட்டது. அறிவு இந்த வீட்டுக்கு எப்ப வருவான்னு அவனோட்ட அப்பா காத்திருக்கிறார். அதை நினைத்தே மன அழுத்தம் அதிகமாகி அவருக்கு உடல் நிலை மோசமாகிவிட்டது.

அதனால் கட்டாயப்படுத்தி பிணை வழங்ககோரி விண்ணப்பிக்குமாறு அவனை கேட்டுக் கொண்டோம். இவ்வளவு வருஷமும் எனது மகன் உறுதியாக இருந்தான். அதை கெடுத்துட்டோமேன்னு வருத்தமாவும் இருக்கு.

அவனை வீட்டுக்கு கூட்டி வந்து பார்க்கணும் ஒரு தாயான எனக்கு ஆசையாகவுள்ளது என அற்புதம்மாள் தெரிவித்துள்ளார். (செ-11)

# யோஷித மற்றும் ஞானசார தேரரிடம் மகிந்த ராஜபக்ஷ நலம் விசாரிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோஷித ராஜபக்ஷவை சந்தித்ததோடு கலகொட அத்தே ஞானசார தேரரையும் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

இதன்போது பொது பல சேனாவின் பொதுச செயலாளர் ஞானசார தேரரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்ததாக சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த யோஷிதவின் பிணை மனு ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் அங் கிருந்து வெளியேறிய மகிந்த நேராக கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு தனது புதல்வன் யோஷித்த ராஜபக்ஷ உள்ளிட்டோரை முதலில் சந்தித்த மகிந்த ராஜபக்ஷ அவர்களின் சுகநலன் தொடர்பில் கேட்டறிந்துள்ளார். அதன் பின்னர் சிறைச்சாலைக்கு மருத்துவமனைக்குச் சென்ற முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஞான சார தேரரையும் சந்தித்து அவரின் சுகநலம் விசாரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது. (செ-12)

# மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திராம்மடு சுவிஸ் கிராமத்திலிருந்து ஒரு தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை பகல் 11.45 மணியளவில் பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தோட்டமொன்றினுள் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ரி. 56 ரக துப்பாக்கி - 1, கைத் துப்பாக்கி - 1, துப்பாக்கி ரரைகள் - 30, ரைக்கூடு - 1 என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)


# இலங்கை நூலகச் சங்கம்

## நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 - 2016

## நேர்முகத்தேர்வு + Walk-in Interview

நூலகத் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1க்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் 20.02.2016 (சனிக்கிழமை) காலை 9.30 மணி - மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

**தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்

**அல்லது**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் மொழியில் திறமைச் சித்தியுடன் கணிதம்/எண்கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மொழி மூலம்:** தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
**கற்கைநெறிக் கட்டணம்:** ரூபா 16,000.00
விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

குறிப்பு:

இக்கற்கைநெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காத அடிப்படை தகைமையுள்ளவர்களும் மேற்படி நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் சமுகமளிக்க முடியும். விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 200.00 ஆகும்.

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- விவாகப்பதிவு அத்தாட்சிப் பத்திரம் (திருமணமான பெண்களுக்கு)
- கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
- சேவைக்காலச் சான்றிதழ் (பணிபுரிவோருக்கானது)

**கலாநிதி (திருமதி) க.சந்திரசேகர்**
**ஒருங்கிணைப்பாளர்/யாழ்.நிலையம்**
**இலங்கை நூலகச் சங்கம்.**

(3628)



# மக்கள் வங்கி அறிவித்தல்

எதிர்வரும் 20.02.2016, 21.02.2016 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த தங்கநகை ஏல விற்பனையானது தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. எனவே பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.12.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் காலை 8.30 மணி** தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 26.02.2016 | 27.02.2016 | யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | | |
| அச்சுவேலி | புத்தூர் | 26.02.2016 | 27.02.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி, கிளை |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | | |
| | கல்வியங்காடு | | | |
| பருத்தித்துறை | புலோலி | | | |
| ஊர்காவற்றுறை | .... | 26.02.2016 | 28.02.2016 | யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயம். |
| சுன்னாகம் | கோப்பாய் | | | |
| | அளவெட்டி | | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | | |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி, | 26.02.2016 | 28.02.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | | |
| நெல்லியடி | ..... | | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | | |
| | கைதடி | | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே:-021 222 2601, 021 222 8602**
**தொலைநகல்:-021 222 2602**

(சி-3774)

# கைது செய்யப்படுவதைத் தடுக்கக்கோரி பசில் ராஜபக்ஷ உச்ச நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

**மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இடைக் காலத் தடை உத்தரவு கோரி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.**

பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போலியான தகவல்களின் பிரகாரம் தன்னை மீண்டும் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திவிநெகும திணைக்களத்தின் நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்தார். சுமார் இரண்டரை மாத சிறைவாசத்தின் பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது அவருடைய அமைச்சில் இடம்பெற்ற பல்வேறு நிதிமோசடிகள் தொடர்பாக கடுவலை, பூகொட, கம்பஹா நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த வழக்குகள் காரணமாக தனது தனிப்பட்ட சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாக பசில் ராஜபக்ஷ உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



உண்மையைத் திரித்து தவறான தகவல்களின் அடிப்படையில் குறித்த வழக்குகளுக்காக தான் மீண்டும் கைது செய்யப்படும் நிலைக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே அவ்வாறு கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்குமாறு அவர் தனது மனுவில் உச்ச நீதிமன்றத்திடம் கோரிக்கை வைத்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், நிதிமோசடிகள் தொடர்பான பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சனத் விஜேவர்த்தன ஊடாக இந்த மனுவை பசில்ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ளார். (இ)

## அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத ஆறு மாணவர்கள் சிக்கினர்

### 20 பேர் தப்பியோட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத 6 மாணவர்கள் சிக்கிக் கொண்டனர். அத்துடன் 20 மாணவர்கள் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தேடுதல் நடவடிக்கையானது நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை நடைபெற்றது.

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இத் தேடுதல் நடவடிக்கையில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் 30 இற்கும் மேற்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள், 25 இற்கும் மேற்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் ஈடுபட்டனர்.

மேற்படி அச்செழு கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாதமாணவர்கள்தொடர்பாககிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இத் தேடுதல் நடவடிக்கை நடை பெற்றது.

6 மாணவர்கள் பிடிக்கப்பட்டு உடனடியாக அம் மாணவர்கள் கல்வி கற்று வரும் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர்.

20 மாணவர்கள் தொடர்பான தேடுதல்நடவடிக்கையும்நடைபெறவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-34)

## நடைபாதை வியாபாரத்தை ஒழிக்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

### பொருட்களைப் பறிமுதல் செய்து ஏலத்தில் விட்டு வருமானத்தை சபை நிதியில் சேர்த்துக்கொண்டது

நடைபாதைக்கு இடையூறான வகையில் விற்பனை செய்யப்பட்ட இளநீர், சோளன், பழங்கள் போன்றன நல்லூர் பிரதேச சபையால் கைப்பற்றப்பட்டதுடன் அப்பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டு வருமானம் சபை நிதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

கொக்குவில் சந்திப்பகுதியில் நடைபெற்று வந்த இளநீர், சோழன், பழங்கள் போன்ற நடைபாதை வியாபாரம் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அத்துடன் இவ்வியாபாரம் நடைபாதைக்கு இடையூறான முறையில் இடம் பெற்று வந்ததுடன் பாடசாலை மாணவர்களுக்கும் இடையூறு ஏற்படும் விதத்தில் நடைபெற்று வந்தது.

நடைபாதையில் இவ்வியாபாரம் இடம்பெற்று வந்ததால் போக்குவரத்து நெரிசலுக்கு காரணமாக அமைந்தது. இதனால் இதுதொடர்பாக நல்லூர் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்ட பின் பிரதேச சபையினால் இதுதொடர்பான வியாபாரிகளுக்கு இவ்விடத்தில் நடைபெற்று வருகின்ற நடைபாதை வியாபாரம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற அறிவித்தல் விடுக்கப்பட்டது.

ஆனால் பிரதேச சபை அறிவித்தல் விடுத்தும் அவ்விடத்தில் தொடர்ந்தும் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. அறிவித்தல் விடுத்தும் வியாபார நடவடிக்கை இடம்பெற்றது தொடர்பாக பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே கடந்த 14ஆம் திகதி அன்று அவ்விடத்திற்கு சென்ற நல்லூர் பிரதேச சபையினர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்கள் அனைத்தையும் பிரதேச சபையின் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். இதன்பின்னர் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு அப்பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டு அவ்வருமானம் சபை நிதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மேலும் நடைபாதையில் வியாபாரங்களை மேற்கொள்வோர் மீது இந்நடவடிக்கை தொடரும் என நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது. (இ-5-81)

## கைத்தொலைபேசி பற்றரிகள் வெடித்து நீதிமன்றச் சான்றுப் பொருட்கள் நாசம்

(சாவகச்சேரி-2)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்து சான்றுப் பொருட்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசிகளின் பற்றரிகள் வெடித்து ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் நீதிமன்ற சான்றுப்பொருட்கள் பல தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இடம் பெற்றது.

நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய 3கைத்தொலைபேசிகள் ஒன்றாக பொதியிடப்பட்டு நீதிமன்ற வளாகத்து சான்று பொருட்கள் பாதுகாப்பு அறையின் அலுமாரி ஒன்றினுள் வேறு பல சான்றுப் பொருட்கள் மத்தியில் வைக்கப்பட்டிருந்தன.

இக் கையடக்கத் தொலைபேசிகளின் பற்றரிகள் சத்தத்துடன் வெடித்ததுடன் தீ விபத்தும் ஏற்பட்டது. தீ விபத்து ஏற்பட்டவுடன் அங்கு கடமையாற்றும் அலுவலர்கள் உடனடியாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

இத் தீ விபத்தில் அதே அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப்பொருட்களும்அழிவடைந்துள்ளன.

நீதிமன்றத்தில் ஏற்பட்ட இத் தீ விபத்தால் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். (இ-5-88)

## கத்திக்குத்தில் ஒருவர் பலி; சந்தேக நபர் தலைமறைவு

கல்கிரியாகம, ஏழாம் குளக்கட்டுச் சந்தியில் வைத்து, இனந்தெரியாத நபர்களினால் கத்திக்குத்துக்கு இலக்காகி 45 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். இக்கொலைச் சம்பவம், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர், புந்துகேஹின்ன, தேவஹுவ பகுதியைச் சேர்ந்தவர் எனவும் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அவர் தப்பியோடியுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## குருநாகல் மாவட்ட மக்களை மகிந்த ஏமாற்றி விட்டார்

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ குருநாகல் மக்களை ஏமாற்றி விட்டதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகம் சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநாகல் மாவட்டத்தில் பாரியளவில் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட மகிந்த மாவட்ட மக்களை கண்டு கொள்வதில்லை.


தமது மாவட்ட வாக்காளர்களை உதாசீனம் செய்துவிட்டு கொழும்பு ஜயந்திர காரியாலயமொன்றை அமைத்தமையையிடுகவலையடைகின்றேன்

குருநாகல் மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ காரியாலயமொன்றை திறந்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அல் ஹுசெய்னின் இலங்கை விஜயம் செய்தது நன்மையேயாகும் என அவர் தெரிவித்தார். (இ)




பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்லும் போது மாணவர்களுக்கும் தலைக்கவசத்தை அணிந்து செல்லுமாறு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், யாழ்.போக்குவரத்து பொலிஸாரால் ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக யாழ்.சென்ஜோண் பொஸ்கோ பாடசாலை மற்றும் சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (படங்கள்:-உ.சாளின்)




# சிவப்பு அட்டை வழங்கிய நடுவரை சுட்டுக்கொன்ற கால்பந்து வீரர்!

ஆர்ஜென்டினாவில் கால்பந்து போட்டி ஒன்றில் சிவப்பு அட்டை காட்டியதால் நடுவரை கால்பந்து வீரர் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆர்ஜென்டினாவில் உள்ள கோர்டோபா மாகாணத்தில் உள்ளூர் அணிகள் மோதிய கால்பந்து போட்டி நடந்தது.

இந்தப் போட்டியில் வீரர் ஒருவர் எதிர் அணி வீரரரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதால் அவருக்கு நடுவர் சிவப்பு அட்டை காட்டி அவரை மைதானத்தை விட்டு வெளியேற்றினார்.

இதனால் ஆத்திரம் அடைந்த அந்த வீரர், தனது காரில் இருந்த பையில் இருந்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மைதானத்தில் இருந்த நடுவரை சரமாரியாக சுட்டுள்ளார்.

இதில் நடுவரின் தலை, கழுத்து, மார்பு பகுதியில் குண்டு பாய்ந்தது. மேலும், வீரர் ஒருவரின் மீதும் குண்டு பாய்ந்துள்ளது

இதனால் ரசிகர்களும், மற்றைய வீரர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயினர். துப்பாக்கி சூடு நடத்திய வீரர் உடனடியாக அங்கிருந்து ஓடிவிட்டார்.

ரத்த வெள்ளத்தில் கிடந்த நடுவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மற்றொரு வீரர் காயத்துடன் உயிர்தப்பினார்.

மைதானத்தில் வீரர் ஒருவரால் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கி சூடு அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க)

# கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க குரல் கொடுங்கள்

## யோசப் ஸ்ராலினிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்திரமாக்குவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் உதவவேண்டும் என வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலினிடம் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு மேலாக கடமை நிறைவேற்று அதிபர்களாக இருக்கின்றவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

கடந்த காலங்களில் ஒரு ஒழுங்குமுறையில் கடமை நிறைவேற்று அதிபர்கள் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

எனவே தற்போது கடமை நிறைவேற்று அதிபர்களாக கடமையாற்றுகின்றவர்களை அந்தப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் குரல் கொடுக்க வேண்டும் எனவும் இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யோசப் ஸ்ராலினிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# ஆணைக்குழுவின் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

பாரிய ஊழல், மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் கால எல்லை அடுத்த மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற நிலையில்,

மேலும் ஒருவருடத்திற்கு அதன் செயற்பாடுகள் நீடிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 2017ஆம் ஆண்டு மார்ச் 3ஆம திகதி வரை குறித்த ஆணைக்குழு தனது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (செ-12)

# அறைகொடுத்த ஸ்ரீசாந்துக்கு வாழ்த்து சொன்ன ஹர்பஜன்

டுவிட்டரில் இந்திய பந்துவீச்சாளர்கள் ஸ்ரீசாந்தும், ஹர்பஜன் சிங்கும் பேசிக் கொண்டது ரசிகர்களை நெகிழ்ச்சியடைச் செய்துள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு நடந்த ஐபிஎல் தொடரில் மும்பை- பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான போட்டியில் ஹர்பஜன் சிங், ஸ்ரீசாந்தின் கன்னத்தில் அறைந்து விட்டார்.

பின்னர் மோசமான நடத்தைக்காக ஹர்பஜன் சிங் மீதமுள்ள போட்டியில் விளையாட த்டை செய்யப்பட்டார். ஸ்ரீசாந்த் எச்சரிக்கையுடன் தப்பினார்.


இந்நிலையில் ஒரு செய்தி நிறுவனம் ஸ்ரீசாந்த் தனது மகளுடன் இருக்கும் புகைப்படத்தை டுவிட்டரில் பகிர்ந்தது.

இதற்கு ஹர்பஜன் சிங், இருவரையும் வாழ்த்தி டுவிட் செய்திருந்தார்.

இதற்கு பதிலளித்த ஸ்ரீசாந்த், நன்றி பாஜி. உங்களது குடும்பத்திற்கும் வாழ்த்துக்கள். உலகக்கிண்ணத்தில் சிறப்பாக ஆடவும் வாழ்த்துக்கள் எனத் தெரிவித்துள்ளார். (க)



# விழுந்து நொருங்கியது கூகுள் பலூன்



புறொஜெக்ட் லூன் என அழைக்கப்படும் அதிவேக இன்டர்நெட் சேவை வழங்கும் கூகுள் பலூனின் முதல் சோதனை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.



இப்பரிசோதனையில் பயன்படுத்தப்பட இருக்கும் மூன்று பலூன்களில் ஒன்று இலங்கையின் தெற்குப் பகுதியினூடாக கடந்த 16ஆம் திகதி காலை இலங்கை வான வெளியில் பிரவேசித்தது அனைவரும் அறிந்ததே.

விமானங்கள் பறப்பதைவிட இரண்டு மடங்கு உயரமான வெற்றுக்கண்ணுக்கு புலப்படாத ஆகாயத்திலேயே நிலை கொண்டிருக்கும் இந்த பலூன் நேற்றிரவு வான் வெளியில் பழு தடைந்து மலையகத்தின் புஸ்சல்லாவ பகுதியில் விழுந்து ள்ளது. இதனைப்பார்க்க எராளமான மக்கள் அதனை காண அங்கு குவிந்துள்ளனர்.

மறுசுழற்சி செய்ய முடியுமான இந்த பலூன்கள் 180 நாட் கள் வரையிலான ஆயுளையே கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# பக்தர்களின் முண்டியடிப்பால் கீழே தள்ளப்பட்டார் போப்!

மெக்சிகோவில் போப் ஆண்டவரைக் கீழே தள்ளியதால் பரபரப்பு நிலவி வருவதுடன், இந்த சம்பவத்தின் வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் பரவியும் வருகிறது.

மெக்சிகோவில் சுற்றுப் பயணம் செய்து வருகிற போப் ஆண்டவர் பிரான்சிஸ், அங்குள்ள மோரேலியா நகரில் பொது மக்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் ஆசி பெற ஏராளமானோர் குவிந்திருந்தனர்.

கூட்டத்தில் இருந்த குழந்தைகளைப் பார்த்து ஆசி வழங்குவதற்காக, போப் அவர்களை நோக்கி நடந்து வந்தார். அப்போது அவரைப் பார்க்கும் ஆவலில், கூட்டத்தினர் ஒருவருக்கொருவர் முண்டியடித்தனர். இதனால் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் ஒருவர் போப் ஆண்டவரை பிடித்து கீழே தள்ளி விட்டார். அதனால் நிலை தடுமாறிய போப், சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு குழந்தை மீது விழுந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டது.

ஆனால் நல்ல வேளையாக உதவியாளர்களும், பாதுகாவலர்களும் அவர் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டனர்.

இந்த சம்பவத்தால் கோபம் அடைந்த போப் ஆண்டவர், முகம் சிவக்க தனது குரலை உயர்த்தி ஸ்பானிஷ் மொழியில், சுயநலமாக இருக்காதீர்கள் என தன்னை தள்ளிவிட்ட நபரிடம் இரு முறை சத்தமாகக் கடிந்து கொண்டார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. (செ-12)

# 8 லட்சத்து 50ஆயிரம் அச்சுறுத்தி அபகரிப்பு!

(கொழும்பு)

இருவேறு சம்பவங்களில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அச்சுறுத்தி அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் என்று தங்களை கூறிக்கொண்டு வந்த இருவர், மீன் வர்த்தகரை அச்சுறுத்தி அவரிடமிருந்த 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தை அபகரித்து சென்றுள்ளனர். இந்தசம்பவம்கொஸ்கமவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, ரத்கமவில் உள்ள மதுபானசாலையொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் வந்திருந்த இருவர், மதுபான சாலையின் முகாமையாளருக்கு கத்தியை காண்பித்து அச்சுறுத்தி 5 இலட்சம் ரூபாய் பணத்தை அபகரித்து சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)


## யா/நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை

### 135 ஆவது ஆண்டு விழா

காலம்: 18.02.2016 (வியாழக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி
இடம்: சென்.பீற்றேஸ் தேவாலய வளாகம்

*தலைவர்*
திரு.க.ஸ்ரீநந்தகோபன்
(அதிபர்)

*பிரதம விருந்தினர்*
வணக்கத்திற்குரிய
கலாநிதி.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்
(யாழ்.ஆயர்.மறைமாவட்டம், யாழ்ப்பாணம்)

*சிறப்பு விருந்தினர்*
திரு.ச.சிவானந்தராசா
(கோட்டக்கல்வி அலுவலர், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்)

*அருளுரை*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

*வரவேற்புரையும் தொடக்கவுரையும்*
திருமதி.றெ.இருதயநாதன் (முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர், போசகர்-பழைய மாணவர் சங்கம்)

*ஆசியுரை*
அருட்தந்தை றோய் பேடினன்ட் அவர்கள்
(பங்குத்தந்தை, நவாலி சென்.பீற்றேஸ் தேவாலயம்)
அருட்தந்தை M.D.போல் சுரேஸ் அவர்கள்
(CACM Church, Navaly)
சிவஸ்ரீ.சி.சுப்பிரமணியக்குருக்கள்
(பிரதமகுரு.சிந்தாமணிப்பிள்ளையார் திருக்கோயில்)

*வாழ்த்துரை*
திருமதி.ஜோய் மகிழ் மகாதேவன்
(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி)
பேராசிரியர் மா.சின்னத்தம்பி
திரு.சி.நாகையா J.P.
(ஓய்வுநிலை அதிபர், பொருளாளர் விழாச்சபை)
ப.செந்தில்குமார்
(உறுப்பினர் NEMO.Swiss)
திருமதி.ஜசிந்தா அன்ரன்
(செயலாளர், ப.மா.சங்கம்)

*நன்றியுரை*
திரு.ச.க.தேவதாசன் (செயலாளர், விழாச்சபை)

கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலைச் சமூகம்.

(C-3771)


# சு.க.பிளவுபட ஐ.தே.க. அனுமதியளிக்க மாட்டாது

## என்னவொரு ஒற்றுமை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைய அனுமதிக்க போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. பண்டாரகம என்ற இடத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் நாட்டு நலனுக்காக இணைந்து செயற்படுகின்றன.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அனுமதிக்காது என்றும் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியை பொறுத்த வரையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபாலவை சுற்றியிருக்க வேண்டும் என்பதே விருப்பம் என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# நுகர்வோர் அதிகார சபையினால் 2665இடங்களில் சுற்றிவளைப்பு

நுகர்வோர் கட்டளை சட்டங்களை மீறி பொருட்கள் விற்பனை செய்வோரை கைது செய்யும்நோக்கில் கடந்த 45 தினங்களில் நுகர்வோர் அதிகார சபை 2665 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்புக்களில் ஜனவரி 1 முதல் 31ஆம் திகதி வரை 1639 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்ட்டுள்ளன. இதன் மூலம் அரசுக்கு 97 இலட்சத்து 3,300ரூபாய் வருமானம் கிடைத் துள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் கடந்த 15 ஆம் திகதி வரை 926 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதே வேளை, குறித்த சுற்றி வளைப்புக்களின்பின்னர் 1023 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 153 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை குறித்த சுற்றிவளைப்புக்களால் அரசுக்கு 24 இலட்சத்து 68ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)


## பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்

### புதிய நிர்வாகசபைத் தெரிவு

பருத்தித்துறை புதிய கட்டடத் தொகுதியில் மேல்மாடியில் அமைந்துள்ள வர்த்தக சங்க அலுவலகத்தில் 06.02.2016 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு.இ.ஜெகதீஸ்வரன்( குமாரி ஸ்டோர்ஸ்), செயலாளர் திரு.ச.விக்கினேஸ்வரன் (விக்னேஸ்வரா பல்பொருள் களஞ்சியம்), பொருளாளர் திரு.த.ஆதித்தன் (நியூ வரதமகள் ரெக்ஸ்) மற்றும் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் அன்றைய தினம் 01.03.2016 தொடக்கம் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களிலும் சகல வர்த்தக நிலையங்களும் விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.இதற்கு சகல வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

தலைவர் இ.ஜெகதீஸ்வரன் செயலாளர் ச.விக்கினேஸ்வரன்

(C-3770)


# வெவ்வேறு பிரதேசங்களில் ஹெரோயினுடன் இருவர் கைது

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிகொட மைதானத்திற்கு அருகில் ஒரு கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயினுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே கிராண்ட்பாஸ்பகுதியை சேர்ந்த 56 வயதான குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தச் சந்தேக நபரை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை மிரிஹான பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோட்டைப் பகுதியில் 4 கிராம் 30 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை மிரிஹான பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

50 வயதான குறித்த நபர் மிரிஹான பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் இவரை நுகேகொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# கையடக்கத் தொலைபேசி கட்டணம் அதிகரித்துள்ளது

கையடக்கத் தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சில தொலைபேசி இணைப்பு நிறுவனங்கள் செக்கனுக்கு 0.03 சத அதிகரிப்புடன் நிமிடத்துக்கு ஒரு ரூபா 80 சதமாக கட்டணத்தை அதிகரித்துள்ளது.

சில தொலைபேசி இணைப்பு நிறுவனங்கள் ஒரு ரூபா 50 சதமாக ஒரு நிமிடத்துக்கான கட்டணத்தை அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புடன் ஒரு தொலைபேசி பாவனையாளன் பல்வேறு வரிகளுடன் சேர்த்து ஒரு ரூபா இருப்பினும், ஏற்கனவே காணப்பட்ட பெக்கேஜ் இணைப்புக்கான கட்டணம் இதுவரை அதிகரிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஒரே தொலைபேசி இணைப்பு நிறுவனங்களுக்குள்ளும், வெளியார் தொலைபேசி இணைப்பு நிறுவனங்களுக்கிடையிலும் பேசும் கட்டணம் சமப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (இ)


## தொண்டர்கள் தேவை

**வாரத்தில் 4 மணித்தியாலங்கள் மற்றவர்களுக்காக அர்ப்பணிக்க தயாரா?**
சம்பளம் எதுவுமில்லை.
பயிற்சி வழங்கப்படும்.
9.00- 1.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்
(வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில்)
**021 222 8117**
**077 900 8776**
(C-3756)


# இராசி பலன்

*18.02.2016*
*(மாசி 06, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*ஏகாதசி பின்னிரவு 12.03 மணிவரை*
*திருவாதிரை பின்னிரவு 4.37மணிவரை*
*சுபநேரம் 8.02-9.32 மணிவரை*
*இராகுகாலம் 2.02-3.32 மணிவரை*
**வளவன்**

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம் | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வியாபார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்:** வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், தந்தை வழி உறவில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**தனுசு:** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், வெளியூர் பயணமொன்றால் பணவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள்.

**கும்பம்:** புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், உஷ்ண சம்பந்த மான ரோகங்கள் ஏற்படலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

# இளைஞர்களை நெறிப்படுத்த நாம் ஒன்றிணைய வேண்டும்

## கோப்பாய் பிரதேச செயலர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

இன்றைய இளைய சமுதாயம் நோக்கம் தெரியாமல் போகும் நிலையிலேயே இருக்கின்றது. இளைஞர்களை நெறிப்படுத்த வேண்டிய விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றின் பணிகள் குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது என கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மணற்பகுதி புத்தூர் கலையகம் சனசமூக நிலையம் வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு புதிதாக கலையரங்கு கடந்த 15ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்பு விழாவின்போது பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும்போதே பிரதேச செயலாளர் பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகத்தில் நல்ல நிலையில் இளைஞர்களை வளர்த்தெடுப்பதில் சனசமூக நிலையங்கள் உதவுகின்றன. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீங்கள் இந்த கிராமத்தை நல்ல முறையில் முன்னேற்றவேண்டும். அதேவேளை நோக்கம் தெரியாமல் சென்று கொண்டுள்ள இளைஞர்களை வழிப்படுத்தும் பொறுப்பும் சமூகத்திற்கு இருக்கின்றது.

கிராமத்திற்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டன்தின்கீழ் 5 இலட்சம்ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் 4 இலட்சம் ரூபா மக்கள் பங்களிப்புடனும் இக்கலையரங்கு அமைக்கப்பட்டது.

கவிஞர் புத்தூர் வே.இளையகுட்டி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர்,வட மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-4)

# நீதித்துறையில் மாற்றம் செய்யப்படல் வேண்டும்

## அரசியலமைப்பு கருத்தறியும் குழுவிடம் சுட்டிக்காட்டு

நாட்டின் நீதித்துறையில் மாற்றம் செய்யப்பட்டு சிறு குற்றங்களுக்கு ஐந்து கசையடிகளும் பெருங்குற்றங்களுக்கு 25 கசையடிகளும் வழங்கப்பட புதிய அரசியல் அமைப்பில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உத்தேச அரசியல் அமைப்பிற்கான கருத்தறியும் அமர்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கொலை வழக்குகள் ஆறு மாதத்திற்குள்ளும் சாதாரண வழக்குகள் மூன்று நாட்களுக்குள்ளும் முடிவுறுத்தப்படல் வேண்டும் என்ற நியதி புதிய அரசியல் அமைப்பில் கொண்டுவரப்படல் வேண்டும் என நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது பொதுமக்களினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் நீதித்துறை இறுக்கமில்லாமல் சாதாரண நிலையில், அரசியல் தலையீட்டுடன் காணப்படுகின்றது. அரசியல் தலையீடுகள் காரணமாக பல வழக்குகள் நீதியினை பெற்றுக்கொடுக்காத நிலையிலேயே முடிவுறுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக குற்றவியல் வழக்குகளில் தான் அதிகளவில் இலஞ்ச ஊழல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இந்த இலஞ்ச ஊழல் அதிகரிப்பிற்கு காரணம் பொலிஸார் அதற்கு பாதுகாப்பு வழங்குவதேயாகும். பொலிஸார் தொடர்பிலான சட்ட நிலை மாற்றப்படல் வேண்டும். நீதியினை பாதிப்பது இலஞ்ச ஊழலே ஆகும். பொலிஸார் மற்றும் நீதித்துறையில் இலஞ்சம் மற்றும் அரசியல் தலையீடு ஏற்படாத வகையில் புதிய அரசியலமைப்பு அமைதல் வேண்டும்.

சாதாரண குற்றங்களுக்கு மூன்று நாட்களில் தண்டனை வழங்கும் வகையிலும், கொலைக்குற்றங்களுக்கு ஆறு மாதத்திலும் தண்டனை வழங்கப்பட வேண்டும். மேலும் சமூக விரோத குற்றங்களுக்கு கசையடிகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான கசையடிகள் வழங்கப்படுவதன் மூலம்தான் குற்றங்கள் செய்வோரும் தண்டிக்கப்படுவதனை பார்ப்போரும் குற்றங்கள் செய்யாமலிருப்பார்கள்.

சாதாரண குற்றங்களுக்கு ஐந்து கசையடிகளும் பெரும் குற்றங்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஐந்து கசையடிகள் என 25 கசையடிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம்தான் குற்றங்களை முழுமையாக கட்டுப்படுத்த முடியும். குறிப்பாக தற்போது வடக்கு மாகாணத்தில் குற்றங்கள் அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.

இவற்றைகட்டுப்படுத்துவதற்கு நீதித்துறையினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும்குற்றங்கள் அதிகரித்த நிலையிலேயே உள்ளது. இந்நிலையிலேயே குற்றங்களுக்கு கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-4)

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைபினை கருத்தறியும் அமர்வில் சமர்ப்பித்த தமிழ் சிவில் சமூகம்

## இனப்பிரச்சினைக்கு தீர்வாக பயன்படுத்த யோசனை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சரினை இணைத்தலைமையாக கொண்ட தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபில் உள்ள விடயங்களை இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழ் சிவில் சமூகம் புதிய அரசியல் அமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவிடம் கையளித்துள்ளது.

மேற்படி குழுவின் இரண்டாம் நாள் அமர்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே அவர்கள் மேற்படி முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு,

1.புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பில் பிரதமரால் பாராளுமன்றிற்கு ஜனவரி 9, 2016 அன்று முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை பெரும்பான்மை/விசேட பெரும்பான்மை அடிப்படையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வகையிலான ஏற்பாடுகளைக் கொண்டது. இது எண்ணிக்கையில் சிறியதாக இருக்கக் கூடிய தேசங்கள், சமூகங்களை மீறி புதிய அரசியலமைப்பை உருவாக்கலாம் என்ற கருதுகோளின் மீது கட்டியெழுப்பப்பட்ட செயன்முறை எனக் கருத வேண்டியுள்ளது. ஆகவே தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவுகளில் குறிப்பிட்டவாறு அரசியலமைப்புக்கு முந்தைய அரசியல் செயன்முறையும் உடன்பாடும் தேவை. இதில் தமிழ் சமூகம் உட்பட அனைத்து சமூகங்களும் சரி சமனாக பேச்சுவார்த்தை மேசையில் இருந்து ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும். இச்செயன் முறைக்கு சர்வதேச மத்தியஸ்தம் தேவை.

2.அமைச்சரவையால் உருவாக்கப்பட்டுள்ள மக்களின் கருத்தறியும் குழு அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதியாலும் பிரதமராலும் கட்டுப்படுத்தப்படுவதாக அமையக் கூடாது. தொடர்ந்து பிரதமரும் ஜனாதிபதியும் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று சொல்வது இந்தக் குழுவின் அறிக்கையில் தாக்கம் செலுத்துமோ என நாம் அஞ்சுகிறோம்.

அண்மையில் ஊடகங்களுக்கு மக்களின் கருத்தறியும் குழு, குழுவின் தலைவர் ஒற்றையாட்சியை மீறி தீர்வு வராது என்று கூறியுள்ளமை எமது இந்தக் கரிசனையை கூடுதலாக்குகின்றது.

3.ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கம் தீர்வாகாது. ஒற்றையாட்சி என்பது மத்திக்கே அதிகாரம் உண்டு என்றும் அது விரும்பினால் அதிகாரங்களை பகிர்ந்து மாகாண அலகுகளிற்கு கொடுக்க முடியும் என்ற தத்துவத்தின் பாற்பட்டது. ஒற்றையாட்சி அரசியலமைப்பில் தமிழருக்கு உரித்து அடிப்படையில் அதிகாரங்கள் இருக்க வாய்ப்பில்லை. மத்தியின் நல்லெண்ணத்திலேயே அதிகாரங்கள் தங்கியிருக்கும். இதன் காரணமாகவே 13ஆம் திருத்தம் தோல்வியடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கம் ஏற்புடையதல்ல.

மேலும் ஒற்றையாட்சி என்பது அரசியலமைப்பு ரீதியாக சிங்கள பௌத்த தேசத்தின் அதிகார பீடத்தை தக்க வைக்க உதவுவதாகவே சிங்கள பௌத்த அரசியல் கலாசாரத்தில் பார்க்கப்படுகின்றது. ஆகவே இவ்விடத்தில் ஸ்கொட்லான்ட் - ஐக்கிய இராச்சிய முன்னுதாரணமோ - இந்தோனேசியா முன்னுதாரணமோ எமக்கு உதவாது. இலங்கையை பல் தேசிய அரசாக்குவது என்பது ஒற்றையாட்சிக்குள் சாத்தியமாகாது.

4. தனிநபர் உரிமைகளை உறுதி செய்வதன் மூலம், நல்லாட்சி நிறுவன மறுசீரமைப்பு மூலம், சட்டத்தின் ஆட்சி மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வராது. தமிழர்கள் தமது தனிநபர் உரிமைகளை அனுபவிக்க அவர்களுக்கு கூட்டாக சுயநிர்ணய உரிமை இருப்பது அத்தியாவசியமானது. தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அரசியலமைப்பின் மூலம் நிறுவன ரீதியாக அங்கீகரிப்பதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு வரும்.

5.சமஷ்டி என்றோ ஒற்றையாட்சி என்றோ அரசியலமைப்பு தன்னை வெளிப்படையாக அடையாளப்படுத்தத் தேவையில்லை என்று கூறுவது ஏமாற்றும் தன்மையானது.

ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் அரசியல் விஞ்ஞானத்திலும் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்கள் உண்டு. ஆகவே வெளிப்படையாக அடையாளப்படுத்தாமல் சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கலாம் என்பது போலியானவாதம். மேலும் இது சிங்கள மக்கள் மற்றும் தமிழ் மக்களை கூட்டாக ஏமாற்றுகின்ற செயலுமாகும். சிங்களத் தலைவர்களே வேண்டுமென்றே சமஷ்டி தொடர்பிலான பயப்பிராந்தியை உருவாக்கியுள்ளனர். அவர்கள் அதனைக் களைய முன்வர வேண்டும். பிரிவினை என்பது எத்தகைய அரசியலமைப்பு மாதிரியை தெரிவு செய்கின்றோம் என்பதில் தங்கி இல்லை. பிரிவினை சட்டத்தால் அன்றி வலிமையாலும் சூழலாலும் ஏதுப்படுத்தப்படுவது என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

6.படிப்படியாக தீர்வினை அடைந்து கொள்ளலாம் எனக் கருதுவது உண்மையான மாற்றத்தை தள்ளிப் போடுவதாகும். படிப்படியான தீர்வு என்பது நிச்சயமாக ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாக இருக்க முடியாது. புதிய அரசியலமைப்பு மூலம் அமையவிருக்கும் புதிய அரசு தொடர்பில் அரசியல் கோட்பாட்டு ரீதியாக இணக்கம் எய்தாமல் தீர்வு சாத்தியமில்லை. படிப்படியாக தீர்வு நோக்கி நகரலாம் என்பது இருக்கின்ற முறைமையை தூசு தட்டுவதாக இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது

7.தமிழர்கள் சுயநிர்ணயம் கேட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கெதிராக யுத்தம் படுமோசமாக தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் நடத்தப்பட்டது. எனவே நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்குமான செயன்முறைக்கும் அரசியல் தீர்வுக்கான செயன்முறைக்கும் நேரடி சம்பந்தம் உண்டு. எனவே தான் அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்காக பொறுப்புக் கூறலை தமிழர்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதை நாம் நிராகரிக்கிறோம். தமிழர்களுக்கு எதிராக குற்றங்கள் இடம் பெறவில்லை என்று கூறிக் கொண்டு (அரசியல் தீர்வொன்றின் மூலம்) நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது சாத்தியமானதல்ல.

8.சமச்சீரற்ற சமஷ்டி முறை ஒன்று விரும்பத்தக்கது. நாடு பூராகவும் அனைத்து சமஷ்டி அலகுகளுக்கும் சமமான அதிகாரங்கள் இருப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால் வடக்கு கிழக்கு தவிர்ந்து பூரண சுயாட்சி தொடர்பில் அரசியல் கோரிக்கைகள் நாட்டின் ஏனைய பாகங்களில் இருந்து முன்வைக்கப்படவில்லை. எனவே ஏனைய சமஷ்டி அலகுகளிற்கு குறைவளவான அதிகாரங்களும் வடக்கு கிழக்கிற்கு பூரண சுயாட்சிக்கான அதிகாரங்களையும் வழங்கும் சமச்சீரற்ற சமஷ்டி முறையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

9.காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களின் பாதுகாப்பும் அவர்களின் தாயகத்தின் ஆட்புல ஒற்றுமையும் சம்பந்தப்பட்ட விடயம். ஆகவே அவ்விடயங்களில் விட்டுக் கொடுப்பு சாத்தியமில்லை. வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்திலும் விட்டுக் கொடுப்பிற்கு வாய்ப்பில்லை. இணைந்த வடக்கு, கிழக்கிற்குள் முஸ்லிம், சிங்கள மக்களின் உரிமைகள் குறிப்பாக முஸ்லிம்களின் சுயாட்சி கோரிக்கை உள்வாங்கப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம்.

10.வடக்கு, கிழக்கிற்கு சுயாட்சியானது தமிழ் சமூகம் உள்ளக சமூக சீர்திருத்தம் குறித்து சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்கும். தேச வழமை சட்டத்தை மறுசீரமைத்தல், காணி சீர் திருத்த முயற்சி, பெண்களின் அரசியல் பங்களிப்பு, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த சுயாட்சி வாய்ப்பளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# நெற்பயிர்ச்செய்கையை அதிகரிக்க யாழில் நான்கு பாரிய திட்டங்கள்

## விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையை அதிகரிக்கும் நோக்குடன் 4 பெரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கீ.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்காக இந்த வருடம் பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரத்து 500 ஹெக்டயருக்கு மேற்பட்ட நிலம் உவர் நீரால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த நிலங்களை கருக்கிய உமி மற்றும் அதற்கு பொருத்தமான நெல் இனம், இலை ஊடுபரவும் திரவ பசளைகள், பயிர் போசணைகள் மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உவர் காணிகளில் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளோம்.

அடுத்து பயன்படுத்தாத நெற்காணிகளை பயிர்ச் செய்கைக்காக மேம்படுத்தல் அதாவது கடந்த கால யுத்தம், இடப்பெயர்வு போன்றவற் றால் பல நூற்றுக்கணக்கான காணிகள் இன்னமும் பயன்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது. யாழில் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிலத்தில் 11 ஆயிரம் ஹெக்டயருக்கு உட்பட்ட நிலப்பரப்பில் தான் பயிர்ச்செய்கை மேற்கொளளப்பட்டு வரு'ன்றது. எனவே மிகுதியாக உள்ள காணிகளை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தவுள்ளோம்.

தரமான விதை நெல்லை விவசாயிகள் பயன்படுத்துவதனமூலம்உற்பத்திதிறனை மேம்படுத்துதல் அதாவது பொதுவாக யாழ்ப்பாணத்தில் தமது சொந்த நெல்லையே விவசாயத்துக்கு பயன்படுத்தி வருகின்றார்கள். ஆனால் அதற்கு பதிலாக சுத்திகரிக்கப்பட்ட தரமான விதை நெல்லை பயன்படுத்துவதன் மூலம் அவர்களால் விளைச்சலை 15 தொடக்கம் 20 வீதம் வரை அதிகரிக்க முடியும்.

எனவே இந்த வருடம் தரமான விதை நெல்லை உற்பத்தி செய்து இங்குள்ள விதை உற்பத்தி கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்வனவு செய்து அதை இயந்திரத்தின் மூலம் சுத்திகரித்து மீண்டும் அடுத்த போக பயிர்ச்செய்கைக்கு வழங்குதல் என்ற நோக்கத்தின் அடிப்படையில் 200 ஒப்பந்த விவசாயிகளுக்கு பதிவு செய்யப்பட்ட விதை நெல்லை வழங்கி அத்துடன் விதை உற்பத்தி தொழில் நுட்பத்தை பயிற்றுவித்து தரமான விதை நெல்லை உற்பத்தி செய்து கொள்வனவு செய்யவுள்ளோம்.

மேலும்சேதனநெற்செய்கை பொறுத்த வரையில் தன்னிறைவு அடைந்துள்ளது. ஆனால்நெல்லுக்குரிய கேள்வி மிகவும் குறைந்துள்ளது. இருப்பினும் சேதன நெல்லுக்குரிய கேள்வி மிகவும் அதிகரித்த போக்கிலே வளர்ந்து கொண்டு இருக்கிறது.

எனவே அதன் அடிப்படையில் யாழ். குடாநாட்டில் செய்யும்நெற்பயிர்செய்கையில் 40 வீதத்திற்கும் மேற் பட்ட காணிகள் பாரம்பரிய விதை நெல்லை பயன்படுத்தி வருகின்றார்கள். மொட்டைக் கருப்பன், மொருங்கன்போன்ற பாரம்பரிய விதை நெல்லை தூய்மையாக்கி அவற்றுடன் அசேதன பசளை கலப்பில்லாமல் சேதன முறையில் செய்வதன் மூலம் வெளிநாடுகளில் மட்டுமல்ல நவீன சந்தைகளிலும் இந்த சேதன நெல்லுக்கு கிராக்கி அதிகரிக்க வாய்ப்புள்ளது.எனவே சந்தை வாய்ப்பை நோக்கிய நெற்செய்கையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம் என அவர்

## சிறைச்சாலை பாதுகாப்பிற்காக நாய்களை பயன்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலைக்குள் இடம்பெறும் போதைப்பொருள் வியாபாரத்தினை தடுப்பதற்காக பொலிஸ் மோப்ப நாய்களை பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறைசாலைகள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த திட்டமானது கொழும்பு,போகம்பர மற்றும் மகர ஆகிய சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் தொலைபேசி சமிக்ஞையை இல்லாது செய்யவும சிறைச்சாலைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான துரித ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும்சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துளளார். (இ)

## நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியமையார் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மணடத்தில்நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையின் தலைவர் இ.வசந்தசேன தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காபுரம் தேவஸ் தானத்தின் தலைவரும் கலாநிதி ஆறுதிருமுருகன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார். இப்பரிசளிப்பு நிகழ்வில் சைவநெறி தமிழ் மொழித் தேர்வுகள்-2014 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தினப் போட்டிகள் 2015, புண்ணிய நாச்சியமையார் தினப் போட்டிகள் 2016 என்பவற்றில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(இ-5)

## இரு நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளான ஆசிரியை திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் நாடக எழுத்துருக்களடங்கிய "கிணற்றங்கரை", சிறுவர் கதையான "மயில் இறகு" ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இல - 62, கொக்குவில் சந்தி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையினை குழந்தை மா. சண்முகலிங்கம் வழங்கவுள்ளதுடன் வெளியீட்டு உரையினை தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பேரவையின் செயலாளர் மு.இராசநாயகம் வழங்கவுள்ளார்.

கிணற்றங்கரை நூலிற்கான ஆய்வுரையினை யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தின் உதவி இயக்குநரஜோ. ஜோன்சன்ராஜ்குமார் வழங்கவுள்ளதுடன், மயில் இறகு நூலிற்கான ஆய்வுரையினை கவிஞர் பரா. ரமேஸ வழங்கவுள்ளார். (இ-5)

## அவமதித்த குற்றச்சாட்டு; 11 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஹோமாகம நீதவான் நீதிமன்ற வளாகத்தில் மூர்க்கத்தனமாக நடந்து கொணடதுடன் நீதிமன்றத்தை அவமதித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 11 பேரையும் எதிர்வரும் முதலாம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமாகம நீதிமன்ற நீதவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டார்.

ராவணா பலய அமைப்பின் அமைப்பாளர் இத்தேகந்தே சத்தா திஸ்ஸ தேரர், முன்னாள் எம்.பியான ஹக்மீ மன தயா ரத்ன தேரர்கள் உள்ளிட்டோர், கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமையன்று பொலிஸில் சரணடைந்தனர்.

அனைவரும், நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னரே, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 11 பேரில் ஐவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(இ)

## பொதுக்கூட்டம்

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமுக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில்சனசமுகநிலைய மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இதன்போது வேலணை பிரதேசசபையின் சனசமுக அபிவிருத்தி அலுவலர் திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம் சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1976 RC
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/ இத்தாலி PR
எதர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/5514

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 21சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.COMலண்டன்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5515

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 35செவ் 12 இல்
உயரம்: 167cm
தகைமை/தொழில்: BSc லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5516

பிறப்பு: 1983RC
நட்சத்திரம்: பரணி
கி.பா: 25செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L/ அரசதொழில்
தொ.இ: B/5519

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/5531

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 15 செவ் 12 இல்
தகைமை/தொழில்:BA, HNDM/ அரசதொழில
தொ.இ: G/5534

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 08
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc, MSc/ தனியார் தொழில்
தொ.இ: G/5542

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 18
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HNDகனடா
தொ.இ: G/5545

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# புலம்பெயர்ந்து வாழ்கின்ற தாயக உறவுகள் எமது பகுதிகளில் முதலீடு செய்ய வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அழைப்பு

( பனிக்கன்குளம் )

புலம்பெயர் தாயக உறவுகளை எமது தாயக பகுதியில் முதலிடுமாறு பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் அழைப்பு விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் புலம்பெயர் புதுக்குடியிருப்பு மண்ணின் அன்பர் ஒருவரால் அமைக்கப்பட்ட சகல வசதியுடனும் கூடிய கோபி வாகன சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

வாகன சுத்திகரிப்பு நிலையம் உண்மையிலேயே எமது பகுதிக்கு மிகவும் தேவையான ஒன்று. எமது பகுதியை சேர்ந்தவர்கள் இந்த தேவையை பூர்த்தி செய்ய கிளிநொச்சி, வவுனியா,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு சென்று வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

இது உண்மையிலேயே சிறந்த முயற்சி. லண்டனில் முதலீடு செய்யும போது அதன் பயன் முழுவதும் அந்த நாட்டுக்கே சேரும். அவ்வாறு இல்லாது இங்கு முதலீடு செய்வது ஒரு முன் மாதிரியான செயற்பாடாகும். இவ்வாறான முதலீடுகளை புலம்பெயர் உறவுகள் எமது பகுதியில் செய்ய வேண்டும்

ஏனெனில் இங்கு இதை செய்யும் போது போரினால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு இங்குள்ள வாகனங்கள் இங்கேயே சுத்திகரிப்பு செய்யப்படக்கூடிய நிலை ஏற்படும்.

இதேபோன்று இங்குள்ள அரச திணைக்கள வாகனங்கள் கூட பல மைல்தூரம்சென்றே இந்த சேவையை பெறவேண்டியிருந்தது. அவர்களுக்கும் வீண் செலவைக் குறைக்கக் கூடிய சந்தர்ப்பமாக இது அமைகிறது. எனவே மாவட்டத்திற்கான தேவையுள்ள திட்டங்களுக்காகபுலம்பெயர்உறவுகள் இங்கு முதலீடு செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.(2-3-281)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு காட்டுப்பகுதியில் வைத்து பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் கடந்த வாரம் முள்ளியவளை வனவள பாதுகாப்பு அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட வாகனத்தையும்முதிரை மரக்குற்றிகளையும் படத்தில் காணலாம். (படம் :-வற்றாப்பளை செய்தியாளர்)

# கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு தண்டம்

(கிளிநொச்சி-1)


கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் இரவு நேரங்களில் வீதிகளில் கட்டாக்காலிகளாக திரிந்த மாடுகள் கடந்த 14 ஆம் திகதி இரவு பிடிக்கப்பட்ட துடன் மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மேற்படி பிரதேச சபையினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களும் தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பிடிக்கப்பட்ட மாடுகள் ஒவ்வொன்றிற்கும் தண்டமும் அறவிடப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக வீதிகளில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளினால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந் நிலையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினர் இவ்வாறான கட்டாக்காலி மாடுகள் பிடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக மேற்படி பிரதேச சபை செயலாளர் க.ஹம்சநாதன் தெரிவித்துள்ளார். (2-3-277)

# கரைதுறைப்பற்று வனவள அலுவலருக்கான விடுதியும் அலுவலகமும் திறந்து வைப்பு



முல்லைத்தீவு வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கரைதுறைப்பற்று வட்டார வன அலுவலருக்கான அலுவலகமும் விடுதியும் கடந்த 14ஆம் திகதி தண்ணீரூற்று நெடுங்கேணி பிரதான விடுதி மாமூலைப் பகுதியில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் தலைவர் அனுர சத்துர சிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது. (2-310)




# பொன்னகர் மத்திக்கு வந்தது மின்சாரம்

கிளிநொச்சி மாவட்டம் பொன்னகர் மத்தி கிராமத்திற்குமின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் 250 வரையிலான குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இவர்களுக்கான மின்சாரம் கிடைக்கப் பெறாமையால் அப்பகுதி மக்களாலும் பொது அமைப்புக்களாலும் பலரிடமும் பலதடவைகள் முறையிடப்பட்டிருந்தன. இந்தநிலையில் தற்போது மின்னிணைப்பு,வீட்டு மின்னிணைப்புக்கள் கடந்த சில தினங்களாக வழங்கப்பட்டு வருவதாக பொதுஅமைப்புகளின் செயலாளர் திருமதி.நா. ஜெயராணி தெரிவித்துள்ளதுடன் இதுவரை காலமும் இக்கிராமமக்கள் பட்ட துன்ப நிலைக்குஇதன்மூலம் விடிவு கிடைத்துள்ளது. (2-3-254)

# கொள்ளையர்களைப் பிடித்த பொலிஸாருக்கு கௌரவிப்பு

(திருமுறிகண்டி)

மன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட எழுத்தூர் கிராம பிரிவில் உள்ள பெரியகமம், எழில்நகர், செல்வபுரம் போன்ற கிராமங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த பொலிஸாரை கௌரவித்து பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை பெரியகமம் பொது நோக்கு மண்டப முன்றிலில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் கொள்ளையர்களை கைது செய்த பொலிஸார் ஆகியோர் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் மன்னார் மாவட்ட செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் மாவட்ட குரு முதல்வர் அ.விக்டர் சோசை, சர்வமத தலைவர்கள் பொன்னாடை போர்த்தி பொலிஸாரை கௌரவித்தனர்.

இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-3-311)

# வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

(வற்றாப்பளை)

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் பரப்புரைகளின் போது தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை சில வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மறந்து செயற்படுவதாக முல்லைத்தீவு பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல பகுதிகளுக்கும் தேர்தல் பிரசாரங்களுக்காக வருகை தந்த அப்போதைய வேட்பாளராக இருந்து தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள சிலர் தேர்தல் காலங்களில் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளனர்.

குறிப்பாக தாம் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டால் தமது அலுவலகத்தை குறித்த பிரதேசங்களில் திறந்து கிழமையில்ஒருநாளில்அவ் அலுவலகத்திற்கு சமுகமளித்து மக்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்த்து வைப்போம் என வாக்குறுதிகளை வழங்கி இருந்த போதிலும் அவர்களில் சிலர் அவ்வாறான எந்தவொரு அலுவலகத்தையும்குறிப்பிட்ட பிரதேசங்களில்திறக்கவில்லையெனவும் குறித்த பாராளுமன்றஉறுப்பினர்களைச்சந்தித்துதமது தேவைகளை நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவேஇதனைக்கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் வாக்குறுதி வழங்கிய படி மேற்படி பிரதேசங்களில் தமது அலுவலகங்களைத் திறந்து மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினை களைத்தீர்க்கமுன்வர வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-310)

# மாங்குளம் மகா வித்தியாலயத்தில் 'நைற்றா'வின் தொழில் கருத்தரங்கு



மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த 13ஆம் திகதி இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு முல்லைத்தீவு மாவட்ட நைற்றா அலுவலகத்தினால் நடத்தப்பட்டது.

இதில் இளைஞர் யுவதிகள் எதிர்காலத்தில் எவ்வாறான தொழிலைப் பெற்றுக்கொண்டால் சிறப்பாக இருக்கும் எனவும் தேசிய தொழிற்றிறன் தகைமை (NVQ) சான்றிதழைப் பெறுவதால் கிடைக்கப்பெறும் நன்மை தொடர்பிலும் அறிவுரை வழங்கப்பட்டது.

இதேவேளை வேலைவாய்ப்பின்றி காணப்படும் இளைஞர் யுவதிகளின் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இதில் முல்லைத்தீவு மாவட்ட தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் அ.சத்தியன், ஒட்டுசுட்டான் பிரதேச நைற்றா நிறுவன பரிசோதகர் க.விக்னா, துணுக்காய் பிரதேச நைற்றா பரிசோதகர் த.வசீகரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி வைத்தனர். (2-3)



மு/ ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 12 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது... (படங்கள் புதுக்குடியிருப்பு செய்தியாளர்)

## போரின் இறுதிக்கட்டத்தில்

# இராணுவத்திடம் சரணடைந்தோர் பற்றிய முக்கிய ஆவணம் படைப்பிரிவு வசம்

## நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய ஆவணம் முல்லைத்தீவு 58 ஆம் படைத்தளம் வசமுள்ளது. அந்த ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ். எம். சம்சுதீன் உத்தரவிட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு வழக்கு கடந்த 3 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. வழக்குத் தொடுநர்களின் விசாரணைகள் முடிவுற்று எதிர்த்தரப்பு விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது முல்லைத்தீவு 58 ஆவது இராணுவ படையணி முகாம் அதிகாரிகளிடம் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுடைய பெயர்ப்பட்டியல்கள் அந்த முகாம் அலுவலகத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, அந்த பெயர்ப்பட்டியல் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நேற்றையதினம் உத்தரவிட்டிருக்கின்றது.

அரசாங்கம் அளித்த பாதுகாப்புடனான, பொதுமன்னிப்பு உத்தரவாதத்தையடுத்து, விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் முல்லைத்தீவு 58 ஆவது படையணி முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளிடம் சரணடைந்திருந்தனர். ஆயினும் அவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற தகவல் இதுவரையில் இராணுவத்தினராலும். அரசாங்கத்தினாலும் வெளியிடப்படவில்லை.




அவர்களில் விடுதலைப்புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த எழிலன் எனப்படும சின்னத்துரை சசிதரன் உள்ளிட்ட சிலர் தொடர்பில் அவர்களுடைய குடும்பத்தினர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாககல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் மீது நடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து, இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்டது என்ற காரணத்தினால், அதுபற்றிய விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் இந்த வழக்குகளை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தியிருந்தது.

இவ்வாறு பாரப்படுத்தப்பட்டவற்றில், சாந்தன் எனப்படும் செல்லையா விஸ்வநாதன், மஜித் எனப்படும் நடேசு முரளிதரன் அவருடைய மனைவி கிருஸ்ணகுமாரி, 4 வயது மகன் சாருஜன், 2 வயது மகள் அபிதா மற்றும் கந்தம்மான் எனப்படும் பொன்னம்பலம் கந்தசாமி, எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன், உருத்திரமூர்த்தி கிருஸ்ணகுமார் ஆகியோரின் வழக்குகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமனறத்தில் நடைபெற்று வருகின்ற விசாரணைகளில் முல்லைத்தீவு 58 ஆம் படைத்தளத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்தன இராணுவத்தினர் தரப்பில் சாட்சியமளித்தார்.

நேற்றையதினம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ஆட் கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எவரும் 58 ஆம் படைப்பிரிவில் சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தங்களிடம் இல்லை என அந்த முகாமின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்தன தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அப்போது மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்னவேல் அந்த இராணுவ அதிகாரியைக் குறுக்கு விசாரணை செய்தபோது, இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும்சரணடையவில்லை என எவ்வாறு கூறுகின்றீர்கள்என வினவினார்.

அதற்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்தன, இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள் எல்லோருடைய பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல்கள் தமது முகாமில் இருப்பதாகவும், அவற்றைப் பரிசீலனை செய்தபோது இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அங்கு சரணடைந்ததற்கான பதிவுகள் எதுவும் தங்களிடம் உள்ள ஆவணங்களில் இல்லை என தெரி வித்தார்.

இதனையடுத்து, சரணடைந்தவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பெயர்ப்பட்டியல் ஆவணமானது, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்குகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாக இருப்பதை நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டி, அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட வேண்டும் என்று நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

அந்த வேண்டுகோளுக்கு அரச தரப்பு சட்டத்தரணி பலத்த ஆட்சேபணை தெரிவித்தார்.

ஆயினும் அந்த ஆட்சேபணையை நிராகரித்து, சம்பந்தப்பட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எம். எஸ்.எம்.சம்சுதீன் இந்த வழக்கு விசாரணையை ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார.

பாதுகாப்பு வழங்கப்படும், பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அரசாங்கத்தின் உத்தரவாதத்தையடுத்து, இறுதி யுத்தத்தின்போது, இராணுவத்தினரிடம் சரணடைடந்த விடுதலைப்புலி உறுப்பினர்களுடைய பெயர் விபரங்களை வெளியிட வேண்டும் என்று அரசாங்கத்திடம் பலரும் அரசியல் ரீதியாகவும், மனித உரிமை மீறல் விவகார ரீதியாகவும் பல தடவைகள் கோரியிருந்தனர். ஆயினும் அத்தகைய தகவல்கள் தங்களிடம் இல்லை என்றும் எவரும் தங்களிடம் அவ்வாறு சரணடையவில்லை என்றும் இராணுவத்தினர் மறுதலித்து வந்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, முல்லைத்தீவு 48 ஆவது படைப்பிரிவு இராணுவ கட்டளைத் தலை மையகத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய ஆவணம் இருப்பதாக நீதிமன்ற வழக்கு விசாரணையில் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (2-3-9)

# கடற்படையினர் கடலில் மீனவர்களை வெட்டிக் காயப்படுத்தியதை ஒருபோதும் ஏற்க முடியாது

### காயமடைந்தவரில் ஒருவர் கவலைக்கிடம் - மன்னார் மீனவ சமாசத் தலைவர்

(மன்னார்)

மீனவர்கள் சட்டத்திற்கு முரணான தொழிலில் அல்லது தவறான வழிமுறைகளின் மூலம் கடற்றொழிலை மேற்கொண்டிருந்தால் அம் மீனவர்களை கைது செய்து நீதிமன்றம் ஊடாக முன்னிறுத்தி அவர்களுக்கான தண்டனையை பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கடற்படையினர் சட்டத்தை கையில் எடுத்து மீனவர்களை வெட்டி துன்புறுத்திய சம்பவத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார். மன்னார் பள்ளிமுனை கிரா த்தில் இருந்து கடந்த 13 ஆம் திகதி காலை கடற் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அந்தனி ஜேசுதாஸ், தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இ.செபமாலை அடிகளார், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன மாவட்ட இணைப்பாளர் ஜே.ஜாட்சன் பிகிராடோ, வங்காலை மீனவ சங்க ஆலோசகர் அருட்தந்தை ஜெயபாலன் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மன்னார் பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் நால்வர் மீது கடற்படையினர் கூரிய ஆயுதம் ஊடாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதலில் ஒருவர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மற்றும் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய இருவரும் பொலிஸ் நிலையத்தில் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் தொடர்பில் கடற்படை வீரர்கள் நடந்து கொண்டுள்ள முறை பாரதூரமானது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

மீனவர்கள் சட்டத்திற்கு முரணான தொழில் அல்லது தவறான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தால் அம் மீனவர்களை நீதிமன்றம் ஊடாக முன்னிறுத்தி அவர்களுக்கான தண்டனையை பெற்றுக்கொடுத்திருக்க வேண்டும்.

சட்டத்தை காப்பதற்காக பொறுப்பானவர்கள் சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இச்சம்பவத்தில் காயங்களுக்குள்ளான ஒருவரின் நிலை இன்னும் கவலைக்கிடமாகவே உள்ளது.

இவ்வாறான ஒரு சில கடற்படையினரின் செயற்பாடுகளால் முழுக்கடற்படையையும் நாம் குற்றம் சாட்டவோ அல்லது குறை கூறவோ முடியாது.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறு மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்படுவதுடன் அதற்கான உத்தரவாதமும் அளிக்கப்பட்ட வேண்டும்.

சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடும் மீனவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் இச் சம்பவத்தில் தொடர்புபட்ட கடற்படையினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட மீனவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச தலைவர் தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர ,வடக்கு மாகாண கடற்றொழில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-3-4-9)



நாமும் இணைவோம் அமைப்பின் ஏற்பாட்டில் கிளி. ஆனையிறவு அ.சி.த.க பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-உ.சாளின்)

# மக்கள் நடமாடும் பகுதியில் பொருட்கள்; கடை உரிமையாளர்கள் எட்டு பேர் கைது

### வழக்கு தொடரப்படுவதாக மன்னார் பொலிஸ் அறிவிப்பு

மன்னார் பஸார் பகுதியில் பாதசாரிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் தமது விற்பனைப் பொருட்களை மக்கள் நடமாடும் பகுதியில் பரவி விற்பனை செய்த 8 வர்த்தகர்களை மன்னார் பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கைது செய்துள்ளதோடு மக்கள் நடமாடும் பகுதயில் வைக்கப்பட்டிருந்த பொருட களையும் மன்னார் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் சுற்றுசசூழல் பாதுகாப்பு பிரிவு பொலிஸார் அன்றைய தினம் காலை மன்னார் பஸார் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது மன்னார் பஸார் பகுதியில் உள்ள 8 வர்த்தகர்கள் நடை பாதையில் தமது வியாபார பொருட்களை பரவி பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்திய நிலையில் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.


குறித்த வர்த்தக நிலையங்களுககுச் சென்ற மன்னார் பொலிஸ் நிலையத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவினர் பாதசாரிகள் நடமாடும் பகுதியில் பரவி வைக்கப்பட்டிருந்த பொருட்களை கைப்பற்றியதோடு குறித்த எட்டு வியாபார நிலையங்களின் உரிமையாளர்களையும் மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதோடு கைது செய்யப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் 8 பேரும் மன் னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு இடம்பெற்ற விசாரணைகளின் பின் 8 பேரும்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு குறித்த 8 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகவும் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார். (2-3-4)

# முதலமைச்சர் மீண்டும் நீதிபதியாக வேண்டும்!

## கம்பவாரிதி இ.ஜெயராஜ்



உயர்திரு நீதியரசர் அவர்கட்கு!

முதலமைச்சருக்கு என்று விளிக்காமல், பழைய ஞாபகத்தில் நீதியரசருக்கு என; நான் விளித்திருப்பதாய் நினைப்பீர்கள். அப்படியில்லாமல் தெரிந்தேதான் உங்களை, நீதியரசராய் விளித்தேன்.

காரணம்,

என்றும் நீங்கள் நீதியரசராகவே இருக்க வேண்டும் எனும், என் உள விருப்பே! அவ்விருப்புடனேயே இக்கடிதத்தை வரையத் தொடங்குகிறேன்.

அண்மைக்காலமாக உங்களை விமர்சித்து நான் எழுதியவற்றை வைத்து, என்னை உங்களின் பகைவனாய் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிச்சயம் நீங்கள் என் பகைவர் அல்லர். என் மனதில் உயர்ந்த ஒரு இடத்திலேயே, உங்களை இன்றும் நான் வைத்திருக்கிறேன். தாங்கள் உச்சநீதிமன்ற நீதியரசராய்ப் பதவி வகித்த காலத்தில்,எந்தச் சமுதாய அமைப்பிலும் உறுப்பினராய் ஆக மறுத்து வந்தபோதும், என் கோரிக்கையை ஏற்று, எங்கள் கம்பன் கழகத்தின் பெருந்தலைவராய் செயலாற்ற முன்வந்தீர்கள்.

எங்கள் கழகத்தின் பெருந்தலைவர் பதவியில், தாங்கள் அமர்ந்ததால் நாங்கள் பெருமையுற்றோம். உங்களிடம் இருந்த இயல்பான தமிழ், இலக்கிய, ஆன்மீக ஈடுபாடு, இயற்கையாய் தங்களிடம் அமைந்திருந்த நிமிர்வு, தோற்றப்பொலிவு என்பவை அனைதும், எங்கள் கழகத்தினது பெருமையை நிச்சயம் உயர்த்தின.

இவற்றிற்கப்பால் என்மேல் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், மதிப்பும், என்னால் என்றும் மறக்கமுடியாதவை. அத்தகைய உறவோடு கூடிய உங்களை, பகைவராய் நினைக்கவேண்டிய தேவை எனக்கு எப்படி வரும்?

ஈழத்தமிழினம் தங்கள் உரிமைக்காகப் போராடி, பேரழிவைச் சந்தித்திருந்தவேளை, தமிழர்களைக் கிள்ளுக்கீரைகளாய் நினைத்திருந்த பேரினவாதிகளுக்கு, நம் இளைஞர்களெல்லாம் தம் உயிரைத் துச்சமென மதித்து, தமிழர்களின் வர்த்தையும், சுதந்திர வேட்கையையும் தெளிவுபட எடுத்துரைத்தனர்.

அவர்தம் உயிர்த்தியாகங்கள் அனைத்தும், எவருக்கும் பயனில்லாமல் இனத்தின் அழிவுக்குக் காரணமாகி, வீணாய்ப் போயிற்று என இன்று பலர் உரைக்கின்றனர். நிச்சயம் நான் அப்படிக் கருதவில்லை.

காலாகாலமாக இனக் கலவரங்கள் என்ற பெயரில், தமிழர்களைச் சீண்டி விளையாடிய இனவெறியர்கள், அஞ்சி நடுங்கும் அளவிற்கு, அந்த இளைஞர்கள் ஆற்றல்காட்டியே மறைந்திருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல உலக வரைபடத்தில் ஒரு புள்ளியாய்த் தோன்றும், சின்னஞ்சிறு இலங்கையின் உள்ளிருந்த சிறுபான்மை இனமாகிய தமிழர் இனம்பற்றி, இன்று அமெரிக்காவும், பிரித்தானியாவும், இந்தியாவும், ஐ.நா.சபையும், அக்கறையோடு 'கொடு இவர்கள் உரிமையை' என்று, வரிந்து கட்டி நிற்கின்றன என்றால்,அதற்குக் காரணம் ஆயுதம் ஏந்திப்போராடத் தலைப்பட்ட, அத்தனை இளைஞர்களினதும் உயிர்த்தியாகங்களே.

பெரிய நாடுகளின் கைப்பொம்மைகளாகிப் பேதப்பட்டு, ஆயுதக் குழுக்கள் ஒன்றோடு ஒன்று மோதி பலவீனப்படாது இருந்திருந்தால், இன்று நமக்காக யாரும் பேசாமல், நாமே நம் உரிமையைப் பெற்றிருத்தல் கூடும்.

கைக்கெட்டிய தூரத்தில் கனி வந்தபோது கால் தவறி வீழ்ந்தவர்களானோம். என்ன செய்வது? விதியின் விளையாட்டு !

வலிமையுற்ற தமிழ்த்தலைவர்கள் பலர், தமது முதுமையாலும், நம்மவரின் முட்டாள்தனத்தாலும் மடிந்து போனதால், போராளிகள் முற்றாய் அழிக்கப்பட்டு போர் முடிந்த நிலையில், மீண்டும் ஜனநாயக வழியில் தமிழர்கள் நடக்க வேண்டி வந்த போது,ஆங்காங்கு சிதறிக் கிடந்த அத்தனை தலைவர்களையும் ஒன்றுதிரட்டி, புதிதாய்த் தம் தலைமையைக் கட்டியெழுப்பவேண்டிய சூழ்நிலை தமிழர்க்கு ஏற்பட்டது.

புலிகளின் காலத்தில் அஞ்சி ஒடுங்கி அலமந்து போயிருந்த, இரண்டாம், மூன்றாம், நான்காம் கட்டத் தலைவர்கள் எல்லாம்,தாம் இனத்திற்காகச் செய்த சிறு சிறு தியாகங்களைக்கூட, பூதக்கண்ணாடியூடு காட்டி தமிழர்களிடம் புகழ் பெற நினைந்தார்கள்.

உயிர் அச்சம் நீங்கியதுமே அவர்கள் அனைவரையும் பதவிக் காய்ச்சல் பற்றிக் கொண்டது.

தமிழர்க்கான, ஆற்றலும், அறிவும், தியாகமும் மிக்க தலைவர்கள் தொகை, இல்லையெனும்படியாய் அருகிவிட்டதை அறிந்து, பொறுப்புள்ள சமுதாயப் பிரமுகர்கள் பலர், அத்தகுதிகளைக் கொண்ட ஒருவரையேனும், புதிதாய்த் தலைமைக் கட்டிலில் ஏற்றவேண்டுமென, பொறுப்போடும் விருப்போடும் முனைந்தனர்.

அதனால்தான் வடமாகாண சபைத் தேர்தல் வந்தபோது, மேற்தகுதிகளைக் கொண்ட ஒரு தலைவரைத் தேடத் தலைப்பட்டு, அத்தகுதிகள் உங்களிடம் இருப்பதை அறிந்து, அத்தனைபேரும் உங்கள் இல்லம் நோக்கிப் படையெடுத்தனர்.

ஆயிரம் தயக்கங்களின் பின்னர் நீங்கள் அரசியலில் அடியெடுத்து வைத்தீர்கள்.

அப்போது உங்கள் வருகைக்காய் வாதாடியவர்களில் நானும் ஒருவனாய் இருந்தேன்.

அளவுக்கதிகமான உணர்ச்சி வயப்பாடுதான் உங்களின் குறை!

முதலமைச்சர் பதவிக்காய் கூட்டமைப்புக்குள் போட்டியிட்டவர்கள், வேறு வழியின்றி உங்களுக்கு அப்பதவியை விட்டுத்தர, நீங்களோ அவர்களைத் தியாகிகளாய்ப் போற்றி, அவர்களின் வழிகாட்டுதலிலேயே அரசியல்பாதை அமைப்பேன் என, அளவுக்கதிகமாய் அப்போது உணர்ச்சி வயப்பட்டு அறிக்கைகள் விட்டீர்கள்.

அதுவே எனக்கு மிகையாய்த் தான் பட்டது.

அரசியலில் கால்வைத்த அத்தொடக்க காலத்தில்,உங்களிடம் பல தடுமாற்றங்கள்.

அப்போது அது குறித்து உங்களுக்கு முதல்முதலாய், "செயற்தக்க அல்ல செயற்கெடும்" என்ற தலைப்பில், நான் ஒரு பகிரங்கக் கடிதம் வரைந்தேன்.

அக்கடிதத்தில் உங்களிடம் நான் கண்ட சில குறைகளை, எடுத்துக்காட்டியிருந்தேன்.

ஆனால் அந்த எனது விமர்சனம், உங்களின் கண்ணில் பட்டதாகவே தெரியவில்லை.

மாறாக அக்கடிதம் உங்கள் மீதான எனது பகையின் வெளிப்பாடு என, உங்களுக்கு வேண்டிய சிலரால் செய்தி பரப்பப்பட்டது. வருந்தினேன்.

பின்னர் காலப்போக்கில் உங்களிடம் நிறைய மாற்றங்கள்.

உங்கள் செயற்பாடுகளில் நிறையக் குழப்பங்கள்.

அவற்றையெல்லாம் நான் அவ்வப்போது சுட்டிக்காட்டத் தவறவில்லை.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் காலத்தில், உங்களை அரசியலுக்கு அழைத்து வந்த அணிக்கு எதிராகவே, நீங்கள் செயற்பட்டதாய்த் தெரிந்தபோது மிகவும் மனம் வருந்தினேன்.

யாரோ சிலர் உங்கள் மனதில் விஷ வித்துக்களை விதைத்து விட்டதாய் நினைந்தேன்.


ஆனாலும் அங்ஙனம் நடு நிலை தவறி நீங்கள் நடக்கமாட்டீர்கள் எனும் நம்பிக்கை,

அப்போதும் என் மனதின் மூலையில் துளி அளவு இருக்கவே செய்தது.

ஆனால் அந்த நம்பிக்கையும் சில காலத்தின் முன் நாசமாயிற்று.

'தமிழ்மக்கள் பேரவை' அமைககப்பட்ட போது தங்களின் செயற்பாடுகள், நீங்கள் தடுமாறி நிற்கிறீர்கள் என்பதைத் தெளிவாக்கிற்று.

பேரவை அமைக்கப்பட்ட விதம், அதில் இரகசியமாய் நிகழ்ந்த தங்களின் பங்கேற்பு, அங்கு வெளியிடப்பட்ட மாறுபாடான தங்களின் அறிக்கைகள் என்பவை, தங்கள் குழப்பத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின.



அதுவரை விமர்சனங்களுக்கு அப்பாலானவர் என்று கணிக்கப்பட்டிருந்த நீங்கள்,கடுமையான வமர்சனங்களுக்கு ஆளாகத்தொடங்கினீர்கள்.

அதுகண்டு என் நெஞ்சம் வலித்தது.

கூட்டமைப்பின் தலைமையிலும் சில குழப்பங்கள் இருந்ததால், கூட்டமைப்பை முழுமையாய் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும் என, நான் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அவர்களில் இருந்த தவறுகளை தாங்கள் திருத்த முயற்சிக்காததும், அவர்களின் தவறுகள் திருத்தப்பட முடியாதவை என இனங்கண்ட பட்சத்தில், கட்சியையும், பதவியையும் துறந்து வெளிவந்து, புதிய தலைமையை ஸ்தாபக்க நினைக்காததும் எனக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தன.

அவற்றின் மேலாய் மாற்று அணிகளுடன் மறைமுகத் தொடர்புகள் பேணி, தலைமைக்குள் தாங்கள் உட்பகை விளைக்க முற்பட்டபோது,நான் பெரிதும் கவலையுற்றேன்.

கொழும்பிலேயே பலகாலம் வாழ்ந்ததால், சிங்கள மக்களுடனும் சிங்களப் பிரமுகர்களுட னும் சிங்களத் தலைவர்களுடனும் தொடர்புபட்டு வாழ்ந்த தாங்கள், தமிழர்களின் தலைமையேற்ற போது, தமிழர்க்கும் சிங்களவர்க்குமான நட்புப்பாலம் வலிமை பெறும் என்று நினைத்திருந்தேன்.

ஆனால் அந்த எனது கனவு நனவாகவில்லை.

நீங்களும் சாதாரண அரசியல் தலைவர்களைப் போல, பேரினத்தைச் சார்ந்த தலைவர்கள், நிர்வாகிகள் என பலருடனும் பகைத்து நின்று, கொஞ்சநஞ்சமிருந்த நட்புப் பாலத்தை மேலும் சிதைக்கத் தலைப்பட்டீர்கள்.

சிங்கள இனத்துடன் நீங்கள் காட்டிய பகை, தமிழ்மக்களின் ஆதரவைத் தங்களுக்கு அதிகம் பெற்றுத் தந்தது என்னவோ உண்மைதான்.

தாங்கள் தலைமையேற்ற மாகாண சபையின் செயற்பாட்டின்மையைக் கூட, அந்த ஆதரவு ஓரளவு மறைத்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

கடந்த முப்பதாண்டுகளாக பகையும், போருமாய் வாழ்ந்துவிட்ட பழக்கத்தால்,நம் தமிழ் மக்களுக்கு பகைபற்றி உரத்துக் கூவும் தலைவர்களையே அதிகம் பிடித்தது.

நடைமுறைச் சாத்தியமற்ற அரசியல் நகர்வுகளை, ஆதரித்து ஆதரித்து அடி வாங்கிய அனுபவம் பெற்றபின்னும், தமிழர்களின் அனுபவ அறிவாற்றல் வளர்ந்ததாய்த் தெரியவில்லை.

அரசியலில் குதித்துத் தாங்கள் தேர்தலில் பெருவெற்றி பெற்ற போது, சிங்கள மக்களிடம் நம் சமாதானச் செய்தியைக் கொண்டு செல்லுங்கள் என்று,உங்களிடம் கோரிக்கை விட்டிருந்தேன்.

இந்நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் பௌத்தபீடங்களை நாடிச்சென்று, அங்கிருந்து 'தமிழர்கள் சிங்களவர்களின் பகைவர்கள் அல்லர்' எனும் செய்தியை, உரத்து உரையுங்கள்என்று வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

அதுபற்றி எனது கடந்த கட்டுரையில் கூட குறிப்பிட்டிருக்கிறேன். அவை ஏதும் கவனிக்கப்பட்டதாய் அப்போது தெரியவில்லை.

ஆனால் ஆச்சரியமாய் மனதை மகிழ்விக்கும் ஒரு செய்தியைப் பத்திரிகைகள் சொல்லின.

தமிழில் தேசியகீதம் பாடப்பட்டதைப் பாராட்டி, நீங்கள் யாழில் உள்ள நாகவிகாரைக்குச் சென்று வழிபாடாற்றிய செய்தியே அது.

நாகவிகாரையிலிருந்து, 'பேரினத்தார் சமாதானப் பாதையில் ஓரடியை முன் வைத்தால், தமிழர்கள் பத்தடியை முன் வைப்பார்கள்' என்று, தங்களால் வெளியிடப்பட்ட செய்தியை,சிங்கள ஊடகங்கள் அனைத்தும் பரபரப்பாய் வெளியிட்டன. அதுகண்டு அளவற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

(தொடரும்)

# க.பொ.த (சா/த) இல் கணித பாடப்பரீட்சை-2015 மற்றும் புதிய பாடத்திட்டம்-2016; ஓர் மீள்பார்வை

மாணவர்களின் பாடசாலைக் கல்வியில் மிகவும் முக்கிய ஓர் பரீட்சையாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விளங்குகின்றது. ஏனெனில் உயர்தரத்தை தொடர்வதற்கான ஓர் பரீட்சையாகவும் வேலையுலகில் நுழைவதற்கான அடிப்படைத் தகைமைகளை உள்ளடக்கியதாகவும் இப்பரீட்சையே கருத்திற்கொள்ளப்படுகின்றது. இதிலும் குறிப்பாக கணிதபாடம் தொடர்பாக ஆராயவேண்டியது இத்தருணத்தில் மிக இன்றியமையாததாகும். அந்தவகையில் 2008 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட கலைத்திட்டத்தின் பிரகாரம்முதற்தடவை பாடசாலை பரீட்சார்த்திகளாக மாணவர்கள் தோற்றிய இறுதிப் பரீட்சையே 2015 இல் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சை ஆகும். இப்பரீட்சையில் கணிதபாடம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றமை அனைவரும் அறிந்திருக்கக்கூடும். மறுபுறம் பரீட்சை எதிர்பார்ப்புக்கள் இந்தளவிற்கு அமைந்திருந்ததா? என்ற கேள்விகளும் நம்முள் எழாமல் இருந்துவிடமுடியாது. ஏனெனில் பழைய கலைத்திட்டத்தின் இறுதிப்பரீட்சை என்றதால் சற்று இலகுவான வினாத்தாளாக அமையக்கூடும் என்றுகூட எண்ணியிருக்கலாம். இது தொடர்பாக சற்று நோக்கின் பகுதி I சற்று இலகு தன்மையைக் கொண்டிருந்தமையையும் பகுதி II இல் வினாக்கள் கடினத் தன்மையுடன் காணப்பட்டதா கவும் மாணவர் மட்டங்களில் கருத்துக்களை அறிய முடிந்துள்ளது.

மேலும் உயர்தரம் கற்பதற்கு க.பொ.த. (சா/த) இல் கணித பாடத்தில் குறைந்தது சாதாரண சித்தியேனும் பெற்றிருக்க வேண்டும். எனினும் அண்மைக் காலங்களில் கணிதபாடச் சித்தி இல்லாமலும் உயர்தரத்தில் கல்வி கற்க முடியும் என்ற பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு வந்தமை குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும். எனினும் இது தொடர்பாக உறுதிப்படுத்தக் கூடியதாக தகவல்கள் எதுவும் இதுவரையில் இல்லையென்றே கூறமுடியும். அத்துடன் அநேகமாக வேலைவாய்ப்புக்கள் பெறுகின்ற சந்தர்ப்பங்களிலும் கணிதபாடச் சித்தி கருத்திற் கொள்ளப்படுகின்றது. மற்றும் போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்பவர்கள்கூட உளச்சார்பு வினாக்களைக் கையாள்வதில் கணித அடிப்படை விடயங்களையே பிரயோகிக்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து கணித பாடச்சித்தியின்மை என்பது எந்தளவிற்குச் சாத்தியமானது என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும். அத்துடன் இன்றைய மாணவர்கள் கணிதபாடச் சித்தியுடன் உயர்தரம் நுழைய வேண்டும் என்கின்ற மனநிலை எல்லோரிடத்திலும் மலரவேண்டும். இதுவே அவர்களின் எதிர்கால உலகிற்கான ஓர் அடித்தளமாக அமையும்.

இந்த வகையில் நடந்தேறிய க.பொ.த (சா/த)-2015 கணித வினாத்தாளை கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது,

✦ வரைபில் X ஆள்கூறுக்கேற்ற y இன் பெறுமானம் வழமையாக சமச்சீர்தன்மையைக் கொண்டே பிரதியிடாது பெறக்கூடியதாக விருக்கும். ஆனால் இம்முறை பிரதியிட்டுப் பெறவேண்டும்.

✦ கேத்திர கணித வினாக்களுக்கு மேலதிகமாக திண்மங்களின் கனவளவு கூட்டல் விருத்தி, குறிப்பாக இருபடிச் சமன்பாடு (அனைத்துப் பகுதி வினாக்களிலும்) ஆகிய பகுதிகளிலும் எனக்காட்டுக எனும் சொற்பதத்துடன் கூடிய வினாக்கள் காணப்பட்டன.

✦ கேத்திர கணித வினாக்களுக்கு மேலதிகமாக பங்கிலாபம், இருபடிச்சமன்பாடு, அமைப்பு ஆகிய வினாக்களிலும் காரணங்களுடன் எடுத்துரைத்தல் அமைப்புடைய வினாக்கள் இடம்பெற்றிருந்தன.

➔ மாணவர் மத்தியில் வினாத்தாள் தொடர்பாக ஒருங்கமை சமன்பாடு பின்னத்தில் அமைந்திருந்தமையால் தீர்ப்பதில் இடர் பட்டிருந்தனர்.

✦ கனமூலக் குறியீட்டினை மாணவர்கள் சரிவர இனங்கண்டு கொள்ளாமை

➔ வினாத்தாள்மதிப்பீட்டினூடாக


✦ பொருத்தமான அலகுகளை இடுவதில் இடர்பாடு

✦ உரிய முறையில் செய்கை வழிகளை அணுகாமை

✦ பெரும்பாலான வினாக்களின் இறுதிப்பகுதி வினாக்களுக்கு அதிகமானோர் விடையளிக்காமை (இவ்வினாக்கள் தர்க்கித்தல், சிந்தித்தல் போன்ற உயர் மட்ட திறன் களைக் கொண்டவை)

✦ பகுதி IB இற்கும் ஒரு சிலர் வேறு எழுதுதாளைப் பயன்படுத்தியமைபோன்ற விடயங்களை அவதானிக்க முடிந்துள்ளது.

இறுதியாக நடைபெற்ற பரீட்சையில் ஆரைச்சிறையின் சுற்றளவு, பரப்பளவு காண்பது தொடர்பான வினா அமைப்பினை ஒத்தவினா கடந்த **மேல் மாகாண** மாதிரி வினாத்தாளி லும் காணப்பட்டது. இவ்வினாத்தாள் **வலம்புரி** பத்திரிகை இல் வெளியாகியிருந்தது. இதைவிட இதற்கு முன்னரும் வரைபு வினாவொன்று மேல் மாகாண வினாத்தாளை ஒத்ததாக அமைந்திருந்ததையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துகின்றேன்.



இந்நிலையிலேயே இவ்வாண்டில் (2016) அறிமுகப்படுத்தப் பட்ட புதிய கலைத்திட்டத்தின் பிரகாரம் முதலாவது பரீட்சை இவ் வருடம் டிசெம்பரில் நடைபெறவிருக்கிறது. எனவே இப்பரீட்சை தொடர்பாக எதிர்பார்க்கைகளும் இன்று ஆராயப்படவேண்டியதொன்றாகும். இதற்கமைய க.பொ.த (சா/த) முழுமையான கணித பாட வினாத்தாள் கருப்பொருளுக்கமைவாக நிறையிடப்படும் விதத்தை நோக்குவோம்.


| தொனிப்பொருள் | சதவீதம் | |
|---|---|---|
| | 2008 இற்கும் அதற்குப் பின்னர் 2015 வரை | 2016 இற்கும் அதற்குப் பின்னரும் |
| எண்கள் | 15% | 22% |
| அளவீடுகள் | 15% | 15% |
| அட்சரகணிதம் | 25% | 20% |
| கேத்திரகணிதம் | 25% | 23% |
| புள்ளிவிபரவியல் | 10% | 10% |
| தொடைகளும் நிகழ்தகவும் | 10% | 10% |

எனவே எண்கள், அட்சரகணிதம், கேத்திரகணிதம் ஆகிய தொனிப்பொருட்களில் நிறையிடப்படும் விதம் மாற்றமடைந்துள்ளமையை புதிய பாடத்திட்டத்தில் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக எண்கள் எனும் பகுதிக்கு அதிகளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை இதன்மூலம் அவதானிக்கமுடிகிறது. இந்நிலையில் வினாத்தாள் அமைப்பை நோக்கும் போது,

| வினாத்தாள் -I | |
|---|---|
| 2 மணித்தியாலங்கள் | |
| பகுதி A | பகுதி B |
| 25 வினாக்கள் (குறுகிய விடை எழுதும் வினாக்கள்) | 5 வினாக்கள் (கட்டமைப்புக்கட்டுரை வகையான வினாக்கள்) |
| 25×2 = 50 புள்ளிகள் | 5×10 = 50 புள்ளிகள் |

| வினாத்தாள் -II | |
|---|---|
| 2 1/2 மணித்தியாலங்கள் | |
| பகுதி A | பகுதி B |
| 6 வினாக்கள் (அட்சர கணித வினாக்கள்3 உள்ளடங்கலாக) | 6 வினாக்கள் (கேத்திர கணித வினாக்கள்3 உள்ளடங்கலாக) |
| 5 வினாக்கள் செய்யவேண்டும் | 5 வினாக்கள் செய்ய வேண்டும் |
| 5×10 = 50 புள்ளிகள் | 5×10 = 50 புள்ளிகள் |

பகுதி IA இல் 30 வினாக்கள் 25 ஆக மாற்றப்பட்டுள்ளமையும் ஒவ்வொரு சரியான விடைக்கும் 2 புள்ளிகள் வழங்கப்படுவதாலும் செய்கை வழிகள் எதிர்பார்க்கப்பட வாய்ப்புண்டு. பகுதி II A இல் அட்சரகணிதத்தில் 3 வினாக்களும் பகுதி IIB இல் கேத்திர கணிதத்தில் 3 வினாக்களும் அமைவதால் கேத்திர கணித வினாக்களுக்கான பயிற்சியும் தயார்படுத்தலும் கடந்த காலங்களை விட மிக அவசியம் என்பது புலனாகின்றது.



வி.ஞானசிங்கம்,
ஆசிரியர்
மு/வற்றாப்பளை
மகா வித்தியாலயம்

எனவே மாணவர்கள் கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

1. வாசிப்பு ஆற்றல் (Reading Ability)

முதலில் வினாவைச் சரியாக வாசிக்க வேண்டும்.

2. கிரகித்தல் (Comprehension)

வாசித்த வினாவை உள் வாங்கி தமது சொந்தமொழி நடையில் விளக்கிக் கூறமுடிதல்

3. நிலை மாற்றுதல் (Transformation)

மாணவரால்விடையைக்காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய கணிதச்செய்முறையைத் தெரிவு செய்தல் (உதாரணமாக மொத்த எண்ணிக்கைஎனின்கூட்டவேண்டும் எனவும் வித்தியாசமெனின் கழிக்க வேண்டும் எனவும்)

4. செயன்முறைத்திறன் (Process Skill)

தேவையான கணிதச் செய்கைகளைச் சரியாகச் செய்தல் (உதாரணமாக மொத்த எண்ணிக்கை எனின் கூட்டி சரியான விடையைப் பெறல்)

5. சரியாகக் குறிக்கும் திறன் (Encoding Ability)

எண்ணைப் பிழையின்றி எழுதுதல் (விடைக்குரியஎண்ணை சரியாகத் தீர்மானித்திருப்பினும் அதனைச் சரியாக எழுதுவதைக் குறிக்கும்)

எனவே மேற்குறிப்பிட்ட திறன்களுக்கூடாக கணித வினாவுக்கு விடையளிக்கச் செய்வதன் மூலமும் கடந்த கால வினாத்தாள் அமைப்பின் படியே மட்டுமன்றி சற்று உயர்மட்ட வினாக்களையும் வழங்கி அவற்றைப் பரீட்சயப்படுத்திக் கொள்வதன் மூலமும் குறிப்பாக மேல்மாகாண மாதிரி வினாத்தாளைபூரணமாகச் செய்து பார்த்துவிட்டுப்பரீட்சைக்குச்செல்வதன்மூலமும்க.பொ.த. (சா/த) இல் கணித பாடப் பரீட்சையை இலகுவில் எதிர் கொள்ள முடியும்.

# ஐ.நா. முன்னாள் செயலாளர் பூத்தோஸ் காலி காலமானார்



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் பூத்ரோஸ் காலி, தனது 93 ஆவது வயதில் காலமானார்.

எகிப்தியரான இவர், ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவி வகித்த முதலாவது அரேபியராவார்.

1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக அவர் பதவியேற்ற போது, உலக நாடுகள் முதலாவது வளைகுடா போரை சந்திந்திருந்தன.

யூகோஸ்லாவியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போர் மற்றும் வளைகுடாவில் தொடர்ந்த அமைதியின்மையையும் ஆகியவற்றை உடனடி பிரச்சினையாக அவர் எதிர் கொண்டார்.

ருவாண்டா இனப்படுகொலையை தடுக்க ஐ.நா. தவறியமையை, பூத்ரோஸ் காலி விமர்சித்திருந்தார்.

பொஸ்னியா மீதான நேட்டோவின் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்ததால், அவர் அமெரிக்காவின் கோபத்திற்கும் உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# விமானத்தில் கோடிக்கணக்கில் பணம்

(தென்னாபிரிக்கா)

தென்னாபிரிக்கா நோக்கி சென்று கொண்டிருந்த சரக்கு விமானம் ஒன்றில் இருந்து கோடிக்கணக்கான தென்னாபிரிக்க பணமும் சடலம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக சிம்பாவேயின் ஹராரே சர்வதேச விமான நிலையத் தில் தரையிறக்கப்பட்ட போது இவை மீட்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்புவதற் காக விமானம் நிறுத்தப்பட்டிருந்த போது அந்த விமானத்தில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து விமானத்தில் இருந்து அடையாளம் தெரியாத சடலம் ஒன்று கைப்பற்றப்பட்ட நிலையில் விமானம் தடுத்து வைக்கப்பட்டு சோதனைக்குட்படுத்திய போது கோடிக்கணக்கில் தென்னாபிரிக்க நாட்டு பணம் மீட்கப்பட்டுளளது.

குறித்த சரக்கு விமானம் அமெரிக்க விமான நிறுவனததிற்கு சொந்தமான MD-11 trijet விமானம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விமானத்தில் இருந்த பணம் மற்றும் சரக்குகள் தென்னாபிரிக்காவின் ரிசர்வ் வங்கிக்குச் சொந்தமானவை என உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை தெரிவித்திருக்கிறது.

இந்த விவகாரத்தைத் தற்போது பொலிஸார் விசாரித்து வருவதாக சிம்பாவேயின் உள்நாட்டு விமானப்போககுவரத்துத் துறை தெரிவித்திருக்கிறது.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில அது தொடர்பான முழுமையான விசாரணைகளின் பின்னர் மேலதிக தகவல்களை வெளியிடுவதாக சிம்பாவே பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

# அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 15பேர் பலி

(பெய்ரூட்)

சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 15 பேர் உயிரி ழுந்தனர்.

வடகிழக்கு சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கைவசம் உள்ள பகுதியில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் 15 பேர் உயிரிழந்தனர் என்று கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

"அல்-ஷாத்தியில் நேற்று முன்தினம் கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர்,20 பேர் காயம் அடைந்தனர், என்று சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

சிரியாவில் 5 ஆவது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இந்தப் போரினால் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ள நிலையில், போர் நிறுத்தம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் ஜேர்மனியின் முனிச் நகரில் உலக வல்லரசுகள் உட்பட 17 நாடுகள் நடத்திய பேச்சுவார்த்தையில், சிரியாவில் போர் நிறுத்தம் செய்ய உடன்பாடு ஏட்டப்பட்டது.

அது, இந்த வாரத்தின் பிற்பகுதியில் அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுப்போர் நடந்து வரும் சிரியாவில் வைத்திய சாலைகள், பாடசாலைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 50 அப்பாவி மக்கள் கொன்று குவிக் கப்பட்டனர்.

இது போர்க்குற்றம் என கூறி பிரான்சும், துருக்கியும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால் சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத், "இந்த போர் நிறுத்தத்தின் அர்த்தம், ஒவ்வொரு தரப்பினரும் ஆயுதங்களை கீழே போட்டு விட வேண்டும் என்பது அல்ல.

அவர்கள் ஒரு வார காலத்தில் போர் நிறுத்தம் அமுலுக்கு வரவேண்டும் என்கின்றனர்.

ஒரு வாரத்தில் யாரால் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

# அதிர்ஷ்டம் இல்லை;குழந்தைகளை அநாதைகளாக்கும் ஆபிரிக்கர்கள்

ஆபிரிக்க நாடுகளில் பல்வேறு மூட பழக்க வழக்கங்களும் அதிகளவில் உண்டு. இதன் காரணமாக, ராசியில்லாதவர்கள், சூனியக்காரர்கள் என பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் கைவிடப்படும் பிள்ளைகள் எண்ணிக்கை அங்கு அதிகமாக வருகிறது:

அத்தகைய குழந்தைகளுக்கு கல்வியறிவு வழங்க லொவென என்பவர் தொண்டு நிறுவனம ஒன்றை நடத்தி வருகிறார். இவர் தனது தொண்டு நிறுவனம் மூலம் கடந்த 3 ஆண்டுகளாக சேவை செய்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த மாதம் ஒரு சிறுவன் உடலில் உடையன்றி வீதியில் சுற்றி திரிவதை பார்த்த லொவென் சிறுவனை மட்டு வைத்தியசாலையில் அனுமதத்துள்ளார். தற்போது சிகிச்சை பெற்றுவரும் அந்த சிறுவனுக்கு ஹோப் (நம்பிக்கை) என்று பெயர் வைத்துள்ளனர்.

பிறந்ததில் இருந்து துரதிர்ஷடமான செயல்கள் நடந்ததால் பெற றோர்கள் அக்குழந்தை அநாதையாக விட்டுள்ளனர்.

இது தொடர்பாக லொவென கூறியதாவது. இதைப்போன்று ஆயிரக்கணக்கான குழந்தைகள் அதிர்ஷ்டமில்லை என குற்றஞ்சாட்டப்பட்டு சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர் என கூறினார். (இ)


## தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு

நாற்று உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்ப்ட்ட 40 வருடத்திற்கு மேலான தாய்த் தென்னைகளிலிருந்து பெறப்பட்ட விதை நாற்றுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தென்னை நாற்றுக்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

நாற்றுக்களைப் பெற விரும்புபவர்கள் உடன் முற்பதிவுகளை மேற் கொண்டு எமது கிராஞ்சி தென்னந் தோட்டத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விலை:-300 நாற்றுக்கு மேல் பெற விரும்புவோருக்கு நாற்று ஒன்றிற்கு ரூபா 100/= உம் இதனை விட குறைவான நாற்றுக்களை பெற விரும்பின் 120/= இற்கு விற்பனை செய்ய முடியும்.

**முகவரி:-**

**தி.இராசநாயகம், தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(சி-3772)

**தொலைபேசி இலக்கங்கள்:**
**021 492 3118, 077 060 4950, 071 749 4370**



## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் யாழ்.மாவட்டச் செயலக ஆண்கள்,பெண்களுக்கான கூட்டு விடுதி கட்டம்-II கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச்செயலகம்,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 18.02.2016 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்டச் செயலாளர்,மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 18.02.2016 முதல் 09.03.2016 வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 2000/-கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10.03.2016 திகதியன்று பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 10.03.2016 ஆம் திகதி பி.ப 3 மணிக்கு திறக்கப்படும்.கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

8.Prebid Meeting 03.03.2016 முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுதொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத்தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/ ADM/ Con. Work/ M.Quarters/ 11.03.2016 | யாழ்மாவட்டச் செயலக ஆண்கள் கூட்டு விடுதி கட்டம்-II | 18.84 | 5 மாதம் | C6 | 188, 500.00 | 2000/- |
| JF/ ADM/ Con. Work/ M.Quarters/ 11.04.2016 | யாழ்மாவட்டச் செயலக பெண்கள் கூட்டு விடுதி கட்டம்-II | 18.84 | 5 மாதம் | C6 | 188, 500.00 | 2000/- |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-3773)

# சுவிட்சர்லாந்தில் உதயமாகும் நினைவுச் சின்னம் 15ஆண்டுகள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

உலகையே தன் நகைச் சுவையால் கட்டிப்போட்ட சார்லி சாப்ளினின் வரலாறு மற்றும் அவருடைய நாடகங்களை விளக்கும் வகையில் சுவிஸில் அவர் வசித்த வீடு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நகைச்சுவைக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கியதுடன், தனது கருத்துமிக்க நகைச்சுவையால் ஹிட்லரையே மிரட்டிய சார்லி சாப்ளின் பிரித்தானியாவின் தலைநகரானமான லண்டனுக்கு அருகில் பிறந்தார்.

புகழின் உச்சியில் இருந்தபோது, சார்லி சாப்ளின் பொதுவுடைமை கொள்கைகளுக்கு துணைபோவதாக குற்றம்சாட்டிய அமெரிக்கா அவரை 1950 காலங்களில் நாட்டிற்குள் நுழைய தடை விதித்தது.

இதனால் மனமுடைந்த சார்லி சாப்ளின் தனது மனைவி ஊனா மற்றும் 8 குழந்தைகளுடன் சுவிஸின் வாட் மாகாணத்தில் உள்ள Corsier-sur-Vevey என்ற கிராமத்தில் குடியேறினார்.

சார்லி சாப்ளின் இறுதியில் சுமார் 25 வருடங்கள் இந்த வீட்டில் தான் வசித்து வந்துள்ளார்.

பின்னர், உடல் நலக் குறைவால் உயிரிழந்ததும் இதே கிராமத்திற்கு அருகில் உள்ள கல்லறையில் அவரது மனைவியின் சமாதிக்கு அருகில் புதைக்கப்பட்டார்.

சார்லி சாப்ளின் வாழ்ந்த இந்த வீட்டை அருங்காட்சியகமாக மாற்ற கடந்த 15 ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், சில இடையூறுகள் காரணமாக இந்த பணி தள்ளிப்போனது.

இந்நிலையில், தற்போது இந்த வீடு அருங் காட்சியகமாக மாற்றப்பட்டு உள்ளதாகவும், இதில் சார்லி சாப்ளினின் வரலாறு, அரிய புகைப்படங்கள், நாடகங்களை விபரிக்கும் தகவல்கள் உள்ளிட்ட அனைத்தும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 16ஆம் திகதி சார்லி சாப்ளினி 127 ஆவது பிறந்த நாள் அன்று இந்த அருங்காட்சியகம் அதிகார பூர்வமாக திறக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ)

# போதை மருந்தைக் கடத்திய நபருக்கு கொடூர தண்டனை

## ரஷ்ய பிரிவினைவாதிகள் அட்டகாசம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் போதை மருந்து கடத்திய நபருக்கு ஐ.எஸ். குழுவினர் போன்று அங்குள்ள பிரிவினைவாதிகள் தண்டனை வழங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கு உக்ரைன் பகுதியில் வைத்து ரஷ்ய' பிரிவினைவாதிகள் இந்த கொடூர தண்டனையை நிறைவேற்றியதுடன் அதை காணொலியாக பதிவிட்டுள்ளனர்.

ரஷ்யாவில் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வந்த ஒரு நபரை கைது செய்துள்ள அந்த பிரிவினைவாதிகள், அவரை மரத்தாலான தூணில் கைகளை இணைத்து கட்டி வைத்து முதலில் கொடுமைப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பிரிவினைவாதிகளில் ஒருவர் வந்து அந்த போதை மருந்து கடத்தல் நபர் மீது மின்சாரம் பாயும் கம்பியால் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான நபர் பலமுறை கெஞ்சியும் அவரை விடுவிக்க அந்த பிரிவினைவாதி ஒப்புக் கொள்ளவில்லை,

போதை மருந்து கடத்தல் நபர்களை கூண்டோடு அழிப்பதுவே தங்களின் கடமை என அட்டகாசம் செய்யும் அந்த பிரிவினைவாதி, போதை மருந்து கடத்தும் நபர்களுக்கு இதுவே தண்டனை எனவும் அந்த காணொலியில் பிரிவினைவாதிகள் கூறுகின்றனர். (இ)

# ஈராக்கில் இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியதில் 9 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவ ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலியானதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரமான பஸ்ராவில் இருந்து இரண்டு இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்கள் எம்ஐ-17 ரக ஹெலிகொப்டரில் குட் நகருக்கு புறப்பட்டுச் சென்றனர். குட் நகரை நெருங்கியபோது தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால், தரையில் விழுந்து நொறுங்கியது. இதில், 9 பேரும் உயிரிழந்துவிட்டதாக இராணுவ பிரிகேடியர் ஜெனரல் தெரிவித்தார்.



ஈராக்கில் இராணுவ ஹெலிகொப்டர்கள் விபத்தில் சிக்குவது இது முதல் முறையல்ல. 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த விபத்தில் பைலட் பலியானார். எம்.பி. உள்ளிட்ட சிலர் காயங்களுடன் உயிர்தப்பினர்.

ஏப்ரல் மாதம் பக்தாத்தில் நடந்த விபத்தில் லெப்டினன்ட் ஜெனரல் பலியானார். ஜூலை 2010 இல் நடந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். இதுதவிர தீவிரவாதிகளின் தாக்குதல்களினாலும் இராணுவ ஹெலிகொப்டர்கள் சேதமடைந்துள்ளன. (இ)

# 12 வயதேயான சிறுமியை திருமணம் செய்த வயோதிபர்



(பெய்ரூட்)

லெபனான் நாட்டில் 12 வயது சிறுமியை முதியவர் ஒருவர் திருமணம் செய்து கொண்ட சம்பவம் பொதுமக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

லெபனான் நாட்டின் கடற்கரை பகுதியில் அதிர்ச்சியளிக்கும் இந்த சம்பவம் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து வெளியான வீடியோ பதிவில், முதியவரான அந்த நபருடன் 12 வயது சிறுமி திருமண கோலத்தில் இருந்துள்ளார்.

கடற்கரை பகுதியில் வைதது எடுக்கப்பட்டுள்ள இந்த வீடியோ வெளியானதும் இதுவரை 1.7 மில்லியன் பேர் பார்வையிட்டுள்ளனர்.

அந்த வீடியோ பதிவுடன் லெபனான், சிரியா மற்றும் உலகின் பல பகுதிகளில் நடைபெற்று வரும் கட்டாய சிறுவர் திருமணம் குறித்து கேள்வி எழுப்பும் இன்னொரு பக்கத்தையும் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 15 மில்லியன் சிறுவர்களை, அவர்களுக்கு 8 வயது நிரம்பும் முன்னரே திருமணத்திற்கு கட்டாயப் படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

இந்த இளம்பெண்களை திருமணம் செய்து கொள்பவர்கள் பெரும்பாலும் 60 அல்லது 70 வயது கடந்த முதியவர்கள் என அதிர்ச்சித் தகவலை வெளியிடுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மன்றததின் ஆய்வுகளின்படி வரும் 2050 ஆம் ஆண்டுக்குள் உலகெங்கிலும் உள்ள 1.2 பில்லியன் சிறுமிகள் கட்டாயத்திருமணத்திற்கு தள்ளப்படலாம் என தெரிவித்துள்ளது.

சமூக ஆர்வலர்களின் தொடர் போராட்டங்களின் காரணமாக லெபனானில் திருமண வயதை மாற்றியமைத்துள்ள சட்டம் நிறைவேறும் என நம்பப்படுகிறது.


சிறுமிகளை கட்டாயத் திருமணம் செய்து வைக்கும் இந்த கொடுமைக்கு எதிராக போராடும் ஆர்வலர்கள் தயார் செய்துள்ளதுதான் அந்த கடற்கரை திருமணம்.

அந்த வீடியோவில் இடம் பெற்றுள்ள சிறுமி உள்ளிட்டவர்கள் நடிகர்களே என அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# குரைத்துக் காட்டிய ஹிலாரி கிளிண்டன்

## தேர்தல் பிரசாரத்தில் சம்பவம்

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் ஜனநாயக கட்சியை சேர்ந்த ஹிலாரி கிளிண்டன் தேர்தல் பிரசாரத்தில் நாயை போல் குரைத்து நடித்து காட்டிய சம்பவம் பொது மக்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது.




அமெரிக்காவின் Nevada மாகாணத்தில் உள்ள Reno என்ற நகரில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான வாக்காளர்கள் மத்தியில் ஹிலாரி கிளிண்டன் நேற்று முனதினம் உரையை தொடங்கியுள்ளார்.

பேச்சை தொடங்கியவுடனே எதிர்க்கட்சியான குடியரசு கட்சி வேட்பாளர்களை சரமாரியாக விமர்சனம் செய்துள்ளார்.

'2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலைக்கு அப்போதைய ஆட்சியாளர்கள் தான் காரணம்' என குடியரசு கட்சி வேட்பாளர்கள் அடிக்கடி குற்றம் கூறி வருகின்றனர்.

இவர்கள் பொய்யான பிரசாரம் செய்து வருவதை மக்கள் நன்கு அறிவார்கள்' எனக்கூறிய ஹிலாரி ஒரு உதாரணத்தையும் சுட்டி காட்டியுள்ளார்.

'ஒரு ரேடியோவில் விளம்பரம் ஒன்றை பார்த்தேன். அதில் நடிப்பவர்கள் பேசும் போது அதில் பொய் கலந்திருந்தால், அருகில் உள்ள நாய் குரைத்து அந்த தவறை சுட்டிக் காட்டும்.

இதேபோல், குடியரசு கட்சி வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபடும் இடங்களில் எல்லாம் இதுபோன்ற நாய்களை அனுப்பினால், அவர்கள் வாயை திறந்தாலே இந்த நாய்கள் குரைத்து அவர்கள் பேசுவது எல்லாமே பொய் தான் என்பதை நிரூபித்து விடும்' என நகைச்சுவையாக பேசியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல், இந்த கூட்டத்தில் ஹிலாரி ஒரு நாயை போல் குரைத்து காட்டியதும் அங்கு கூடியிருந்த வாக்காளர்கள் மத்தியில் பலத்த சிரிப்பொலியை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# தேசிய ஜம்போறி நிகழ்வு யாழில் நாளை ஆரம்பம்

## மாற்றுப் பாதைகளை பயன்படுத்த அறிவுறுத்து

இலங்கை சாரணர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 9 ஆவது சாரண தேசிய ஜம்போறி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும் சூழவுள்ள பகுதியிலும் நடைபெறவுள்ளது. 1000 இற்கும் மேற்பட்ட சாரணர்கள் பங்குபற்றுவதனால் 20.02.2016-26.02.2016 ஆகிய தினங்கள் பிரதான வீதிகள் சிலவற்றை தற்காலிகமாக மூடுவதற்கு நகரப் போக்குவரத்துப் பொலிஸாருடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு மனம் வருந்துவதாக ஜம்போறி செயலாளர் அறிவித்துள்ளார்.

நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ள பிரதான ஏ-9 வீதி, பிரதான தபால் நிலையத்திற்கு முன்னால் உள்ள கே.கே.எஸ்.வீதி, புல்லுக்குளம், வீரசிங்கம் மண்டபத்திற்கு இடையிலுள்ள வீதி, மணிக்கூட்டு சந்தி, புல்லுக்குளம் மற்றும் நூலகம் செல்லும வீதி, மத்திய கல்லூரி கிறிஸ்தவ ஆலயம் இடையிலான சிறு வீதிகள், கோட்டை மற்றும் கடற்கரை வீதிகள் போன்ற வீதிகளுக்குப் பதிலாக வைத்தியசாலை வீதி, முதலாம் குறுக்குத் தெரு, பலாலி வீதி, கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி போன்ற மாற்றுவழிகளைப் பயன்படுத்துமாறு மாவட்ட மக்களை ஆணையாளர் கேட்டுள்ளார். (இ

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-17.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.17 | 146.17 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.49 | 209.67 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 157.39 | 163.64 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.86 | 148.79 |
| டொலர் | கனடா | 101.90 | 106.03 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.01 | 104.73 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.66 | 104.51 |
| ரூபா | இந்தியா | 2.1009 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6481 |
| குவைத் | டினார் | 481.5138 |
| ஓமான் | ரியால் | 373.7333 |
| கட்டார் | ரியால் | 39.5173 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3668 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1768 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 80 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 160 | 160 | 200 | 160 | 200 |
| தக்காளி | 50 | 50 | 50 | 40 | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 150 | 100 | 160 | 160-280 | 240 | 240 | 180 |
| பூசணி | 60 | 50 | 60 | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 60 | 30 | 30 | 50 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 45 | 40 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 50 | 80 | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 120 | 50 | 80 | 80 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 50 | 80 | 50 | 70 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 70 | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 250 | 150 | 170 | 160 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 450 | 400-600 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 80 | 80 | 60 | 80 | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 40 | — | 60 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 15 | 25 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 50 | 50 | 80 | 60 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 120 | 150 | 100 | 140 | 140 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 50 | 80 | 60 | 120 | 60 |
| முள்ளங்கி | 20 | 30 | 30 | 40 | 60 | 60 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தமிழ்நாட்டில், பொதுமக்களுடன் போராளிகள் மோதல் 105

...உடனே இலங்கை போராளிகள் வழிநெடுக இயந்திர துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே அவர்களின் வீட்டுக்குள் நுழைந்து விட்டனர். அப்போது அங்கு ஏராளமான பேர் கூடிவிட்டனர்.

**கல் வீச்சு! தீ வைப்பு!**

துப்பாக்கிக் குண்டு பாய்ந்த திருநாவுக்கரசு ரவி.குரு மூர்த்தி ஆகிய 3 பேர்களையும் பொதுமக்கள் ஆட்டோ ரிக்ஹாவில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். அந்த ஆட்டோவைப் பின் தொடர்ந்து ஏராளமான பேர் சென்றனர்.

அப்போது போராளிகள் தங்கியிருந்த வீட்டின் மீது பொதுமக்கள் சரமாரியாகக் கற்களை வீசினார்கள்.

வீட் டின் முன்னால் இருந்த மரக் கதவுக்குத் தீ வைக்கப்பட்டது. இதில் ஒரு மோட்டார் சைக்கிள் எரிந்துவிட்டது.

உடனே வீட்டுக்குளிருந்த போராளிகள் பக்கத்து வீட்டு மாடி மீது ஏறி நான்கு பக்கமாக நின்றுகொண்டு கூட்டத்தை நோக்கி தொடர்ந்து சுட்டனர்.

தகவல் கிடைத்ததும் ஐ.ஜி.ஸ்ரீபாலும், நானும் விரைந்த சென்றோம். துணை கமிஷனர்களும் மற்ற அதிகாரிகளும் பொலிசாரும் விரைந்து வந்தனர்.

**சரண் அடையுங்கள்**

வீட்டின் முன்னால் கூடி நின்ற பொது மக்களுக்குப் பொலிசார் சமாதானம் சொல்லி அவர்களைக் கலைத்தனர்.

மாடி மீது நின்று கொண்டிருந்த போராளிகள் கையில் துப்பாக்கியுடன் இருந்தார்கள். துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டுச் சரண் அடையும்படி நாங்கள் உத்தரவிட்டோம். உடனே அவர்கள் துப்பாக்கியைப் பொலிசார் வசம் ஒப்படைத்தனர்.

அந்த மாடியில் இருந்த 6 இயந்திர துப்பாக்கிகள், 2 பெரிய கைத்துப்பாக்கிகள் (ரிவால்வர்), 1 சின்ன துப்பாக்கி (பிஸ்டர்), 2 வெடி குண்டுகள் ஆகியவற்றைப் பொலிசார் பறிமுதல் செய்தனர்.

**600 குண்டுகள்**

வீட்டுக்குள் பொலிசார் சோதனை செய்தனர். அங்கு வெடிக்காத 600 துப்பாக்கிக் குண்டுகள் இருந்தன. மற்றும் வெடிக்கப்பட்ட குண்டுகளும் இருந்தன. ரோடுகளில் குண்டுகள் வெடித்துச் சிதறிக் கிடந்தன.

அவற்றை வைத்துக் கணக்குப் பார்த்த போது ஏறத்தாழ 61 முறை அவர்கள் துப்பாக்கியால் சுட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

மற்றும் ரூபாய் நோட்டுக்கள், துணிமணிகள், ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இயக்கத்தின் துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றினார்.

**10 பேர் கைது**

இது தொடர்பாக ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இயக்கத்தைச் சேர்ந்த 10 பேர் கைதானார்கள்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

சுரேஷ் (வயது 20), ஆனந்த் (30), ரமணன் (24), ராக்கூ (23), ரூபன் (22), ரவி (19), செல்வம் (23), செல்வராஜன் (19), பிரதீபன் (18), சதீஷ் குமார் (24).

இவர்களில் சுரேஷ், ஆனந்த், ரமணன், செல்வநாதன், பிரதீப் ஆகிய 5 பேர் காயம் அடைந்தனர். கல் வீச்சு நடந்த போது அந்தக் காயங்கள் ஏற்பட்டன. இவர்கள் ஆஸ் பத்திரியில் சிகிச்சை பெற் றனர்.

**மரணம்**

குண்டு பாய்ந்த திருநாவுக்கரசு (24) கீழப்பாக்கம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். வழியில் அவர் மரணம் அடைந்தார்.

இவர் எம்.ஏ. படித்தவர். பொதுநலத்தொண்டர். சென்னையில் வெள்ளம் வந்த போது நிவாரணப் பணியில் தீவிரமாக ஈடுபட்டவர்.


பலத்த காயம் அடைந்த ரவி (26) மிகவும் ஆபத்தான நிலையில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இவர் விறகு கடையில் வேலை பார்த்து வந்தார்.

மார்பில் குண்டு பாய்ந்து குருமூர்த்தி திண்டிவனத்தைச் சேர்ந்தவர். உறவினர் வீட்டுக்கு வந்தார் இவர் கீழ்ப் பாக்கம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

கைதான 10 பேர்கள் மீதும். இ.பி.கோ. 302 (கொலை) பிரிவின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் கூட்டம் கூடியதாகவும் பொலிஸ் அனுமதி இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் ஆயுதக் கட்டுப்பாடு சட்டத்தை மீறியதாகவும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

சென்னை நகரில் மேலும் கலவரம் ஏற்பட்டுவிடாதபடி பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இவ்வாறு தேவாரம் கூறினார்.



(தொடரும்)

# மனிதநேயம் என்றால் என்னவென்றே மகிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியாது

## சந்திரிகா கடும் விமர்சனம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மனிதநேயம் என்றால என்னவென்றே தெரியாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையார் கடும் விமர்சனம் தெரிவித்துள்ளார்.**



பிரபல அரசியல் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவருமான படுகொலை செய்யப்பட்ட விஜயகுமாரதுங்கவின் ஞாபகார்த்த நிகழ்வு நேற்று முன்தினம் அவரது பிறந்த இடமான சீதுவையில் அனுஷ்டிக்கப்பட்டது.

சந்திரிகா குமாரதுங்க, ஜீவன் குமாரதுங்க, பேராசிரியர் காலோ பொன்சேகா ஆகியோர் விஜயவின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விஜயகுமாரதுங்கவின் ஞாபகார்த்த வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருப்பது குறித்து செய்தியாளர்கள் சந்திரிகா அம்மையாரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, "விஜயவை நினைவு கூர மகிந்தவுக்கு எதுவித தகுதியும் கிடையாது. அவர் உயிருடன் இருக்கும் வரை மகிந்த அவருக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டும் சண்டை போட்டுக் கொண் டும் தான் இருந்தார். அத்துடன் விஜய குமாரதுங்க ஒரு மனித நேய வாதி. மகிந்தவை விட முற்றிலும் மாறுபட்டவர். அப்படிபட்ட ஒரு மனிதநேய வாதியை நினைவுகூர மகிந்த எந்த வகையிலும் தகுதியானவர் இல்லை. ஏனெனில் மனித நேயம் என்றால் என்னவென்றே மகிந்தவுக்குத் தெரியாது" என்றும் சந்திரிகா அம்மையார் மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக சாடியுள்ளார். (இ)

# கட்சியில் இருப்பதா? இல்லையா? அதை மகிந்தவே தீர்மானிக்கட்டும்

## சு.க.பொதுச்செயலாளர் துமிந்த தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பதா? அல்லது விலகிச் செல்வதா? என்பதனை குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தீர்மானிக்கட்டும் என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியை விட்டு விலகி வெளியேறுவதா? அல்லது கட்சியில் தொடர்ந்தம் நீடிப்பதா? என்பதனை தீர்மானிக்கும் முழு உரிமை மகிந்தவிற்கு உண்டு.

தெரிந்து கொண்டே கட்சியின் ஒழுக்க விதிகளையும் யாப்பு விதிகளையும் மீறுவது பாரதூரமான குற்றமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கவிதிகள் மற்றும் யாப்பு விதிகள் பற்றி முன்னாள் தலைவர் என்ற வகையில்மகிந்தவிற்கு பூரண தெளிவுண்டு.

எனினும் மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சயில் இணைந்து கொணட புதிய ஒருவரைப் போன்று செயற்படுகின்றார்.

இதனால் பண்டாரநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட பல ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.


எந்தவொருவரையும் பலவந்தமான அடிப்படையில் கட்சியில் வைத்துக் கொள்ள எமக்கு அவசியமில்லை.

ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் எந்தவொரு நேரத்திலும் கட்சியை விட்டு விலகிச் செல்ல முடியும். கட்சியின் கதவுகள் திறந்தே உள்ளன.

கட்சியை உடைக்க ஆங்காங்கே சூழ்ச்சி செய்யும் கூட்டங்களை நடத்தும் ஊடகங்களில்வீரர்களைப்போன்று பேசும் நபர்களுக்கு எதிராக கட்சியை நேசிக்கும் மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பிரதமர் அனைத்து மாகாணங்களுக்கும் விஜயம்

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனைத்து மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆராயப்படவுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் நேரடியாக சென்று ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பிரதமர் மதிப்பீடு செய்யவுள்ளார்.

இதன் முதல் கட்டமாக அண்மையில் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திற்கு பிரதமர் விஜயம் செய்துள்ளார்.

அடுத்த கட்டமாக தென் மாகாணத்திற்கு பிரதமர் விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களும் இந்த விஜயங்களின் போது பிரதமருடன் இணைந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம் நியமனங்களுக்கு எதிராக வழக்கு?

(கொழும்பு)

சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகிய நியமனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டே கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகிய பதவிகளுக்கான நியமனங்கள் சட்ட விரோதமானவை என அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தின் 41(இ)(6) மற்றும் 41(ஆ) 41(ஏ) ஆகிய சரத்துக்களின் அடிப்படையில் சட்டவிரோதமானது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகிய நியமனங்கள் சட்ட விரோதமானவை.

சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய திறமையான, கௌரவமான ஒரு கனவான். தனிப்பட்ட ரீதியில் அவர் பற்றி எமக்கு எவ்வித விரோதமும் கிடையாது.

எனினும் அரசியல் மயப்படுத்தப்பட்ட அடிப்படையில் சட்டமா அதிபர் பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என உதய கம்மன்பில செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### பெற்றவர் பொறுப்பும் மற்றவர் பொறுப்பும்

உங்கள் பிள்ளைகள்,உங்கள் பார்வையில் வளரும் பிள்ளைகள்,உங்கள் கண்காணிப்புக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டு நடக்கும் பிள்ளைகள் ஆகியோர் வாழ்வில் உயர்ந்தவர்களாக, சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவது இயல்பு.

விரும்பினால் போதுமா? அலாவுதீனின் அற்புத விளக்கா நம் கையில் இருக்கிறது?அதற்காக யாரேனும் முயற்சி செய்ததுண்டா என்றால்,இல்லை என்றே பெரும்பாலும் சொல்லிவிடலாம்.

முதலில் பிள்ளைகளிடத்தில் எத்தகைய பண்புகள் நிறைந்திருக்க வேண்டும் என்று கருத்தில் தெளிவு வேண்டும்.

குழந்தைகளிடம் நியாயமான-நேர்மையான துணிவு இருக்க வேண்டும்.வாழ்வில் எத்தகைய சிக்கல்களையும் சந்திக்கவும்,எதிர்பார்த்துப் போராடி முயன்று முன்னேறவும் அது மிக அவசியம்.

அடுத்ததாக அமைய வேண்டியது,தன்னம்பிக்கையாகும். குழந்தைகளிடம் குறிப்பிட்ட துறையில் அவர்களுக்குள்ள தன்னம்பிக்கையை உதாரணமாகக் காட்டி மற்றவற்றிலும் இதுபோன்றே வளர்த்துக்கொண்டால் அது எந்தஅளவுக்கு உதவும் என்பதை உணர்த்த வேண்டும். என்னால் முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் பள்ளமும் பாறையும் மிக்க வாழ்க்கைப்பாதை,பளிங்குத் தரையாலான பாதைபோல் தெரியும்.

அடுத்ததாகத் தேவைப்படுவது உற்சாகம். சாதனை என்னும் வெற்றிக்கு எலும்புக்கூடுபோல் அடிப்படை ஆதாரமாக அமைந்திருப்பது உற்சாகமாகும்.எந்தச் செயலிலும் ஓர் ஆர்வமும் விருப்பமும் ஈடுபாடும் வேண்டும். பிள்ளைகள் இவற்றைக் கடைப்பிடிப்பதற்கு எப்படியெல்லாம் உதவமுடியும் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

மற்றவர்களை மதிக்கும் பண்பைக் கற்றுக் கொடுத்து அதன் அவசியத்தை உணர்த்த வேண்டும்.இவற்றைப் பின்பற்றுவதைப் பிள்ளைகள் விரும்பாவிட்டாலும் வற்புறுத்தியேனும் வரவழைக்க வேண்டும்.

தவறுகளைக் களையும் தன்மை,அவற்றைக் கண்டு விலகும் தன்மை ஒவ்வொரு சிறிய வயதினருக்கும் அமைய வேண்டும்.இதுவே தலையாய பண்பாகும்.தெய்வ நம்பிக்கை இதற்குக் கணிசமாக உதவும்.

கல்வியில் நாட்டம் இருக்க வேண்டும்.வருங்கால வாழ்விற்குக் கல்வியின் அவசியத்தை அவர்கள் உணரும் வகையில் பெற்றவர்களும் மற்றவர்களும் நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய எதிர்பார்ப்பெல்லாம் அவர்களின் கல்விமீது தான் என்பதாகப் பிள்ளைகள் எண்ணும் வகையில் அனைவரும் நடந்துகொள்ள வேண்டும்.

எப்படியோ வளரட்டும் எல்லாம் தானாய் வந்துவிடும். விபரம் தெரியத் தெரிய சரியாகிவிடும்.வாழ்க்கையில் அடிபட்டால் புத்திதானாக வரும் என்றெல்லாம் வறட்டு வாதம் பேசிக்கொண்டிராமல் ஆக்கபூர்வமான முயற்சிகளில் இறங்கவேண்டும்.

திட்டமிடாமல் வளர்த்தால் மேற்கூறிய அவசியத் தகுதிகளுள் ஏதேனும் சில அவற்றிடம் அமையாமல் போகின்றன.வாழ்க்கை வீணாய்ப் போகிறது.

இவற்றிற்கெல்லாம் பெற்றவர்களும் மற்றவர்களும் முன்னுதாரணமாய் விளங்கவேண்டும்.

மிரட்டினால் இவையெல்லாம் வாரா.பற்றும் பாசமும் காட்டினால் நம்வழிக்கு வரும்.

இவை நம் இலட்சியமானால் நம்வீட்டுப் பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1361

## எத்தனை முட்டாள்கள்!

...சூரிய ஒளியைப் பிடிப்பதற்காகத்தான் கூடையுடன் அங்கும் இங்குமாக அலைகிறேன். சூரிய ஒளி சிக்க மாட்டேன் என்கிறது. எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை," என்றான் அவன்.

"நம் வீட்டில் உள்ளவர்களை விட இவன் பெரிய முட்டாள்தான்" என்று நினைத்த செந்தில், "கூடையில் எல்லாம் சூரிய ஒளியை பிடிக்க முடியாது. நான் சொல்கிறபடி செய்," என்றான்.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"கடப்பாரையால் உன் வீட்டுச் சுவரில் ஓட்டைபோடு. நடக்கும் அதிசயத்தைப் பார்," என்று அறிவுரை சொன்னான் செந்தில்.

கூடையோடு இருந்தவன் தன் வீட்டுச் சுவரின் ஒரு பகுதியைக் கடப்பாரையால் இடித்தான். பெரிய ஓட்டை விழுந்தது. உள்ளே சூரிய ஒளி பாய்ந்தது.

இதைக் கண்டு மகிழ்ச்சியால் கூத்தாடிய அவன், "ஐயா நல்ல வழி காட்டினீர்கள். உங்கள் அறிவுரைப்படி நடந்ததால், என் வீட்டினுள் வெளிச்சம் வந்து விட்டது நன்றி," என்றான்.



அங்கிருந்து புறப்பட்டான் செந்தில்.

வழியில், ஒரு வீட்டிலிருந்து வந்த அழுகுரல் அவன் காதில் விழுந்தது. வீட்டுக் கதவு திறந்திருந்ததால் உள்ளே நுழைந்தான். அங்கே புதிதாகச் செய்யப்பட்ட பெரிய வண்டி ஒன்று இருந்தது. அதைப் பிடித்தபடி ஒருவன் அழுது கொண்டிருந்தான். அவனைப் பார்த்து செந்தில், "ஐயா ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் ஒரு தச்சன். மரப் பலகைகள் வாங்கி வீட்டிற்குள் கொண்டு வந்து இந்த அழகான வண்டியைச் செய்தேன். கதவு சிறியதாக இருப்பதால் இந்த வண்டியை வெளியே எடுத்துச் செல்ல முடியவில்லை.

வீட்டுச் சுவரை இடித்துத்தான் இந்த வண்டியை வெளியே கொண்டு செல்ல முடியும். என் முன்னோர் கள் கட்டிய அழகிய வீடு இது. இதை இடிக்க வேண்டி வந்ததே என்றுதான் அழுகிறேன்," என்றான் அவன்.

"இந்த வண்டியைப் பிரித்து வெளியே கொண்டு வந்து, மீண்டும் இணைத்து வண்டியாக்கக் கூடாதா? அப்படிச் செய்தால் சுவரை இடிக்க வேண்டாமே," என்றான் செந்தில்.

அப்படியே அந்தச் தச்சனும் வண்டியை பிரித்து வெளியே கொண்டு வந்து திரும்பப் பூட்டினான்.

"ஐயா உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.

நல்ல வழி சொன்னீர்கள்... இப்படிப்பட்ட அருமையான வழியைச் சொன்ன நீங்கள் எல்லாம் அறிந்த ஞானியாக இருக்க வேண்டும்," என்றான் தச்சன்.

"நான் சந்தித்த எல்லாரையும் விட இவன் பெரிய முட்டாள" என்று நினைத்துக் கொண்டே அங்கிருந்து புறப்பட்டான் செந்தில்.

வழியில் விந்தையான காட்சி ஒன்றை கண்டான். வீட்டுக் கூரையின் மேல் ஒருவன் அமர்ந்து இருந்தான். பக்கத்தில் ஏணி ஒன்று சாத்தி இருந்தது. அவன் கையில் கயிறு ஒன்றைப் பிடித்து இருந்தான். அதன் மற்றொரு முனை கீழே இருந்த எருமை மாட்டின் கழுத்தில் கட்டப்பட்டு இருந்தது.

கயிற்றைப் பிடித்து எருமை மாட்டை மேலே இழுத்துக் கொண்டிருந்தான் அவன்.

அந்த மாடோ கத்தியபடி முரண்டுபிடித்தது.

"ஏன் எருமை மாட்டை இப்படிக் கொடுமைப்படுத்துகிறாய்" என்று கேட்டான் செந்தில்

"ஐயா! இது என் எருமை மாடு. இரண்டு நாட்களாக என்னால் அதற்கு உணவு ஏதும் போட முடியவில்லை. பசியால் வாடுகிறது.

இந்த வீட்டுக் கூரையில் சிறிது வைக்கோல் உள்ளது. ஏணி வழியாக நான் இங்கு வந் தேன். அதே ஏணி வழியாக ஏறி இந்த மாடும் வந்தால் வைக்கோலை மகிழ்ச்சியோடு உண்ணுமே. அந்த எண் ணத்தில் தான் மாட்டை மேலே இழுக்கிறேன்.

ஆனால், அதுவோ வர மாட்டேன் என்று தகராறு செய்கிறது. எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை," என்றான் அவன்.

"எருமை மாடு எங்காவது ஏணி வழியாகக் கூரையில் ஏறுமா? கூரையில் இருக்கும் வைக்கோலை எடுத்துக் கீழே போட்டால் மாடு உண்ணாதா?" என்று கேட்டான் செந்தில்.

"இப்படி ஒரு வழி இருப்பது எனக்குத் தெரியாமல் போயிற்றே," என்று கூறி வருந்தினான் அவன். கூரையில் இருந்த வைக்கோலை எடுத்துக் கீழே போட்டான். எருமை மாடும் அந்த வைக்கோலை உண்டது.

நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்த செந்தில், "இந்த உலகத்தில் இப்படிப்பட்ட முட்டாள்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்களை ஒப்பிடும் போது என் தாயும், மனைவியும் எவ்வளவோ மேலானவர்கள்" என்று நினைத்தவாறு ஊர் திரும்பினான்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1229 -புனித உரோம் பேரரசின் மன்னன் இரண்டாம் பிரெடெரிக் எகிப்திய மன்னன் அல்-கமீல் உடன் 10 ஆண்டு போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டான்.
- 1478 -இங்கிலாந்தின் நான்காம் எட்வேர்ட்டிற்கு எதிராக சதி முயற்சியில் இறங்கியதற்காக அவனது சகோதரன் ஜோர்ஜ் (கிளாரன்ஸ் இளவரசன்) தூக்கிலிடப்பட்டான்.
- 1797 -ட்ரினிடாட் பிரித்தானியர்களிடம் வீழ்ந்தது.
- 1832 -இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிமீன் (meteor) தோன்றியது.
- 1861 -அலபாமாவில் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்கு தலைவரானார்.
- 1865 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: வில்லியம் ஷேர்மன் தலைமையிலான கூட்டுப் படைகள் தென் கரோலினாவின் மாநில அவையைத் தீயிட்டுக் கொழுத்தினர்.
- 1911 -முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.
- 1929 -முதற்தடவையாக ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.
- 1930 -கிளைட் டொம்பா ஜனவரியில் எடுத்த புகைப் படங்களை ஆராய்கையில் புளூட்டோவைக் கண்டு பிடித்தார்.
- 1932 -சீனக் குடியரசிடமிருந்து மனசூகுவோவின் விடுதலையை ஜப்பான் மன்னர் அறிவித்தார்.
- 1957 - கென்யாவின் போராளித் தலைவர் டெடான் கிமாத்தி பிரித்தானிய குடியேற்ற அரசினால் தூக்கி லிடப்பட்டார்.
- 1959 - நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1965 - சாம்பியா, ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1979 - தெற்கு அல்ஜீரியாவில் சகாரா பாலைவனத்தில் முதற் தடவையாக பனி மழை பெய்தது.

### பிறப்புகள்

- 1745 - வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் (இ. 1827)
- **1836 - ஶ்ரீராமகிருஷ்ணர், இந்தியாவின் ஆன்மீகவாதி (இ. 1886)**
- 1860 - மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி. 1946)
- 1926 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (இ. 2009)
- 1931 - டொனி மொறிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர்.

### இறப்புகள்

- 1546 - மாட்டின் லூதர், ஜேர்மனிய சமய சீர்திருத்தவாதி (பி. 1483)
- 1564 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய ஓவியர் (பி. 1475)
- 1967 -றொபேட் ஓப்பன்ஹெய்மர், அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் (பி. 1904)

### ஶ்ரீராமகிருஷ்ணர்



ஶ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் 1836 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி குதிராம் - சந்திரமணி தம்பதியி னருக்கு மேற்கு வங்காளத்திலுள்ள கமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.

ஶ்ரீராமகிருஷ்ணன் எனப பரவலாக அறியப்படும் கதாதர் சாட்டர்ஜி 19ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவர். இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ் வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

சிறு வயதில் ஆடல் பாடல்களிலும், தெய்வங்களின் படங்கள்வரைவதிலும், களிமண்ணில் சிலைகள் செய்வதிலும் ஆர்வமாயி ருந்த கதா தருக்கு கணிதம் பிடிக்காத பாடமாய் இருந்தது. கிராமத்தின் செல்லப் பிள்ளையாக அவர் விளங்கினார்.

சற்று வளர்ந்தவுடன் பள்ளிப்படிப்பு பொருள் ஈட்டுவதையே நோக்கமாக கொண்டிருப்பதாக கருதிய அவர் பள்ளி செல்ல மறுத்தார். இயற்கையை ரசிப்பதிலும், பக்திப் பாடல்கள் பாடுவதிலும், புராணக் கதைகள் கேட்பதிலும், நண்பர்களுடன் விளையாடுவதிலும் பொழுதைக் கழித்தார். சிறு வயதிலேயே ஆன்மீக விடயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராயிருந்தார்.

ஶ்ரீராமகிருஷ்ணர் தொண்டைப் புற்றுநோய் காரணமாக 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி உயிர் பிரிந்தார்.

# திஸாநாயக்க அழுக்குப்பிராணி போகுமிடமெல்லாம் துர்நாற்றம்

## பிரசன்ன ரணதுங்க விமர்சனம்



(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஒரு அழுக்குப் பிராணி என்றும் அவர் போகுமிடமெல்லாம் துர்நாற்றம் வீசுவதாகவும் பிரசன்ன ரணதுங்க எம்.பி கடும் விமர்சனம் செய்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலை குறித்து விளக்கமளிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தனது இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்தியிருந்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

எஸ்.பி.திஸாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை கடுமையாக விமர்சித்துக் கொண்டிருக்கின்றார். அதற்கான உரிமை, தகுதி அவருக்குக் கிடையாது. இதனை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். எஸ்.பி.திஸாநாயக்க ஒரு அழுக்குப் பிராணி போன்றவர்.

அவர் போகுமிடமெல்லாம் துர்நாற்றம் தான் வீசும். தற்போது அவர் நல்லாட்சி எனும் பேரில் சுதந்திரக் கட்சியை நாறடித்துக் கொண்டிருக்கின்றார்.

தற்போதைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெளிவாக இரண்டு கூறுகளாக பிரிந்துள்ளது.

ஒரு பிரிவினர் நல்லாட்சி அரசாங்கத்தின் அரவணைப்பில் சொகுசு வாழ்க்கை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு மக்களின் ஆதரவு இல்லை.

மற்றைய பிரிவினர் பொதுமக்களுடன் இருக்கின்றனர். இவர்கள்தான் கூட்டு எதிர்க்கட்சியினர் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். எங்களுக்குத் தான் பொதுமக்களின் ஆதரவு இருக்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற 14 பேரில் 13 பேர் எங்களுடன் இருக்கின்றனர். சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 50இற்கும் மேற்பட்டோரின் ஆதரவு எங்களுக்கு உண்டு.

கட்சியின் தலைமைத்துவம் முன்னாள் ஜனாதிபதியிடமிருந்து பலவந்தமாகவே பறித்தெடுக்கப்பட்டது. அது தொடர்பான ஆதாரங்களை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம்.

ஷிராந்தி அம்மையார் மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரைப் பாதுகாப்பதற்காக மகிந்த கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுக் கொடுத்ததாக தெரிவிக்கப்படுவதெல்லாம் பொய்யான தகவல்களாகும்.

அதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கும் செல்வாக்கை அழிக்க முயற்சிக்கின்றனர். எனினும் கட்சியின் தலைமைப் பதவி பறித்தெடுக்கப்பட்ட போது ஷிராந்தி அம்மையார் மற்றும் நாமல் ஆகியோருக்கு எதிராக எந்த வித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ)

# வாயால் சிறை சென்றார் அமைச்சர் திஸாநாயக்க

## முன்னாள் அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வாய் காரணமாக சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிட்டது என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை விடுதலை செய்வதற்கு நாமே முயற்சி எடுத்திருந்தோம், போராட்டங்களை நடத்தியிருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சனம் செய்து அண்மையில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கருத்து வெளியிட்டிருந்தார்.

குரோதம் மற்றும் அதிகார மோகத்தை அடிப்படையாகக் கொண்டு எஸ்.பி. வெளியிட்டு வரும் கருத்துக்கள் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஒழுக்க விதி மீறல்களில் ஈடுபட மாட்டார்கள்.

மத்திய வங்கி மோசடி குறித்து அமைச்சர் மஹிந்த அமரவீர முறைப்பாடு செய்துள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (இ)

# முதியோரின் நிலையான வங்கி கணக்கிற்கு விசேட வட்டி வீதம்

## எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

வயது முதிர்ந்தவர்களுக்கான வங்கி வைப்புக்களுக்கு விசேட வட்டி வீதத்தை வழங்குதல் தொடர்பாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் இலங்கை மத்தியவங்கி நிதியமைச்சின் ஆலோசனையைக் கோரியுள்ளது.

வயது முதிர்ந்தோரின் நிலையான வைப்புகளுக்கு 15 வீத வட்டிவழங்குவது தொடர்பாக இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கடந்த வருடம் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்மொழிந்திருந்தார்.

இது தொடர்பில் ஒரு குழப்பமான நிலை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு கொமர்ஷல் வங்கிகள் இது தொடர்பாக மத்திய வங்கியிடமிருந்து சுற்றுநிருபம் வரவேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளன.


எனினும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அனுமதி வழங்கப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கே இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை மேற்படி வட்டி வீதம் ஒரு மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட வைப்புக்களை உடைய 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கென மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த வயதெல்லையை 55 ஆக குறைக்குமாறும் வைப்புத் தொகையை 1.5 மில்லியன் ரூபாவாக அதிகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (3)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 636


மதுஷன் மது



சர்மிலா




அபி சனு




செரோன்




வின்ஜன்ஷன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2016~13.03.2016



**வாக்கு கொடுக்கு முன் யோசிக்க வேண்டிய நேரமிது! கணக்குத் தவறாமல் காய் நகர்த்தி, கச்சிதமாக காரிய வெற்றி காணும் துலாம் இராசி நேயர்களே!**

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசி நாதன் சுக்ரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரை சகாய ஸ்தானாதிபதி குரு பார்க்கின்றார்.

கடைப்பிடிக்க வேண்டும். திட்டங்கள் திசைமாறிச் செல்லும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம்.

கொடுக்கல், வாங்கல்களில் ஒரு சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் பாகப் பிரிவினைகள் நடைபெறுவதில் பிரச்சினைகள் உருவாகலாம். இது போன்ற சனி- செவ்வாய் சேர்க்கை காலத்தில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் தான் வீண்பழிகளிலிருந்து விடுபட இயலும். மேலும் அங்காரகனுக்கும், சனிக்கும் வாரந்தோறும் வழிபாடு மேற்கொள்ளுங்கள். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் காலை நேரத்தில் காகத்திற்கு எள் கலந்த சாதம் வைப்பது நல்லது.

விரய ஸ்தானம் மேலோங்கியிருக்கும் நேரங்களில் சுபவிரயங்களைச் செய்வது நல்லது. பணியாளர்களை மாற்றுவதற்கு முன் வருவீர்கள். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சிக்காலம்!**

மாதத் தொடக்க நாளில் மகர

கள். உத்தியோக முன்னேற்றம் உண்டு. மார்ச் 8 ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை முன்னின்று நடத்துவீர்கள். பங்காளிப் பகை மாறும். பூர்வீக சொத்துக்களில் கிடைக்க வேண்டிய தொகை இப்பொழுது முயற்சி எடுக்காமலேயே வந்து சேரும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நேரமிது.

**புதனின் பெயர்ச்சிக் காலம்!**

பிப்ரவரி 25 ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து புத

மார்ச் 12 ஆம் திகதி மீனத்தில் புதன் நீச்சம் பெறப் போகின்றார். 9, 12 இற்கு அதிபதி நீச்சம் பெறுவதால் தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவை.

தடைபட்ட திருமணங்கள் நடைபெறும். ஆலயத் திருப்பணிக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். உறவினர்




தொல்லை, அலைச்சல், அதிகச் செலவு என்று வந்து கொண்டே இருக்கும்.

எதிர்பாராத விரயங்களும், உருவாகும். தன் நம்பிக்கையும், தைரியமும் கொண்டு எதையும் சமாளித்து விடுவீர்கள். அருகில் இருப்பவர் களை அனுசரித்துச் சென்றால்தான் அமைதியை வரவழைத்துக் கொள்ள இயலும். இம் மாதம் சனிபகவான் வழிபாடு சஞ்சலம் தீர்க்கும். உமாமகேஸவரர் வழிபாடு உள்ளத்தைச் சீராக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் கோபத்தையும் குறைத்துக்கொள்ள வேண்டிய மாதமாகும். பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வரவைக்காட்டிலும் செலவு கூடும். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை. உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத் திற்கான மாறுதல் கிடைக்கப் போகின்றது.

குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். சிவராத்திரியன்று சிவனை வழிபடுவதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

# கொடுக்கும் முன் யோசிக்க வேண்டிய நேரம்

இந்த குரு-சுக்ர பார்வையால் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படப் போகின்றது.

பெப்ரவரி 26 ஆம் திகதி செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு வாக்கு ஸ்தானத்தில் சனி, செவ்வாய் சேர்க்கை உருவாகின்றது. எனவே அதில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மற்றவர்களைச் சார்ந்து இருப்பவர்கள் பொறுமையைக

ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். ராசிநாதன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பயணங்களால் பலன் உண்டு. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பூமி விற்பனையால் லாபமும் கிடைக்கும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்

ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும்.

கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டி வரும் தகவல் காதினிக்க வைக்கும்.

கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

**செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்!**

பிப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள சனியோடு இணைகின்றார்.

இக்காலத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**குரு பார்வையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்! அறிவுக் கூர்மையால் அகிலத்திலுள்ளவர்களின் மனதில் இடம்பிடிக்கும் விருச்சிக இராசிநேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் செவ்வாய் 12 ஆம் இடத்திலும், 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்ரன் 2 ஆம் இடத்திலும் சஞ்சரிப்பதால் தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டே இருக்கும். பூமி யோகம் முதல் பொன்னான பல யோகங்கள் இம்

யாக விரதமிருந்து சிவபெருமானையும், உமையவளையும் வழிபட்டால் செல்வ நிலை உயரும். செல்வாக்கும் மேலோங்கும். ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் இரண்டாவது சுற்று நடப்பவர்கள், மூன்றாவது சுற்று நடப்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை. கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

பத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பலவித முன்னேற்றங்கள் ஏற்படும். முத்தான தொழில் அமையும். வாகன வசதி, வாங்கும் சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும். வழக்குகள் சாதகமாக முடியும். மனக்குழப்பம் அகல மாற்று இனத்தவர் ஒத்துழைப்பு செய்வர். பணப்புழக்கம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு நண்பர்களுடன் கூட்டுத் தொழில் செய்ய முன்வரும் நேரமிது. செய்யும் தொழில் யோகமானது தானா?, இலாபம் தரக்கூடியதா?, யாருடன் கூட்டுவைப்பது உத்தமம்? என்பதை சுய ஜாதக அடிப்படையில் ஆராய்ந்து அதன்படி நடத்துவது நல்லது.

**சுகம் தரும் சுக்ரப்**

சப்தமாதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது திருமண முயற்சி வெற்றி பெறும். வாழ்க்கைத் துணை வழியே உத்தியோகத்திற்கு முயற்சி எடுத்திருந்தால் அதிலும் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். மார்ச் 8 ஆம் திகதி கும்பத்திற்கு சுக்ரன் செல்ல இருக்கின்றார். இதன்மூலம் தொழில் முன்னேற்றம் ஏற்படும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும. குருவின் பார்வை பலத்தால் அந்த சுக்ரன் புனிதமடையப் போவதால் எதிர்பாராத நல்ல செய்திகள் இல்லம் தேடி வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடுதலாகும்.

**பொருள் வளம் பெருகும் புதனின் பெயர்ச்சி!**

பிப்ரவரி 25 ஆம் திகதி கும்பத்தில் புதன சஞ்சரிக்கப் போகிறார். இலாபாதிபதி 4 இல் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் இலாபம் தொழிலில் கிடைக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இடம்

மேலதிகாரிகளின் ஆதரவோடு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் வந்து சேரும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**செவ்வாய், சனி சேர்க்கைக் காலம்!**

பிப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிக ராசிக்குச் செவ்வாய் செல்கின்றார்.




இதன் விளைவாக சில மாற்றங்கள் ஏற்படும். சனியோடு செவ்வாய் இணைந்திருப்பதால் கூடுதல் விழிப்

தரர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய கூட்டாளிகளை நம்பிச் செயற்பட வேண்டாம். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது.

இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாடு ஆனந்தம் வழங்கும். சிவராத்திரி அன்று சிவ பூஜையில் கலந்து கொள்வதன் மூலம் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும். வாரிசுகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். குரு பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதார நிலை சீராகும்.

வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு உண்டு. தக்க சமயத்தில் உறவி னர்கள் கைகொடுத்து உதவ முன் வருவர். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

பள்ளைகளால் பெருமை சேரும. கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது. உங்கள் பெயரிலேயே வீடு, இடம் வாங்குவது பற்றி குடும்ப உறுப்பினர்கள் சிந்திப்பர். சிவாலய வழிபாடு சிறப்பினை வழங்கும். (தொடரும்)

# குரு பார்வையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்!

மாதம் வந்து சேரப்போகின்றது.

அந்த அடிப்படையில் இம்மாதம் சிவராத்திரி விழாவன்று முழுமை

**பெயர்ச்சிக் காலம்!**

மாதத் தொடக்க நாளில் சுக்ரன் மகர ராசிக்கு செல்லப் போகின்றார்.

வாங்கி மனை கட்ட வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு

புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. குறிப்பாக வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். சகோ

# வகுப்பறை திறப்பு விழாவும் மெய்வல்லுநர் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய புதிய வகுப்பறை திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.தேவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பயலொக் நிறுவன முகாமையாளர் தி.சிவகுகன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விவலய (முன்பள்ளி) உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டி அலுவலர் க.ஈஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# வீட்டை வெளிநாட்டவருக்கு வாடகைக்கு கொடுத்தவரும் வெளிநாட்டவரும் கைது

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் 9 வயதுச் சிறுமியின் கையைப் பிடித்து இழுத்த 60 வயதையுடைய ஜேர்மன் நாட்டுப் பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் பிரஸ்தாப வெளிநாட்டவருக்கு தங்குவதற்கு வாடகைக்கு வீடு கொடுத்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய சிறுமி தனது வீட்டிற்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது பிரஸ்தாப வெளிநாட்டுப்பிரஜை சிறுமியைகூப்பிட்டுஅவரதுகையைப் பிடித்து இழுத்துள்ளார்.

இதனால் சிறுமி சத்தமிடவே அங்குஅயலவர்கள்ஒன்றுகூடியுள்ளனர். இதனால் சிறுமிக்குப் பணம் கொடுத்து சிறுமியை சமாதானப்படுத்த முயன்றுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சிறுமியின் பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டதுடன் அவருக்கு தங்குவதற்கு வாடகைக்கு வீடு கொடுத்த 44வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப ஜேர்மன் பிரஜை ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு சுற்றுலா வருவதுடன் யாழ்ப்பாணத்தில் விடுதி ஒன்றை வாங்குவதற்கு முயற்சி செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3)

# கற்கைநெறி மீட்டல் வகுப்புகள்

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்கான பரீட்சைகள் 12.03.2016, 13.03.2016 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதனால் இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புக்கள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் 20.02.2016, 21.02.2016 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என இலங்கை நூலகச் சங்க யாழ். கிளை ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (இ)

# நகுலேஸ்வரா வீதியை புனரமைப்பு செய்யவும்



வல்லை அராலி வீதியில் இருந்து கீரிமலை சந்தி வரை செல்லும் நகுலேஸ்வரா வீதியானது பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியை பொதுமக்களின் நலன்கருதி விரைவாக புனரமைப்பு செய்து தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் இப்பகுதியூடாக விவசாயிகள் அதிகளவில் பயணம் செய்கின்றனர்.பாரமான பொருட்களுடன் செல்லும் விவசாயிகள் பாரிய இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பலர் இந்த வீதி ஊடாக பெரும் சிரமத்தின் மத்தியிலேயே போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் மீள்குடியேற்றத்துக்கு பின்னர் குறித்த வீதி இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை எனவும் வீதி அபிவிருத்திஅதிகாரசபையினர் இதை கவனத்தில் கொண்டு விரைவில் இந்த வீதியை புனரமைப்பு செய்து தரும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-9)

# வீதியை விஸ்தரிக்காது புனரமைப்பதற்கு திட்டம்

(பண்டத்தரிப்பு)

வீதியின் அகலம் விஸ்தரிக்கப்படாது வீதிப்புனரமைப்புகள் இடம்பெறவுள்ளதாகபொது மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் பிரதான வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றும் திட்டம் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மானிப்பாய்–காரைநகர் வீதி மட்டும் செய்து முடிக்கப்படாமல் இன்றுவரை இருக்கிறது.

தற்போது இவ் வீதி காப்பெற் வீதியாக மாற்றுவதற்கு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வீதியின் அகலம் விஸ்தரிக்கப்படாது முன்னர் இருந்தவாறே வீதி திருத்த வேலைகள் இடம்பெற்று காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது என பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீதி முன்னர் இருந்தவாறு வீதித்திருத்த வேலைகள் இடம் பெற்றால் வாகன நெரிசல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுண்டு எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே வீதித்திருத்த வேலையில் ஈடுபடவுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதியின் இரு மருங்கினையும் விஸ்தரிப்பு செய்து அதன்பின்னர் காப்பெற் வீதியாக மாற்றுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-82)

# மனிதநேய பயணத்தின் ஓராண்டு நினைவு நிகழ்வு

மலையகமஞ்சரியின்மனிதநேயப் பயணத்தின் ஓராண்டு நினைவுநிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தொண்டைமானாறுசெல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் சிவத்திரு மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்வதுடன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன், பருத்தித்துறையின் பிரதேச செயலர் த.ஜெயசீலன், கிளிநொச்சி மாவட்ட ஓய்வுநிலை மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், யாழ்ப்பாண மக்கள் வங்கியின் ஓய்வு நிலை பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், பதுளை மலையக சிறுவர் இல்ல காப்பாளர் ரெ.ம.கிருஷ்ணசாமி, ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றியத்தின் தலைவர் கா.யோகேஸ்வரன், பண்டாரவளைஇந்துஇளைஞர் பேரவையின் செயலாளர் க.இராஜேந்திரம், இந்து சுயம் சேவாசங்கஉறுப்பினர்ந.லோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.இதன்போது ஆசியுரையினை நல்லை. திருஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கந்தர் மடம் சிவகுருநாதபீட சுவாமிகள் சிவத்திரு வித்தியாசாகர் சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர். நிகழ்வில் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ள நூல் வெளியீட்டுரையினை சைவப்புலவர் க.நித்தியதசீதரன் நிகழ்த்தவுள்ளதுடன் மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதிஅதிபர்ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியா ழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் ஆர்.ராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் டாக்டர் சி.கே.சிவபாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக இடைக்காடு மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் ஏ.அருந்தவநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-5-136)

◆ ◆ ◆ ◆ ◆

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

◆ ◆ ◆ ◆ ◆

புத்தூர் மடிகே பஞ்சசீல வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் சி.கணேஸ்ஆனந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்வி முகாமைத்துவ ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பு.அருணகிரிநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக ஆரம்பக் கல்வி விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகார்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (இ-5-136)

◆ ◆ ◆ ◆ ◆

(இருபாலை)

யாழ்.இருபாலை தமிழ்க்கலவன் பாடசாலை, பாலம் சர்வதேச பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இருபாலை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஆ.பாலச்சந்திரன், பாலம் சர்வதேச பாடசாலை அதிபர் செல்வி தினசிறி கிங்ஸ்லி ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இருபாலை சி.சி.த.க. பாடசாலையின் முன்னாள் அதிபர் வி.செல்லப்பா, இருபாலை சி.சி.த.க. பாடசாலையின் பழைய மாணவி திருமதி வசந்திசச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக போதகர் ஜெனிபர் சின்னத்துரை, செல்வி கரண்டே, செல்வி சுவிற்றி தேவராஜா, ஏ.எம்.ரி. நிறுவன மேலாளர் ஈ.நிமலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-136)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### மோவாய்க்கட்டில்

மோவாய்க்கட்டில் மச்சம் இருந்தால் அப்பெண்கள் அதிர்ஷ்டமுடையவர்கள்ஆவார்கள். அவர்கள் பிறர் படும் துன்பங்களை கண்டு இரக்கப்படுவது மட்டுமின்றி அவர் துன்பத்தைப் போக்குவதற்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வார்கள். இவர்கள்தங்கள்கணவரைத்தவிர வேறு எந்த ஆடவரையும் சிறிதும்நினைக்கமாட்டார்கள்.

இவர்கள் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதை தடையின்றி செய்து முடிப்பார்கள். தங்களுக்கு சம்பந்தமில்லாத செய்திகளில் தலையிட மாட்டார்கள். வீண் விவகாரங்களில் கலந்து கொள்ள மாட்டார்கள்.

குடும்ப வாழ்க்கையில் கணவர் குறிப்பறிந்து நடந்து மகிழ்ச்சியாக காலத்தை கழிப்பார்கள்.

இந்த மச்சம் உடைய பெண்களில் சிலர் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவர்களாக இருப்பார்கள்.

பிறந்த குடும்பத்திற்கேற்ற நற்குணங்கள் நிரம்ப உடையவர்களாக இருப்பார்கள். இந்த மச்சம் உள்ள பெண்கள் சகல சுகங்களையும் அனுபவிப்பார்கள். கண் நிறைந்த கணவனைப் பெற்று இன்புறுவார்கள். ஏழை எளிய வர்களுக்கு இரங்கும் சுபாவ முள்ளவர்கள்.

### உதடுகளில்

பொதுவாகப் பெண்களின் உதடுகளில் மச்சம் இருந்தால் அது நல்ல பலன்களையே கொடுக்கும் என மச்ச சாஸ்திரம் சொல்கிறது. மேல் உதடு, கீழ் உதடு இரண்டில் எதில் மச்சம் இருந்தாலும் நல்ல அதிர்ஷ்டமாகும். கீழ் உதட்டின் உட்புறம் ஒன்றுதவிர மற்ற இடங்களில் எந்த இடத்தில் இருந்தாலும் நல்ல பலன்களையே தரும்.

கீழ் உதட்டின் உட்புறத்தில் மச்சம் இருந்தால் அப் பெண்கள் கெட்ட நடத்தை உள்ளவர்களாக இருப்பார்கள். எல்லோராலும் வெறுக்கப்படுவார்கள். சண்டை புரிவதில் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள்.

மேல் உதடு, கீழ் உதடு எதில் மச்சம் இருந்தாலும் அப் பெண்கள் அதிர்ஷ்டம் உடையவர்களே. அவர்கள் தெய்வ பக்தியுடையவர்கள். நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள். வாழ்க்கைக்குரிய சகல போகங்களும் அதற்குக் தேவையான செல்வமும் அதிக மாக இருக்கும்.

நல்ல நடத்தை யும் நற்குணங்களும் பொருந்தியிருப்பாள். எல்லாக் காரியங்களையும் நல்ல விதமாகச் செய்து முடிப்பவர்கள். எதையும் நன்கு ஆலோசித்துச் செய்யும் இயல்புடையவர்கள். கனிந்த பார்வையும் இனிய பேச்சும் உடையவர்கள். சிறந்த படிப்பும் நல்ல அறிவும் உடையவர்கள். நேர்மையாக நடப்பவர்கள். பொறுமையும்மனநிறைவும்கொண்டவர்கள். இவர்களை மணந்து கொள்கிற ஆடவர்களுக்கு எதிர்பாராத வகையில் அதிர்ஷ்டங்கள்வந்து சேரும்.

மேல் உதட்டின் உட்புறமாக மச்சம் இருந்தால்அவள் தெய்வ பக்தி மிக்கவளாக திகழ்வாள். இவர்களில் சிலர் தெய்வீக குறிகள் சொல்பவர்களாகவும்இருப்பர்.

கீழ் உதட்டின் மீது மச்சம் இருந்தால் சகல சுகபோகங்களையும் அனுபவிப்பார்கள்.

(தொடரும்...)

# மகிந்தவை அச்சமடைய வைத்திருக்கும் சரத் பொன்சேகாவின் மறுபிரவேசம்


அலரி மாளிகையில் வைத்து ரணில் விக்கிர மசிங்கவுடன் இணைவதற்கான உடன்படிக்கையில் சரத் பொன்சேகா கைச்சாத்திட்ட போது, கோத்தபாய ராஜபக்ஷ பௌத்த மகாசங்கத்துடன் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் உபுல் ஜோசப் பெர்னான்டோ. இதனைப் மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**

சரத் பொன்சேகா அரசியலில் எழுச்சி பெறுகின்ற போதெல் லாம், அவரது எதிர்ப்பாளர்கள் மத்தியில் அது வியப்பையும் குழப்பத்தையும் உண்டு பண்ணியுள்ளது. சரத் பொன் சேகா கடந்த காலத்தில் மேற்கொண்ட ஒவ் வொரு செயற்பாடுகளையும் நோக்குமிடத்து இவரது அரசியல் பிரவேசமானது இவரது விரோதிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த லாம்.

சரத் பொன்சேகா வின் வெளிப்படையான கருத்து வெளிப்படுத்தல் களே இவருக்குப் பல சந்தர்ப்பங்களில் கெட்ட வாய்ப்பாக அமைந துள்ளது. அலரி மாளிகையில் வைத்து ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவதற்கான உடன்படிக்கையில் சரத் பொன்சேகா கைச்சாத்திட்ட போது, கோத்தபாய ராஜபக்ஷ பௌத்த மகாசங்கத்துடன் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

பொன்சேகா மீது தாக்குதல் மேற்கொள் வதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாக கோத்தபாய மகாசங்கத் துடனான கலந்துரையாடலைத் தெரிவு செய் தார். கடந்த பொதுத் தேர்தலில தோல்வியுற்ற பொன்சேகாவை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப் பினராக்குவது வெட்கம் கெட்ட செயல் என



கோத்தபாய தெரிவித் தார்.

இராணுவத்திலருந்த தனக்கு எந்தவொரு அரசியலும் தெரியாது என தன்னிடம் வினவிய அமைச்சர்களிடம், முன் னாள் இராணுவத் தளபதியான பொன் சேகாவிற்கும் இந்த வினா பொருத்தமானதாக அமையுமா என கோத்த பாய சவால் விடுத்துள் ளார். சரத் பொன் சேகாவை நாடாளுமன்ற உறுப்பினராக்குவதற் கான முயற்சிகள் இடம் பெற்ற போது இது தொடர் பில் கோத்தபாயவால் முன்வைக்கப்பட்ட கருத் துக்கள் அனைத்தும் இவர் இது தொடர்பில் அச்சமும் வியப்பும் கொண்டிருந்தார் என்ப தையே வெளிப்படுத்தியது.

இதேபோன்று பொன் சேகா நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை தொடர்பில் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மத்தியிலும் பீதியைத் தோறறுவித் துள்ளது போல் தெரி கிறது. பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பின ராக நியமிக்கப்பட்டால், தனது அமைச்சுப் பதவியைத் துறப்பேன் என அமைச்சர் விஜே தாஸ ராஜபகஷ அச் சுறுத்தல் விடுத்திருந்த தாக கூறப்பட்டது.

கோத்தபாய ராஜபக்ஷ கைதுசெய்யப்படுவதைத் தான் அனுமதியேன் என அமைச்சர் விஜே தாஸ ராஜபக்ச முன்னர் தெரிவித்திருந்தார். விஜேதாஸ - பொன்சேகா முறுகலானது சர்ச்சைக் குரிய அவன்கார்ட் ஆயுத விவகாரத்துடன் மேலும் தீவிரமடைந்துள்ளது. அவன்கார்ட் சர்ச்சை தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப் பட வேண்டும் என சரத் பொன்சேகா உறுதியாக கோரிக்கை விடுத்த போது, கோத்தபாயவைப் பாதுகாத்தவர் அமைச்சர் விஜேதாஸ ராஜபகஷ ஆவார்.

அவன்கார்ட் உரிமை யாள ருக்கும் விஜே தாஸவுக்கும் இடை யிலான இரகசியத் தொடர்பை பொன்சேகா வெளிச்சமிட்டுக் காண் பித்திருந்தார். தான் கைது செய்யப்படுவதைத் தடுப்பதில் சில அமைச் சர்களை கோத்தபாய பயன்படுத்தியிருந்தார் என்பது பொன்சேகா விற்கும் விஜேதாஸ ராஜபக்ஷவிற்கும் இடையி லான தர்க்கத்தில் வெளியில் கசிந்தது.

இதேபோன்று, சில அமைச்சர்களின் செல் வாக்குடன் பொன்சேகா நாடாளுமன்றிற்குள் நுழைவதைத் தடுப்ப தற்கான முயற்சிகளிலும் கோத்தபாய ஈடுபட்டார் என்பது வெளிப்படை.

**கோத்தபாய- மகிந்த விசுவாசிகள்**

மே 2009இல் புலிகள் அமைப்பிற்கு எதிரான யுத்தமானது சரத் பொன்சேகாவால் வெற்றி கொள்ளப்பட்ட தைத் தொடர்ந்து பொன் சேகா தொடர்பில் கோத்த பாய, அச்சமுறத் தொடங் கினார். போர் வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னர், மகிந்தவை விட பொன்சேகா பிரபலம் பெற்றிருந்தார் என்பதை புலனாய்வு அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதுவே பொன்சேகா அவரது இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கான காரணமாகும்.

பொன்சேகாவை சுதந்திரமாகத் திரிவ தற்கு அனுமதித்தால், அவர் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்ப தற்கு சதி செய்துவிடுவார் என்ற அச்சத்தினா லேயே, மகிந்த அரசாங் கத்தால் பொன்சேகா சிறையில் அடைக்கப் பட்டார். தற்போது பொன்சேகாவிற்கு நாடாளுமன்ற உறுப்பி னர் பதவி வழங்கப் பட்டதானது மைத்திரி- ரணில் அரசாங்கத்திற்கு எதிராக தம்மால் மேற் கொள்ளப்படும் தேசப் பற்றுப் போராட்டங்கள் செயலிழக்கக் காரண மாகி விடுமோ என கோத்தபாய-மகிந்த விசுவாசிகள் அச்சம் கொள்கின்றனர்.

அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாயவை முன்னி றுத்துவதற்கான முயற்சி யும் தோல்வியுறலாம். போர் வெற்றியைப் பயன்படுத்தி மகிந்த விசுவாசிகளால் இலங் கையின் ஆட்சிப் பொறுப் பைத் தம்வசம் வைத் திருப்பதற்காக கோத்த பாயவை இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கு வதற்கான முயற்சிகளை கோத்தபாய-மகிந்த விசுவாசிகள் முன்னெடு க்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங் களை மைத்திரி - ரணில் அரசாங்கம் அமுல்படுத்த முயற்சித் தால் இராணுவத்தின ரும் மக்களும் இவர்களு க்கு எதிராகத் திரும்புவர் என மகிந்த விசுவாசிகள் நம்புகின்றனர். இவ்வா றான ஒரு சூழ்நிலையை ரணில்-மைத்திரி அரசாங்கத்தைக் கவிழ்ப் பதற்கான சிறந்த வாய்ப் பாகப் பயன்படுத்தலாம் என மகிந்த விசுவாசிகள் கனவு காண்கின்றனர்.

போர் இடம்பெற்ற போது மைத்திரி அரசாங் கத்தில் அங்கம் வகித்த அதேவேளையில், ரணிலும் பெரும்பாலான தற்போதைய அமைச்சர் களும் அப்போது எதிர்க் கட்சியில் இருந்தனர். அவர்கள் போரை விமர்சித்திருந்தனர்.

யுத்தத்தை சரத் பொன்சேகா தலைமை தாங்கியிருந்தார். மகிந்த விசுவாசிகள் என்னதான் கூறினாலும், போரை வென்றெடுப்பதில் பொன்சேகா எவ்வாறான தியாகங்களைப் புரிந்தார் என்பதை இராணுவத்தி னர் நன்கறிந்துள்ளனர்.

பொன்சேகா நாடாளு மன்றில் நுழைந்துள்ள தால், பெயரளவில் போர் வெற்றியைத் தமதாக்கி யுள்ள மகிந்த விசுவாசி கள் பலவீனமுறுவர். மகிந்த கூட போர் வலயங்களை ஒரு போதும் சென்று பார்வை யிடவில்லை என்பதே இதற்கான காரண மாகும்.

பொன்சேகா இரண்டு தடவைகள் புலிகளின் தாக்குதல்களிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார். ஆனால் மீண்டும் அவர் யுத்த களத்திற்குச் சென்றார். மருத்துவர்கள் ஓய்வி லிருக்குமாறு கூறிய போதும் இராணுவத் தளபதி என்ற வகையில் அவர் யுத்த களத்திற்குச் சென்றார். போர் வெற்றி, போர்க் கதாநாயகர்கள் தொடர்பாக பரப்புரைகள் செய்துவரும் தினேஷ் குணவர்த்தன மற்றும் விமல் வீரவனச ஆகியோர் ஒருபோதும் யுத்த களத்தைத் தரிசிக்கவில்லை.

பொன்சேகா அரசியல் களத்தில் உறுதியாக நிமிர்ந்து நிற்கும் இவ்வாறானதொரு சூழலில் கோத்தபாய வின் அரசியல் பிரவே சத்தை குறைத்தே மதிப்பிட முடியும்.

மகிந்த விசுவாசிகள் போர் வெற்றி என்ற பெயரில் தமது அரசியல் இருப்பை 100 சதவீதம் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், பொன் சேகாவின் அரசியல் பிரவேசமானது இவர் களது இருப்பை அரை மடங்காகக் குறைப்ப துடன் மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கான ஆதரவை மேலும் அதிகரிக்கும் என்பதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இதுவே கோத்தபாய மற்றும் மகிந்த விசுவாசி கள் பொன்சேகாவின் நாடாளுமன்ற பிரவேசி ப்பை அச்சத்துடன் நோக்கக் காரணமாகும்.

மேலான மனிதன் எப்போதும் அறம்பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் சுகம் பற்றியே எண்ணுகிறான். -கன்பூசியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மனுநீதி கண்ட சோழனும் மகிந்த ராஜபக்ஷவும்

அன்றைய ஆட்சியும் இன்றைய ஆட்சியும் என்று ஒப்பிடுகை செய்யப்பட்டால் பல்வேறு வித்தியாசங்களை இரண்டு காலத்திலும் கண்டு கொள்ளலாம்.

அன்று மன்னர்கள் நீதியை நிலைநாட்டுவதே தம் பெரும் பணி என்றிருந்தனர். மக்கள் படும் துன்பங்களை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதில் மன்னர்கள் கொண்ட மன உறுதியை இன்று எந்த ஆட்சியிலும் கண்டறிய முடியாது.

யானைப்படை, குதிரைப்படை புடைசூழ தேரில், பல்லக்கில் பவனி வந்த மாமன்னர்கள் மாறுவேடத்தில் திரிந்து மக்களின் குறைகளை அறிந்து கொண்டனர்.

ஆனால் இன்று ஆட்சியில்–அரசியல் பதவியில் இருக்கக்கூடிய எவரும் தங்களின் பகட்டான வசதிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுத்தது கிடையாது.

சுருங்கக் கூறின் மக்கள் படும் அவலங்களை அறிவது தங்களுக்குத் தேவையற்ற இடைஞ்சல் என்று நினைக்கின்ற அளவிலேயே சமகால அரசியல்வாதிகளின்–ஆட்சியாளர்களின் மனநிலை உள்ளது.

மனுநீதிச் சோழன் என்ற மன்னனின் ஆட்சியில் நடந்த கதை இது. மன்னன் மனுநீதியின் அரண்மனையில் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டுள்ளது.

மக்கள் தங்கள் குறைகளை மன்னனுக்குத் தெரியப்படுத்துவதற்காக இப்படி ஒரு ஏற்பாடு. எனினும் ஆராய்ச்சி மணி ஒலித்தது கிடையாது. குறைகள் இன்மையே மணி அடிக்கப்படாமைக்குக் காரணம்.

இருந்தும் ஒருநாள் பசுமாடு ஒன்று மனுநீதிச் சோழனின் அரண்மனை நோக்கி வேகமாக வருகிறது. வந்த பசு ஆராய்ச்சி மணியை தன் கொம்பினால் இழுத்து அடிக்கிறது. மன்னனின் மாளிகை அதிர்கிறது. அந்தோ! ஆராய்ச்சி மணி ஒலிக்கிறதே! யாருக்கு என்ன குறை நடந்ததோ என்ற ஏக்கம் எங்கும் பரவுகிறது. மன்னன் மனுநீதி, நிலைமை என்னவென்று மந்திரியிடம் கேட்கிறான்.

மன்னா! தங்கள் மகன் வீதிவிடங்கன் தேரில் செல்லும் போது பசுவின் கன்றை தேர்க்காலால் மிதித்துக் கொன்று விட்டதன் குறை பகிரவே அப்பசு மணி அடித்தது என்று மந்திரி பதில் அளிக்கின்றான்.

மன்னன் மனுநீதி தாங்கொணாத் துன்பம் அடைகிறான். தன் பிள்ளையை இழந்து பரிதவிக்கும் அந்தப் பசுப்போல நானும் என் மகனை இழந்து பரிதவிப்பதே நீதி என்று உணர்ந்து தன் மகன் வீதிவிடங்கனை தேர்க்காலில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றுகிறான். இது மனுநீதிச் சோழ மன்னனின் தீர்ப்பு.

அட! இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நீதி எத்தன்மையது என்றால்,

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தன் மகன் யோஷித ராஜபக்ஷ கைதானதும் மகிந்த ராஜ பக்ஷ வெகுண்டெழுந்தார். விடமாட்டேன் என்று துடித்தார். மகிந்தவின் குடும்பத்தை அரசு பழி தீர்க்கிறது என்று கர்ச்சித்தார். பாடம் புகட்டுவேன் என்று சூளுரைத்தார்.

நேற்றைய தினம் தன் மகனின் விடுதலைக்காக நீதிமன்றம் சென்று சட்டத்தரணியாக நின்று வாதிட்டார். என் பிள்ளைக்கு பிணை தருக என்று கேட்டார்.

அன்று மனுநீதி சோழனின் நீதி அது. இன்று மகிந்தவின் நீதி இது. தன் மகன் தெரியாமல் செய்த பிழைக்கும் மரண தண்டனை கொடுத்த மனுநீதியையும்;ஊழல் புரிந்த மகனுக்கு விடுதலை கேட்கும் மகிந்தவையும் ஒப்பிடுவது பாவம் ஆயினும்; அன்றைய ஆட்சியினையும் இன்றைய ஆட்சியினையும் வேறுபடுத்துவதற்கான ஒப்பிடுகை என்பதால் இதை ஏற்றிடுக.

# மைத்திரி, ரணில் மீதான நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து வருகிறார்கள்

தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்துவந்த இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களின் நம்பிக்கையினை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது. இதில பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் கல்வி நிலைகள் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் 15 ஆண்டுகளில் உயர் அதிகாரிகள் உருவாகுவதற்கான வீழ்ச்சி நிலையை எமது சமூகம் எதிர்நோக்கியுள்ளது.

தமிழ் மாணவர்கள் கல்வி நிலையில் வீழ்ச்சி நிலையில் சென்று கொண்டுள்ளனர். இன்று பாடசாலை இடைவிலகலை பொறுத்தவரையில் இலங்கையில் ஏனைய சமூகங்களை விட தமிழ் சமூகத்தில் அதிகரித்துள்ளது. சுமார் ஒன்றரை இலட்சம் மாணவர்கள் இடைவிலகல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையினை மாற்ற வேண்டும். தமிழர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தவேண்டிய கடப்பாடு இன்று அனைவருக்கும் உள்ளது. இதற்காக அனைத்து வேறுபாடுகளையும் களைந்து ஒன்றுபட வேண்டிய தேவையுள்ளது.

இந்த நாட்டின் ஆட்சிமாற்றம் ஊடாக தமிழர்களுக்கு நல்ல தீர்வு ஒன்று கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். இன்று தென்னிலங்கையில் அதிருபதிகரமான அரசியல் நகர்வுகள நடைபெற்று வருகின்றது.

தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்துவந்த இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களின் நம்பிக்கையினை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தங்களது ஆட்சியை தக்கவைப்பதற்காக சிங்கள மக்களிடம் தமிழர்களின் அபிலாசைகளை ஒதுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பிரதேச செயலகங்களில் தமிழ் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அச்சம் கொள்ளும் இந்த அரசாங்கம் எவ்வாறு தமிழர்களுக்கு தீர்வொன்றை வழங்கப் போகின்றார்கள் என்பதை சிந்தக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கொழும்பு மத்திய தபால் நிலையத்தில்
# தேங்கிக் கிடக்கும் பதிவுத் தபால்கள்

கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் விநியோகிக்க முடியாத ஒரு லட்சத்திற்கும் அதிகமான பதிவு தபால்கள் தேங்கியிருப்பதாக தபால் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மக்கள் தபால் சேவை சங்கத்தின் செயலாளர் ஜயந்த விஜேசிங்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதாவது இரண்டாம்நிலை தபால் நிலைய பொறுப்பதிகாரிகளின் வெற்றிடம் நிரப்பப்படாமையே இதற்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பு நகர மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கான பதிவு தபால்கள், கொழும்பு மத்திய தபால் நிலையத்திலிருந்தே விநியோகிக்கப்படுகின்றன.

விஷேடமாக வெளிநாடுகளில் இருந்து இணையத்தளங்கள் ஊடாக பொருள் கொள்வனவு செய்யும் செயறபாடும் மத்திய தபால் நிலையத்தில் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்காரணமாக, பரீட்சை அனுமதி பத்திரங்கள் மற்றும் நேர்முக தெரிவுக்கான விணணப்பங்கள் தாமதமாவதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-12)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள்து என வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கே.ஜெயக்குமார்அறிவித்துள்ளார். (செ-5)



# சத்திய தரிசனம்

## முத்தான மூன்று குணம்

❖ கடமையுணர்வு, கட்டுப்பாடு, கடவுள் பக்தி ஆகிய மூன்றும் மனித வாழ்வை உயர்த்தும் முத்தான குணங்கள்.

❖ மற்றவர்களின் சந்தோஷத்தைக் கண்டு நீங்களும் மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

❖ மேடு பள்ளம் போல வாழ்வில் இன்ப துன்பம் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும்.

❖ கற்பூர ஆரத்தியில் கடவுளைக் காண முடியாது. சத்திய வழியில் நடப்போரும் கருணை உள்ளம் கொண்டோரும் அவரைக் காணும் பேறு பெறுவர்.

❖ வாழ்க்கை என்னும் மரத்திற்கு தன்னம்பிக்கையே வேர். நன்னடத்தையே அதன் கனிகள்.


# 'நீ தந்த வலி' இன்று வெளியீடு

ஈழத்து கலைஞர்களின் தயாரிப்பல் வெளிவரவுள்ள "நீ தந்த வலி' என்ற திரைப்படத்தின பாடலகள் யாழ்பாணம் செல்லா திரையரங்கில் இன்றுவியாழக்கிழமை மாலை 5 மணய ளவில்வெளியிடப்படவுள்ளது. (இ-5)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

அந்தவகையில் 19.02.2016 வெள்ளி யாழ் பிரதேசத்தில் அச்செழுப் பிரதேசம் ஆகிய இடத்திலும் வவுனியா பிரதேசத்தில் தாண்டிக் குளத்திலிருந்து ஓமந்தை வரை, சின்னவலயன்கட்டு, யூனயன அசூரன்ஸ், தொழில் நுட்பக்கல்லூரி, ராஜ் தொழிற்சாலை, ATM சிலோன் பிறைவேற் லிமிற்றற், நெதேர்ண் பார்ம, ICT, ஓமந்தை வலைத் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோவிலுக்குச் செல்லும் பொழுது தங்க நகை அணிய வேண்டும் என்று சொல்வது ஏன் தெரியுமா?

கோவில்கள் அமைந்திருக்கும் இடம், அமைப்பு, உள் கட்டமைப்பு, கதவுகள், கொடி மரம், மூலஸ்தானம், கோபுர கலசங்கள், உள்பிரகார பாதை என, ஒவ்வொன்றும் அறிவியல், மருத்துவம், விஞ்ஞானம் தொடர்புடையவை. பொதுவாக, ஊருக்கு ஒதுக்குப்புறமான இடங்கள், மலை ஸ்தலங்கள், ஆழ்ந்த இடங்கள் தான், கோவில் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்.

இங்கு தான் காந்த அலைகள், நேர்மறையான எண்ண அலைகள், அதிகமாக பரவியிருக்கும். வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களின் போது, மக்கள் பாதுகாப்பாக இருக்க, பிரமாண்டமான கோவில்கள் தான் பயன்பட்டன. மிக மிக அதிகமான காந்த அலைகள் பரவியிருக்கும் இடத்தில், செப்பு தகடுகளை பதித்து, அதன் மீது சிலையை அமைத்து, மூலஸ்தானம் உருவாகும்.

அதன்பின் தான் கோவில் கட்டப்படும். அந்த செப்பு தகடுகளின் தன்மை, பல நல்ல அலைகளை கிரகித்து, அதை பல மடங்காக, அந்த சிலை மூலம் வெளிக்கொணரும். எல்லா கோவில்களிலும், மூலஸ்தானம் மூன்று பக்கமும் மூடி, வாசல் மட்டும் திறந்திருக்கும் அளவிற்கு, கதவுகள் அமைந்திருக்கும். அந்த நேர்மறை அலைகள் ஒருமித்து கிடைக்க, இது வழிவகுக்கும். இதே போல், மூலஸ்தானத்தில், அணையா விளக்கு ஒன்று எப்போதும் இருக்கும். அதைச் சுற்றி கண்ணாடியும் இருக்கும்.

அந்த எனர்ஜியை பரவ செய்யும், ஒரு நுட்பமான செயல் தான் கண்ணாடி வைத்திருப்பதன் நோக்கம் வேண்டுதலின் படி மாங்கல்யம், சாவி, பேனா, புதுநகைகள் போன்றவற்றை, இங்கு வைத்து எடுத்தால், இந்த உலோகங்கள் அங்குள்ள எனர்ஜியை, அப்படியே பற்றிக் கொள்ளும். அதனால்தான், கோவிலுக்கு தங்கத்தினால் ஆன நகைகளை அதிகம் அணிந்து போவது நல்லது எனக் கூறப்படுகிறது. சுற்று பிரகாரப் பாதை முழுவதும் கருங்கல் பதித்து தான், பண்டைய கோவில்கள் இருக்கும்.

வெறும் கால்களுடன் கருங்கல் மீது பதிய நடக்கும்போது, நம் கீழ் பாதத்திலுள்ள வர்ம புள்ளிகளுக்கு அழுத்தம் கிடைக்கும். நம் அனைத்து உடல் உறுப்புகளுக்கும், நிவாரணம் தரக்கூடிய எல்லா புள்ளிகளுமே பாதத்தில் இருக்கிறது.

# யாழ். – கொழும்பு இந்துக்களின் சமர்




இந்துக்களின் சமர் என்று அழைக்கப்படும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையில் நிகழும் வருடாந்த கிரிக்கெட் போட்டியான (Big Match) நாளை 19 ஆம் திகதி, நாளை மறுதினம் 20 திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நிகழவுள்ளது.

இதனை யாழ். இந்துக்கல்லூரி கொழும்பு பழைய மாணவர்கள் சங்கமும் கொழும்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கமும் இணைந்து ஒழுங்கமைந்துள்ளன.

1981 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த போட்டியானது நாட்டின் சூழ்நிலை காரணமாக இடையில் கைவிடப்பட்டு மீண்டும் 2005 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 6 போட்டிகள் நடைபெற்றுள்ளன.


இதுவரை நிகழ்ந்த 6 போட்டிகளில் 3 இல் யாழ். இந்துக் கல்லூரியும் 3 இனை கொழும்பு இந்துக் கல்லூரியும் வென்றுள்ளது.

7 ஆவது முறையாக நிகழும் இப்போட்டி முடிவுகள் சமநிலையிலிருப்பதால் இம்முறை கடும் போட்டி மிக்கதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இரண்டு பாடசாலை அணிகளும் கடந்த வருடங்களில் இல்லாத அளவுக்கு பயிற்சியும் சிறப்புத் தேர்ச்சியும் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இம்முறை இந்துக்களின் சமர் கடந்த வருடங்களை விட சிறப்பாகவும் பிரமாண்டமானதாகவும் அமையும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

கிரிக்கெட் போட்டிக்கு மேலதிகமாக இம்முறை இந்துக்களின் சமரில் இரு பாடசாலை விவாத அணிகளுக்குமிடையே 19 ஆம் திகதியன்று கண்காட்சி விவாத போட்டியொன்றும் நிகழவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**யாழ்.இந்துக்கல்லூரி அணி வீரர்களின் விபரங்கள்**

M.துவாரகன் (தலைவர்)
K. கோமைந்தன்
N.அபிப்பிரியன்
S.கலைச்செல்வன்
R.கஜானந்த்
K.நிகேஷ்
Y.விதூசன்
E.பரிமளன்
J.கிரிதகணேசன்
L.சிவலக்சன்
J.ஜெனிதன்
P.தனுசன்
M.கோபிராம்
S.நகதீசன்
R.ஜோய் நிசான்
E.கணேஷ்வரன்
K.பிரகலாதன்


Jaffna Hindu


Colombo Hindu

**கொழும்பு இந்துக்கல்லூரி அணி வீரர்களின் விபரங்கள்:**

S.மதுசான் (தலைவர்)
N.அஸ்வின்த்
G.டினேஸ்
S.கஜேந்திரன்
S.ஹரேந்திர பிரசாத்
A.ஹரிஹரன்
N.அசான் கௌதம்
K.பவித்திரன்
T.பிரணவ்
M.பிரவீன் குமார்
S.சஜீவன்
R.செவாக்
S.சரோன்
Y.தனுஸ்ராஜ்
S.விஸ்வஜித்
B.யுதீஸன் (க)

# விக்ரம்,ராஜன்,கங்கு வெற்றிக் கிண்ணம் ஹாட்லியைற்ஸ் முதலாவது வெற்றி



விக்ரம்,ராஜன்,கங்கு வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 4 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி,ஜொலிஸ்ரார் அணியை 2 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 28 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களை பெற்றனர். சஜீவன்-25,றஜீவன்-15, சதீஸ்-12, தீபன்-46, செயோன் ஆட்டமிழக் காது 34,நிஸாந்தன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஜொலிஸ்ரார் அணியை சார்ந்த பவன்-03, பிரசன்னா-03இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 26 ஓவர்களில் 9இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களை பெற்றனர். மதூஸன்-42,ருக்மன்-34,பவன்-23ஓட்டங்களை பெற்றனர்.களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணியை சார்ந்த பிரசாத- 04, றஜீவன்-03,நிஸாந்தன்-02,இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 7 வருடங்களாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு ஹாட்லியைற்ஸ் அணி 5.74 புள்ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 2.70 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

# ஊர்காவற்றுறை பிரதேச செயலக கரப்பந்தாட்ட சுற்றுத்தொடர்

## பத்திமா வி.கழகம் வெற்றி





ஊர்காவற்றுறைரேஞ்சர்ஸ்விளையாட்டுக்கழகத்திற்கு எதிரான கரப்பந்தாட்ட போட்டியில் எழுவைதீவு பத்திமா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேசசெயலகத்தால் நடத்தப்படும் 2016 ஆம் ஆண்டின் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் புளியங்கூடல் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் எழுவைதீவு பத்திமா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. 3சுற்றுக்களைக் கொண்ட போட்டியில் பத்திமா விளையாட்டுக்கழகம் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. ஆண்,பெண்களுக்கான உதைபந்தாட் போட்டி, எதிர்வரும் 20ஆம் திகதி ஊர்காவற் றுறை பிரதேச சபை மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-84)

## உள்ளூராட்சி தேர்...

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் உரிய முறையில் நிறைவடையவில்லை என்பதாலேயே இவ்வருடம் தேர்தலை நடத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் கருத்து தொடர்பில் பொது எதிரணியினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள அனைத்தும் பொய் எனவும், ஹுசைன் கூறியது யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் அதற்கு பதில தேட வேண்டும் என்றே எனவும், லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## தமிழீழ விடுதலை...



பிலே பேசப்படுகின்றது. அதனை எவ்வகையான நீதிமன்றத்தின் கீழ் விசாரணை செய்வது என்பதனை இலங்கை அரசே தீர்மானிக்கும் என ஜெனிவாவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளக பொறிமுறையிலே அனைத்து விசாரணைகளும் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளார். ஆகவே இவ்விடயம் தொடர்பில் எவரும் குழம்பத் தேவையில்லை.

சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இராணுவத் தளபதியை கடந்த ஆட்சியாளர்கள் மிகவும் கொடூரமான முறையில் நடத்தினர்.

அவரை சிறையில் அடைத்து "ஜம்பர்" அணிவித்தனர். இவ்வாறான கொடுமை எந்தவொரு இராணுவ வீரருக்கும் நல்லாட்சி அரசில் மேற்கொள்ளப்படாது.

எனினும், துட்டகைமுனு அரசன் காலம் முதல் இன்றுவரையான காலப்பகுதியில் தோன்றிய சிறந்த இராணுவ தளபதிக்கு அக்கதியைச செய்தவர்கள் இன்று இராணுவ வீரர்களின் நிலைமை தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பாராட்டுகின்றேன். பொன்சேகாவை சிறையிலிருந்து மாற்றி கடற்படையின் "ரொக் ஹவூஸ்"இல் வைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதேவேளை, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்தவர்கள் யார்? அப்பணத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் என்ன? தொடர்பிலான தகவல்களை பீல்ட மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் அம்பலப்படுத்துவார் என்றார். (செ-12)

## தமிழர் தரப்பு...

இடம்பெற்ற உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் குறிப்பிடுகையில், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளை பெறறுக் கொடுக்க வேண்டும். சட்டம் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

நவீனத்துவ போக்கை கருத்தில் கொண்டும், மக்களின் அடிப்படை பிரச்சினையை கவனத்தில் கொண்டும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக அதிகார பரவலாக்கல் முறைமை ஆணித்தரமாக சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

உலகிலேயே மிகவும் பலமான ஜனாதிபதி ஆட்சி முறைமை இலங்கையில் தான் இருந்தது. இது மாகாண அதிகாரங்களை முழுமையாக பாதித்தது. அதேபோல் தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பிலும முன்னைய அரசியலமைப்பிலும் நாட்டுக்கு பொருந்தாத பல காரணிகள் உள்ளன. இது தொடர்பில் மக்கள் ஆணை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதுவே தமிழ் மக்கள் ஆயுதத்தின் பக்கம் தள்ளப்படவும் தமது உரிமைக்காக போராடவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

கடந்த காலத்தில் தனிக்கட்சி அரசாங்கம் அமைத்தும் நல்ல சந்தர்ப்பங்கள் கைநழுவப் பட்டன. எனினும் இந்த தேர்தலின் போது எந்தவொரு கட்சிக்கும் மக்கள் முழுமையான ஆதரவினை கொடுக்கவில்லை. ஆகவே பிரதான கட்சிகள் ஒன்றிணைந்தே இந்த அரசாங்கத்தை பலப்படுத்தியுள்ளன.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் மிகவும் பொருத்தமான வகையில் அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை ஒன்றிணைத்து மிகவும் உயரிய வகையில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் அரசியலமைப்பை உருவாக்க சந்தாப்பம் ஒன்று கிடைத்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது. சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து உருப்படியான ஒரு தீர்மானத்தை எட்டவேண்டும்.

ஒற்றையாட்சி என்ற கருத்து முன்வைக்கப்பட்ட போது அன்று பல குழப்பங்கள் ஏற்பட்டன. சமஷ்டிக்கு அன்று பல்வேறு முரண்பாடுகள் எழுந்தன. அன்று நாம் தமிழர் தரப்புடன் இணக்கப்பாட்டுடன் பயணித்திருந்தால் இன்று இத்தனை இழப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. அதற்கு தெற்கின் சிங்கள தலைவர்கள் அனைவரும் பொறுப்புகூற வேண்டும்.

அதேபோல் தேசிய பிரச்சினை தொடர்பாக பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. ஆனால் கட்சி மட்டத்தில் அதிகாரபூர்வமாக எந்த கலந்துரையாடலும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை. உடனடியாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இப்போது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில், பௌத்த மதம் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் பலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. இதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்நாட்டில் பெரும்பான்மை மக்களின் உரிமைகள் தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டும். அதேபோல் பௌத்தம் முன்னுரிமை பெற்றாலும் ஏனைய மத உரிமைகளையும் அவர்களின் பண்புகளையும் பாதிக்கக் கூடாது. அவர்களின் மத சுதந்திரம் எந்தவித தடைகளும் இன்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கை என்ற பொதுப்பெயர் கொண்டு அழைக்க வேண்டும், கட்சி பெயர்களில் தமது இன அடையாளம் இருக்கக் கூடாது, பிறப்புச் சான்றிதழில் இலங்கையர் என்ற பொது அடையாளம் இருக்க வேண்டும் என கூறுவது எந்த வகையிலும் பிரச்சினைகளை தீர்க்க உதவாது. இந்த விடயங்களில் தடைகளை விதிப்பது அந்த இனத்தவரின் உரிமைகளை தடுக்கும் வகையில் அமையும். இன அடையாளத்தை தடுப்பது மிகப்பெரிய தவறாகும்.

ஆகவே முரண்பாடுகள் உள்ள விடயங்கள் தொடர்பில் ஆழமாக ஒவ்வொரு காரணங்களையும் ஆராயவும் ஏனைய விடயங்களில் ஒத்துழைக்கவும் மிகவும் தகுதியான அரசியலமைப்பு ஒன்றை இந்த ஆட்சியில் உருவாக்க முடியும்.

இந்த விடயத்தில் காலத்தை கடத்துவது எந்த வகையிலும் நன்மையளிக்காது. முடிந்தவரையில் இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

# அனுமதியின்றி கொண்டு செல்லப்பட்ட 27 ஆடுகள் பொலிஸாரால் மீட்பு



(குருமன்காடு)

அனுமதி பெறாது கொண்டு செல்லப்பட்ட மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான 27 ஆடுகள் வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முறைப்படியான அனுமதிப் பத்திரம் இல்லாது கப்ரக வாகனம் ஒன்றில் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான 27 ஆடுகளை மிகிந்தலை நோக்கி கொண்டு சென்ற போது வவுனியா, ஈரப்பெரியகுளம், அளுத்கம பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஆடுகளை ஏற்றிச் சென்ற வாகன சாரதி மற்றும் அதன் உதவியாளர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-250)

# யாழ்.பல்கலையில் இன்று மறியல் போராட்டம்

## ஊழியர் சங்கம் முன்னெடுக்கவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று வியாழக்கிழமை அடையாள மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளது.

பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்கக் கூட்டுக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு கடந்த மாதம் பலகோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றினை கையளித்திருந்தது அதில்,

01. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்துக்கு (02.2016) சமனாக மாதாந்த இழப்பீட்டுப் படி (MCA-Monthly Compensatory Allowance) கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும்.

02. MCA கொடுப்பனவு ஓய்வூதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் என்பனவும் கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்படவேண்டும்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பலமுறை கோரிக்கைகள் விடப்பட்டும் அதற்கான தீர்வு இன்னமும் எட்டப்படவில்லை.

01. சகல பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் ஓய்வூதியத் திட்டமானது அவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்துடன் அலவன்சும் இணைந்த ஓர் சீரான முறையில் வழங்கப்படவேண்டும்.

02. சகல பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் பொதுவான காப்புறுதித் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

03.பல்கலைக்கழக ஊழியர்களுக்கான இடைநிறுத்தப்பட்ட மொழிக்கொடுப்பனவு மீளவும் கொடுக்கப்படவேண்டும்.

04. பல்கலைக்கழகத்தில் புதிய நியமனங்கள் (அரசியல் தலையீடு எதுவுமின்றி) தகுதியானவர்களுக்கு பொதுவான போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் வழங்கப்படவேண்டும்.

05. சேவை நீடிப்பு காலமானது 57 வயது தொடக்கம் 60 வயது வரையான மூன்று வருடங்கள் ஊழியர்களால் விண்ணப்பிக்காமலே வழங்கப்பட வேண்டும்.

06.சொத்துக்கடன் (Property loan) திட்டத்தின் கடன் தொகையின் அளவானது அதிகரிக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்கள் தொடர்பான உடனடி நடவடிக்கைகள் 2016.02.08 இற்கு முன்னர் எடுக்கப்பட வேண்டும் என அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் செயற்படுத்தப்படாத நிலையில் அவற்றை செயற்படுத்த வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் இன்று மறியல் போராட்டங்கள் இடம்பெறவுள்ளது.

இதன் ஒரு அங்கமாக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் நண்பகல் 12.00 மணிமுதல் 01.00 மணிவரை மறியல் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (செ-11)

# தீக்காயங்களுடன் ஒருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தற்கொலைக்கு முயன்ற நபர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்வரூபன் (வயது-34) என்பவரே இதில் காயமடைந்தவராவார்.

குறித்த நபருக்கும் உறவினர்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு ஒன்றின் காரணமாக தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டி தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

இதன்போது எரிகாயங்களுக்குள்ளான



நபரை அங்கு நின்றவர்கள் உடனடியாக மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12-30)

# ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கு...

இலங்கை மற்றும் ஜேர்மனி நாடுகளுக்களுக்கிடையே நெருங்கிய மற்றும் சுமுகமான உறவுகள் பேணப்பட்டு வந்திருக்கின்றன.

என்னை இங்கு அழைத்ததற்காக மட்டுமன்றி இரு நாடுகளுக்குமிடையில் இருதரப்பு உறவுகளை மேலும வலுப்படுத்தும் பல கலந்துரையாடலகளை ஒழுங்கு செய்தமைக்காகவும் ஜேர்மன் அதிபருக்கு என்னுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் அதிபருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை மற்றும் ஜேர்மனிக்கிடையிலான உறவானது இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலானது. ஜேர்மனியில் புத்த மதத்தின் வரலாறானது 150 வருடங்களுக்கும் மேலானதாகும்.

வணக்கத்துக் குரிய நயனதிலோகா என்ற புத்த துறவியே ஜேர்மனியிலிருந்து இலங்கை வந்து வாழ்ந்த முதலாவது துறவியாவார். அவரை முன்னுதாரமாகக்கொண்டே ஏனைய ஐரோப்பிய பௌத்த துறவிகள் தேரவாத பௌத்த சமயத்தினை செழிப்படையச் செய்வதற்கு தங்களுடைய மகததான பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள்.

ஜேர்மன் அதிபருடனான எமது கலந்துரையாடலானது இலங்கைக்கான ஜேர்மனின் அபிவிருத்தி உதவிகள் தொடர்பாக அமைந்திருந்தது. கடந்த 5 தசாப்தங்களுக்கும் மேலாக எமக்கு அபிவிருத்தி தொடர்பான உதவிகளை மேற்கொண்டுவரும் ஜேர்மன் அரசாங்கத்திற்கு நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

அத்துடன் எதிர்காலத்திலும் தொடர்ந்து இந்த உதவிகளை வழங்கும்படியும் நான் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் எமது அரசாங்கமானது புதிய துறைகளில் பன்முகப் படுத்தப்பட்ட ஒத்துழைப்புடன்கூடிய நீண்டகால அடிப்படையிலான புதிய வாய்ப்புக்களை தேடும் முயற்சியில் உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் ஜேர்மன் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் தொழிலநுட்பம் மற்றும் தொழில்முறைப் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபித்து அதனூடாக திறன் வளர்ச்சியினை மேம்படுத்த ஜேர்மன் அரசு மேற்கொண்டுவரும் பங்களிப்பானது ஒரு சிறந்த முன்மாதிரியாக காணப்படுகின்றது.

அந்தவகையில் நாம் எமது நன்றிகளை ஜேர்மன் அரசாங்கத்திற்கும் ஜேர்மன் மக்களும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம.

இலங்கையில் தற்போது அதகரித்துவரும் பொருளாதார வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கு நாம் இச்சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுக்கின்றோம். என்னுடைய இந்த விஜயத்தில் ஒரு உயர்மட்ட வர்த்தக முதலீட்டு தூதுக் குழு இணைந்துள் ளது.

நாம் இலங்கையின் பொருளாதார வாய்புக்கள் மற்றும் சாத்தியமான திறன்கள் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்க ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள விசேட மாநாட்டில் பங்குபற்றவும் உள்ளோம்.

எம்முடைய வணிக தூதுக்குழுவினர் ஜேர்மனின் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடி கூட்டு முயற்சி வாய்ப்புக்களை அடையாளம் கண்டறியவுள்ளனர்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு மேலதிகமாக எம்முடைய மேம்பட்ட கூட்டுறவானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சியில் அமைந்த எரிசக்தித் துறை மற்றும் உயர்கல்வி ஆகியவற்றினை பரந்துபட்ட ரீதியில் உள்ளடக்கியதாக அமையும்.

என்னுடைய இந்த விஜயத்தின்போது ஜேர்மனியின் சமஷ்டி ஜனாதிபதி அதிமேதகு Joachim Gauck அவர்களை சந்திக்கவிருக்கின்றேன்.

அவருடனான சந்திப்பு மற்றும் ஜேர்மன் அரசாங் கத்தின் உயரதிகாரிகளுடனான என்னுடைய சந்திப்பானது எம்முடைய இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு மற்றும் பல்தரப்பு ரீதியிலமைந்த பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை அடையாளம்காண்பதற்கும்அவற்றை எம்முடைய முன்னுரிமைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் ஊக்குவிப்பதற்கு உதவியாக அமையும்என வும் நான் உறுதியாக நமபுகின்றேன என ஜனாதிபதி தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-12)

# யோஷிதவை பிணையில்...

இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு கடுவெல நீதி மன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை பிணையில் எடுக்க அவரின் வழக்கறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகள் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், அவரை பிணையில் விடுவிக்க மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஹெரியந்துவவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள் மற்றும் மனுதாரர் தரப்பு நியாயங்களை அடுத்த தவணையின் போது சமர்ப்பிக்குமாறு கூறிய நீதிபதி, இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் 29ஆம திகதி வரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கு விசாரணையின் போது சட்டத்தரணியும் முன்னாள் ஜனாதிபதியும், யோஷிதவின் தந்தையாருமான மகிந்த ராஜபக்ஷவும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தார்.

தனது பாதுகாவலர்கள் சகிதம் வந்திருந்த அவர் நீண்ட நாட்களுக்கு பின்னர் சட்டத்தரணி அங்கி அணிந்து நீதிமன்றம் சென்றதுடன மகன் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளின் குழுவில் மகிந்தவின் பெயரும் இருந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

# மார்ச்சில் ரணில்...

பந்தங்கள் நிச்சயம் கைச்சாத்திடப் படும் என்று தெரிவித்திருக்கும் நிலையல், பிரதமர் இந்த விஜயத்தை எதிர் வரும்மார்ச்மாதமளவில்மேற்கொள்ள வுள்ளார்.

நான்கு நாட்கள் பயணம் மேற்கொண்டு அடுத்த மாதம் சீனா செல்லும் பிரதமர் ரணில், அந்நாட்டு ஜனாதிபதி ஜிங்பிங் உள்ளிட்ட உயர்மட்ட பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், சீன வர்த்தக சமூகத்தினரையும் அவர் சந்திக்கவுள்ளதாக அலரிமாளிகை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்கும் நோக்கிலேயே பிரதமரின் சீன வஜயம் அமையவுள்ளது என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது சீன சார்பு வெளிநாட்டுக் கொள்கை கடைபிடிக்கப்பட்டது.

எனினும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் சீனாவுடனான தொடர்புகளில் விரிசல் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இநத நிலையில் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் சீனாவை நோக்கி நகர்கின்றது என கூறப்பட்டுவரும் சூழ்நிலையில் ரணிலின் பீஜிங் விஜயம் அமைகின்றது. (செ-12)

# சந்தேக நபர்...

வப்படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த சாட்சிகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்த மாதிரி உருவப்படங்கள் வரையப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முதலாவது நபர் 5 அடி 8 அங்குல உயரத்தைக் கொண்ட சுமார் 35 வயதுடையவர் எனவும், பிறவுண் நிற கண்களையும், வெள்ளை நிறத்தைக் கொண்டவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று, இரண்டாவது சந்தேக நபர் கறுப்பு நிறத் தோற்றத்தையும், 5 அடி 10 அங்குல உயரத்தையும் கொண்டவர் என்றும், சுமார் 40 வயதுடையவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர்கள் பற்றிய தகவலகள் தெரிந்தால் 071 8591753, 071 8591770, 077 3291500 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டுதகவல்வழங்குமாறு பொலிஸ தலைமையகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ-12)


**FRENCH MOVIES – JAFFNA**
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
**THE SILENT WORLD**
Louis Malle's movie with Jacques Yves Cousteau on deep sea.
(1956, 86 min.)
on Thursday 18 February 2016 at 4.00 p.m
at Alliance Française de Jaffna
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093
English Language. Free entrance.
பிரெஞ்சு வகுப்புகள் ஆரம்பம் 21.02.2016 2.00 pm
(3630)



**SLAS,SLEAS திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்**
உத்தியோகத்தர்களின் வசதி கருதி
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு
7.00 PM - 9.00 PM
இடம் : அறிவாலயம்
பல்கலைக்கழகம் முன்பாக
தொடர்புகளுக்கு - 0778449739
(3631)

மணிவிழா வாழ்த்து
"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக்காருண்யன்"
எனும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு.
E.S.P.நாகரத்தினம்
அவர்கள்
நண்பர்கள் கூட்டம் நவையரு நதியாம்
அன்பர்கள் சேனை அலகில் மலையாம்
கற்றவர் பேரவை கவினுறு கடலாம்
உற்றார் ஊரார் ஊற்றுப் பெருக்காம்
பெற்ற பெருங்கொடி பெருக்கிடு காற்றாம்
மானிடம் போற்றிட வாழியவே
யாழ்.மத்திய கல்லூரி
பாடசாலைச் சமூகம்
(C-3775)



**உருத்திராக்கம் தேவையா?**
இந்தியா, நேபாளத்திலிருந்து தருவிக்கப்பட்ட அதியுயர் தரமான உருத்திராக்க காய்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
1 – 16 முகம்கள் உண்டு
தொடர்பு - சசி :-
077 6845 450
(3627)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**A/L தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான**
**New College of Technology Jaffna**
**2018 A/L வகுப்புக்கள் ஆரம்பம் 20/02/2016 சனிக்கிழமை காலை 9 மணிக்கு**

ஆசிரியர் குழாம்
1.தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்
1. திரு.T.சிவரஜீவ் (B.Sc)
2. திரு.S.கீதகன் (B.Sc)
3. திரு.S.ஜீவகநாதன் (B.Sc)
4. திரு.S. நிசாந்தன் (B.Sc)
5. திரு.N. நயன் (B.Sc)

2.பொறியியில் தொழில்நுட்பம்
1. திரு.S.கீதகன் (B.Sc)
2. திரு.S.ஜீவகநாதன் (B.Sc)
3. உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
திரு.S.நிசாந்தன் (B.Sc-Agro)
4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)
திரு.N. நயன் B.Sc
5. விவசாயம் - திரு.S துபீபன் (B.Sc -Agru)
6. ஊடக தொடர்பாடல் கல்வி - திரு.E.மௌலீசன்

(2016 A/L + Day Class) வகுப்புக்களுக்கான
(Short notes + Paper Class) 27/02/2016
சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆரம்பம்
பொறியியல் தொழில்நுட்பம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான செய்முறை வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்
Address:-No.23, பலாலி வீதி,
பருத்தித்துறை வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.இல.077 447 1444
(3629)

2017 A/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன சனி,ஞாயிறு காலை - 8.00 மணி திங்கள், புதன் மாலை 3.30 மணி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.